வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE ROAD, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 வைகாசி திங்கள் 19-ம் நாள் (2—6—1963) ஞாயிற்றுக்கிழமை முஹறம் 9 | இதழ் 1




# புதிய மந்திரிசபை வந்தும் பூசல் குறையவில்லை

## பதவி கிடைக்காமல் பலருக்கு ஏமாற்றம்

மந்திரிசபை நியமனங்களை ஒருவாறு சமாளித்து விட்ட போதிலும் உதவி மந்திரிப் பதவிகள் வழங்கியதில் அதிருப்திகள் ஏற்பட்டுள்ளன. இதனால் கோஷ்டிச் சண்டைகளும் வலுப் பெற்றுள்ளன. திரு எஸ். டி. பண்டாரநாயக்கா தலைமையில் ஆளும் கட்சிக்குள்ளேயே ஒரு புரட்சிக் குழு ஏற்பட்டுள்ளதெனத் தெரிகிறது.

பௌத்த பிரசாரத்துக்கு ஆட்சியினர் தலைவணங்கியமையினாலேயே ஜனாப் பதியுத்தீன் மஹ்மூத் கல்வி அமைச்சைத் துறக்கவேண்டி நேர்ந்ததாம் திரு. துரையப்பாவையும், ஜனாப் மஜீதையும் உதவி மந்திரியாக்கவும் முயற்சிகள் நடைபெற்றும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

உதவி மந்திரிகள் நியமனத்தில் அரசாங்கக் கட்சிக்குள் பலத்த அபிப்பிராய பேதமும் மனக்கசப்பும் ஏற்பட்டிருப்பதாக நமது அரசியல் நிருபர் தெரிவிக்கிறார். உதவி மந்திரிப் பதவியை எதிர்பார்த்திருந்தவர்களான கம்பஹா பிரதிநிதி திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, மாவனல்ல பிரதிநிதி திரு. வி. ஆர். ரத்னாயக்கா, தேவிநுவர பிரதிநிதி வி. பி. வீரசேகரா, செங்கடகல பிரதிநிதி திரு. செல்டன் ரணராஜா உட்பட அனேகர் அதிருப்தி அடைந்துள்ளனராம்.

மேற்குறிப்பிட்டவர்களும் வேறுபல பிரதிநிதிகளும் சேர்ந்து ஆளும் கட்சிக்குள்ளேயே ஒரு புரட்சி முன்னணியை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிகிறது. இந்தக் குழுவுக்கு திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவே தலைமை தாங்குவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கெஸ்பாவ பிரதிநிதி திரு. சோம வீரசந்திரசிரியும் இக்குழுவினருடன் சேர்ந்துவிட விருப்பதாகக் கருத்து வெளியிட்டுள்ளாராம்.

உதவி மந்திரிகள் நியமனம் செய்யப்பட்ட தினத்தில் (வியாழக்கிழமை) திரு. எஸ். டி. பண்டாரநாயக்க அலரிமாளிகைக்குச் சென்று பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தினராம். அப்போது, சுதந்திரக் கட்சிக்குள் மிகவும் அண்மைக் காலத்துள் சேர்ந்த பலருக்குப் பதவி கொடுத்திருந்தும் தம்போன்றவர்கள் புறக்கணிக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்தாராம். பிரதமர் இந்த ஆட்சேபனைக்குப் பதிலளிக்கையில், தற்போது ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்க்கவும், கட்சிக்கு வெளியே உருவாகும் எதிர்ப்பு இயக்கத்தினை முறியடிக்கவும் வேண்டியே தற்காலிகமாக இந்நியமனங்களைச் செய்ததாகக் கூறினராம்.

## சீனப் படமெடுக்கும் சீனர்கள்?

வடமாகாணத்திலுள்ள சில பகுதிகளில் சீனர்கள் சிலர் சென்று புகைப்படங்கள் பிடிப்பதையும் கடற்கரையோரங்களைச் சினிமாப் படம் பிடிப்பதையும் பற்றி முன்னர் சுதந்திரன் வெளியிட்டிருந்தது. பலதரப்பட்ட சந்தேகங்கள் தோன்றுவதற்கு சீனர்களின் இச்செய்கை இடமளித்தது.

இலங்கையில் வேறு பல பாகங்களுக்கும் சில சீனர்கள் சென்று பலஇடங்களைப் படம் பிடித்து வருவதாக நம்பகமான தகவல்கள் கிட்டியுள்ளன. உல்லாசப் பிரயாணிகள் சிலவேளை

(9-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த பிரசாரத்துக்கு ஆட்சி பணிந்தது

சிங்களம் மட்டும் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்துவதானல், அதி முக்கியமானதும் பொறுப்பு வாய்ந்ததுமான கல்வி மந்திரிப் பதவியை ஒரு சிறுபான்மைஇனத்தவரும், பௌத்த சிங்களவரல்லாதவருமான ஒருவரிடம் ஒப்படைத்தல் கூடாது என்று பௌத்தர்கள் பெரும் கிளர்ச்சிசெய்து வந்ததன் காரணமாகவே ஜனாப் பதியுதீன் மஹ்மூதிடமிருந்து கல்வி அமைச்சு கைமாற்றப்பட்டது என்று தெரியவருகிறது.

பல மாதங்களாக எதிர்பார்க்கப்பட்டுவந்த மந்திரி சபை மாற்றம் நடந்துமுடிந்தது. ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுவந்த பூசல்களையும் வெடிப்புகளையும் சீராக்கவே தான் அண்மையில் அலரி

(8-ம் பக்கம் பார்க்க)

## காட்டிக்கொடுக்கும் கூட்டம்

பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியுடன்மோதி, தமிழ்பேசும் மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள் பலரை ஒன்று கூட்டி ஒரேமுகாம் அமைப்பதில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பெருமுயற்சி எடுத்துவருவதாகத் தெரிகிறது. இவர்கள் அனைவரையும் வேறு பலரையும் ஒன்றாகச் சேர்த்து கொழும்பில் விரைவில் ஒரு மாநாடு நடத்த திரு. பொன்னம்பலம் எண்ணியுள்ளாராம்.

இந்தக்குழுவில் திரு. வி. குமாரசாமி, திரு. எஸ். யூ. எதிர்மனசிங்கம், ஜனாப் எம். எஸ். காரியப்பர் ஆகியோர்சேர்ந்துள்ளனராம். திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமியும், அவருடைய தாளத்துக்கு ஆட்டம்போடும் ஒரு தமிழ்த் தினசரியின் ஆசிரியர்களில் ஒருவரும் இந்தக் குழுவுக்குப் பக்கபலம் தேடி முயற்சிகள் செய்து வருவதாகவும் நம்பகமான செய்திகள் எட்டியுள்ளன.

## தமிழ் பேசும் இளைஞர்களே!

சுதந்திரன் உங்களுக்கான ஓர் அற்புத பரிசுத் திட்டத்தினைத் தயாரித்துள்ளது.

14ம் பக்கத்துக்கு வாருங்கள்!

கொழும்பில்

## மாபெருங்கூட்டம் ஜூன் 5-ம் நாள் நினைவாக

சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தினமாகிய ஜூன் 5-ம் திகதியை தமிழ் மொழி, கலை, கலாச்சார நாளாக அனுஷ்டிப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் கொழும்பு விவேகானந்தா வித்தியாலய மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மா பெரும் கூட்டம் ஒன்று நடைபெறும்.

சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தினமாகிய ஜூன் 5-ம் திகதியை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் கடந்த காலத்தில் கரிநாளாக அனுஷ்டித்து வந்துள்ளனர். இந்த ஆண்டு முதல் அந் நாளை தமிழ் மொழி, கலை, கலாச்சார முன்னேற்றத்திற்கு ஆக்கம் காணும் ஒரு நாளாக அனுஷ்டிப்பதென்று இலங்கைத் தமிழரசுக் கட்சி முடிவுசெய்துள்ளது.

இந்த ஆண்டு ஜூன் 5-ம் திகதியன்று கொழும்பிலும் திருகோணமலையிலும் இரு மாபெருங் கூட்டங்கள் நடைபெறும்.

கொட்டாஞ்சேனை மேட்டுத் தெருவிலுள்ள விவேகானந்தா வித்தியாலய மண்டபத்தில் திரு. மு. திருச்செல்வம் தலைமையில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெறும். தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. மு. இராசமாணிக்கம், டாக்டர் இ. மு. வி. நாகநாதன், திருவாளர்கள் செ. இராசதுரை, அ. அமிர்தலிங்கம், ஜனாப் எம். ஈ. எச். முகமதலி, ஜனாப் மஷூர் மௌலானா ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து உரை நிகழ்த்துவார்கள்.

திருகோணமலையில் இக் கூட்டத்தை பெரிய அளவில் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்கை திருகோணமலைத் தமிழரசுக் கட்சிக் கிளை கவனித்து வருகிறது.




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை 'டொபி' சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

# இலக்கியப் பற்றுள்ளவர்கள் இனியாவது உண்மையை உணரட்டும்

## முற்போக்காளரிடம் நற்போக்கு இலக்கியம் படைக்கும் ஆற்றல் இல்லை

—பண்டிதர் பா. பரசுராமமூர்த்தி—

இலக்கியத்தில் எழுத்தாளருக்கிடையே உள்ளதைப் போன்ற கோஷ்டிப் பூசல்களோ, பிரிவினைகளோ இருக்க வேண்டிய நியாயமில்லை. இலக்கியம் என்ற சொல்லே 'தரமான' சிருஷ்டி இலக்கியத்தையே குறிப்பிடுகிறது. இலக்கியம் என்ற பெயரில் உருவாவனவெல்லாம் நின்று நிலைத்து அமரத்துவம் பெறுவன அல்ல. கால வெள்ளத்தில் பல அள்ளுப்பட்டு, அடிபட்டுப் போய் விடுகின்றன. நிலைத்து நிற்பனவே இலக்கியமாக விளங்குகின்றன. அதனை இலக்கியம் எனலாம், முற்போக்கு இலக்கியம் எனலாம், பிற்போக்கு இலக்கியம் என்று கூடப் பேசலாம். சிறந்த இலக்கிய விமர்சகர்கள் பலர் இலக்கியத்தைப் பரம் பொருளைப் போன்றதென்று கூறி வைத்தார்கள். எப்படிச் 'சர்வவியாபி'யான ஆண்டவன் 'முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையனாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாய்' விளங்குகின்றானோ இலக்கியமும் அவ்வாறு உயிரோடு என்றும் நிலவுகின்றது. இவ்வுண்மை தமிழிலக்கிய வரலாற்றுக்கு மட்டுமன்று, உலகின் எல்லா மொழிகளின் இலக்கிய வரலாறுகளுக்கும் பொருந்தும்.

> முற்போக்கு எழுத்தாளர் தங்கள் அடிப்படைத் தத்துவத்திற்குப் புறம்பான முறையில் இலக்கிய உலகில் செய்து வரும் தில்லு முல்லுக்களை எல்லாம் தொகுத்து 'முற்போக்கு எழுத்தாளரின் உட்போக்கு' என்ற தலைப்பில் 'ஈழவேந்தன்' எழுதியுள்ள கட்டுரை அடுத்த வாரம் இடம் பெறும்.

ஆனால் நமது நாட்டிலே முற்போக்கு இலக்கிய ஜாம்பவான்களாக தம்மைக் கருதிக்கொள்பவருஞ் சரி, ஏனைய பிற நாடுகளிலேயும் இவ்வாறு கருதிக் கொள்பவரும் சரி, இவ்வுண்மையை ஒரு போதும் ஒப்புக்கொள்வதில்லை. ஏனெனில் அவர்களனைவரும் தத்தம் அடிப்படை இலட்சியமாக மார்க்ஸீய அரசியற் கொள்கையைக் கொண்டிருப்பதுதான். உலகின் எந்த நாட்டிலும் முற்போக்கு இலக்கியவாதிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்பவர்கள் பகிரங்கமாகவோ, அந்தரங்கமாகவோ மார்க்ஸீய அரசியல் தத்துவங்களை வளர்க்கவும், இலக்கியத் துறையில் பரவச் செய்யவும் அதிக வேகத்தோடு உழைப்பவர்களாக இருக்கிறார்கள். சர்வ ஆசிய இலக்கிய முயற்சிகளை ஓரளவு தெரிந்தவர்கள் இந்த உண்மையை உணரத் தவறமாட்டார்கள்.

ஆனால் நமது நாட்டிலே சர்வதேசிய இலக்கியப் பரிச்சயம் மிக மிகச் சொற்பமாக நமது எழுத்தாளர்களுக்கு அமைந்துவிட்ட காரணத்தால் முற்போக்கு இலக்கியவாதிகள் பற்றி நம்மவர்கள் தப்பர்த்தம் செய்து கொள்கிறார்கள்!

### முற்போக்கு இலக்கியம் என்றால் என்ன?

'முற்போக்கு இலக்கியம்' என்ற வார்த்தை சர்வ ஆசிய ரீதியில் மார்க்ஸீய, கம்யூனிஸக் கோட்பாடுகளின் அடிப்படையில் 'இலக்கியம்' செய்வதென்பதனை இனங்காட்டுகின்றது. இந்த நாட்டு முற்போக்கு இலக்கியவாதி இந்த அடிப்படையில் மார்க்ஸீய, கம்யூனிஸ அரசியல் செல்வாக்குள்ள எந்த நாட்டிலும், எந்த அரசிலும் செல்வாக்கு, பிரபலம் பெற முடியும். இயல்பான பொருத்தம் அது. ஆனால் 'முற்போக்கு இலக்கியவாதிகளல்லாதவர்கள்' இத்தகைய நாடுகளில் பேரும் புகழும் நீடித்துப் பெறுவதென்பது முயற் கொம்பேயாகும். இந்த அடிப்படை உண்மை நமது நாட்டு முற்போக்கு இலக்கிய கர்த்தாக்களுக்குப் பிறிதாக முடியாது! அவர்கள் புகழ் மாஸ்கோவிலும், பீகிங்கிலும், கியூபாவிலும் 'கொடிகட்டிப்' பறப்பதில் ஆச்சரியமில்லை. இந்த நிலையை வைத்துக் கொண்டு மாத்திரம் 'நமது நாட்டின் ஏனைய எழுத்தாளர்களையெல்லாம் 'பீட்' அடிக்கு மாற்றல் எமக்குண்டு' எனப் 'பீத்திக்' கொள்ளும் முற்போக்கர்களை நினைத்து விஷயமறிந்தவர்கள் நகையாடவே செய்வார்கள்.

இலக்கியத்தில் 'அரசியல் வாடை அடிக்கிறது' என்று

(15-ம் பக்கம் பார்க்க)




முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலுள்ள தலைக்கிடாய்கள் எல்லோருமே கொம்யூனிஸ்டுகள். இது பலரறிந்த உண்மை. அரசியலில் கொம்யூனிஸ்ட்டுகள் செய்யும் திருவிளையாடல்களையும் தகிடுதத்தங்களையும், இலக்கிய உலகில் இந்த 'முற்போக்கு' லேபல் எழுத்தாளர்கள் செய்து வருகின்றார்கள். நன்மை தீமையைப் பற்றியோ, சரி, பிழையைப் பற்றியோ அவர்களுக்கு அக்கறையில்லை. தங்களுடைய கொள்கைகளுக்கு எதிராக இருப்பவர்களை எப்படியாவது அடக்கிவிட வேண்டும் என்பதற்காக அவர்கள் திட்டமிட்டுச் செயலாற்றுவார்கள். எத்தகைய கீழ்த்தரமான செய்கைகள் செய்வதற்கும் அவர்கள் பின்னிற்க மாட்டார்கள்.

நேர்மையும், ஆழமான தமிழறிவும் உடைய ஒருவர் சாகித்திய மண்டலத்தின் உறுப்பினராக இருப்பது, இந்த முற்போக்கு 'அரை வேக்காடு'களுக்குப் பிடிக்கவில்லை. தான் நினைத்தபடி தன் 'தோழர்களை' இலக்கிய 'மேதாவி'களாக ஆக்கிப் பரிசு கொடுக்க முடியவில்லையே என்ற பெருங் கவலை சிங்கப்பூராருக்கு. தனக்கு எதிராக முளைத்த அந்தத் தமிழ்ப் பண்டிதரை விழுத்த வேண்டும் என்று தன் சகாவான 'பெரிய எழுத்தாளருடன்' சேர்ந்து திட்டம் தீட்டினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல ஹோட்டலில் தன் அந்தரங்க நண்பர்களுடன் சேர்ந்து 'குசு குசு' கூட்டம் ஒன்று நடத்தி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலக்கிய விழாவைக் குழப்புவதற்கு ஒழுங்குகள் செய்தார். அவர்களது கைக்கூலிகள் விழாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கற்றோர் சபையில் கல்லாதவன் மௌனமாக இருப்பது நல்லது என்று அறிஞர்கள் எழுதி வைத்திருக்கிறார்

(13-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, நிரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


## கவிதைப் பூங்கா

### சங்கற்பம்

—பாண்டியூரன்—

உற்றாரும் உறவினரும் பக்கம் சூழ
உடைபுதிய பட்டாடை உடுத்தி யின்பம்;
வற்றாத சுவையுண்டி புடைக்க உண்டு
வந்தவரை உபசரித்து மனைவி மக்கள்;
பற்றோடு புத்தாண்டு பருகி விட்டோம்!
பணியேதும் உள்ளத்துப் பதித்துள் ளோமா?
கற்றோரே கன்னியரே தமிழர் மானம்
காத்திடவே சங்கற்பம் கலந்திட் டோமா?

அப்பரொடு மாணிக்கர் அருமைத் தாயு(ம்)
ஆனவரும் அமுதுண்ட பிள்ளை யாரும்;
செப்பியதும் நம்தமிழன் சாறே! ஈசன்
செய்வதறி யாதுமுனி நக்கீரன் முன்
தப்பிடவே மூடியாது தவித்து வெட்கித்
தம்கருணை யீந்தபுகழ் தமிழுக்(கு) உண்டு!
இப்பெரிய தமிழ்ஈழ நாட்டில் வாழ
இவ்வாண்டிற் சங்கற்பம் ஈட்டும் வெற்றி!

மாபெரிய வள்ளுவனின் வாக்கில் தோய்ந்து
மண்ணுலகை ஆளுகிற தமிழ்த்தாய்! மூன்று
காவலரின் பீடத்துக் கன்னியாக்
கவிநடனம் புரிந்திட்ட தமிழ்த்தாய்! சங்கச்
சோலையிலே காதலெனும் சுவைத்தேனுக்(ச்)
சோபனமாய் வாழ்ந்திட்ட தமிழ்த்தாய்! ஈழத்
தாயகத்தில் தன்பெருமை பொங்கி வாழத்
தனித்தமிழே சங்கற்பச் சத்(தி)ய மார்க்கம்!

### இவர்கள் தமிழராம்!

—புரட்சிக் கமால்—

தமிழே: இவர்கள் தமிழராம்—
தமிழ்ப் பேசுகின் றவர்களாம்!
அமிழ்தாம், நீ பழப் பிழிவாம்;
அடையாம், அணங்கிதழ் நீராம்!
இமயத் தடி முன் முளையாம்!
இவர்கள், உன்தவ மநவாம்!
உமிகள்—இவர், சமர்த் தோ வெறும்
ஊழல், விழல் ஊழல்!

மொழித்தாய்; சற்று நீ மொழிவாய்:
மொழிகள் மிகவே நிலத்தில்!
அழித்தே புகழும் இவரில்—
அற்பர் உளரே? தம் பேர்
சுழிக்கப் 'பிறனில் விழைவார்'
செகத்தில், தமிழரில் உயர்ந்த
பழிஞரும் உளரே? பெற்றாய்;
பழி செயப் பழிகளைப் பெற்றாய்!

வள்ளுவன், இளங்கோ, கம்பன்
வான் புகழ் படையலை மொய்த்து;
அள்ளுவர், ஆயிரம் சுவைகள்
ஆய்ந்தவர்; தமிழரைத் தமிழர்
கிள்ளுவர், கிண்டுவர், தமிழால்
கிழித்திடக் கச்சைகள் இறுகித்
துள்ளுவர், ஒருவரை யொருவர்—
தூற்றுதல், செந்தமிழ்த் தொண்டாம்!

### கவிதை நெஞ்சம்

இயல் 5

—யூ. எல். தாவூத்—

மன்னரரா வேமாற்ற முற்ற கவிஞர்
மகளோடு கஜ்னவி நாட்டை விட்டுத்
தன்னுடைய நாயகம் "தூஸ்" வந்தார்
தம்மையே ஏமாற்றி விட்ட மஹ்மூத்
மன்னரில் கவிநூறு வசையாய்ப் பாடி
மாபெரும் "ஷாஹ்நாமா" நூலில் சேர்த்தார்;
தன்னரும் மகளினைத் "தூஸில் விட்டு
"தபுரிஸ்தான்" வேந்தரைக் காணச் சென்றார்.

(தொடரும்)




நா. வடிவேலு, சாவகச்சேரி

கே: இலங்கையில் மலிவான பொருள் என்ன?

ப: மலிவாகக் கிடைத்தது தபால் அட்டைதான். படுபாவிகள் அதன் விலையையுமல்லவா கூட்டிவிட்டார்கள்!

ஃ

எஸ். கே. எஸ். நாதன், வண்ணார்பண்ணை

கே: குயுக்தி மாமா! "எட்டப்பர்" கூட்டத்தோடு, ஒருவராகச் சேர்ந்த "அஹமது" இன்று தன்னை ஆளாக்கி முன்னுக்குக் கொண்டுவந்துவிட்ட எங்கள் தமிழரசுக்கட்சிக்கே சவால் விட ஆயத்தமாயிருப்பதாக, 23-5-63 ஒரு தினசரியில் பார்த்தேன். இதையிட்டுத் தங்கள் கருத்து யாது?

ப: வளர்த்த கடா மார்பில் பாய்கிறது என்று கூற மாட்டேன். யானை தன தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கொண்டது—இன்னும் போட்டுக்கொள்கிறது என்றுதான் கூறுவேன்!

ஃ

தமிழரசு அபிமானி, இராமநாதபுரம்

கே: யாழ். பிரதிநிதி தற்பொழுது என்ன செய்துகொண்டு இருக்கிறார்?

ப: பிரதமர் சிறிமாவிடம் திரு. நடேசனுக்கு முந்திதான் நல்ல பெயர் வாங்கிவிட வேண்டுமென்று ஆளாய்ப் பறக்கிறாராம்.

ஃ

க. ஐயாகண்ணு, கொழும்பு-1

கே: இ. தொ. கா. தலைவர் திரு. தொண்டமான் இரண்டு மாதங்களுக்கு முன் (நுவரெலியா) ராகலைப் பகுதிக்குப் போய்த் தோட்டங்களில் சங்கத்தின் நிலையைப் பார்த்துவிட்டு ராகலையிலுள்ள இ. தொ. கா. ஆபிசை இழுத்து மூடிவிடுங்கள் என்று கோபமாகச் சொல்லிவிட்டு வந்ததாக அங்குள்ளவர் சொல்கிறார்களே! ஏன் அப்படி அவர் சொல்ல வேண்டும்?

ப: இ. தொ. கா. வின் "அமோக வளர்ச்சி"யைக் கண்டு இனி அதற்கு 'ஆபீசே' தேவையில்லை என்று அவர் எண்ணியிருக்கக்கூடும்.

'அரங்கரசன்', கொக்குவில்

கே: தபால் அட்டை விலை கூடிவிட்டதால் உங்கள் வேலை காலியாகும் என எனது சோதிட நண்பர் என்னை மிரட்டுகின்றாரே?

ப: தபால் அட்டை விலை கூடியதால் என்னிடம் வந்து குவியும் கேள்விகளின் தொகை குறையுமென்று எண்ணி மகிழ்ந்தேன். என் எண்ணத்தில் மண் விழுந்து விட்டதே!

கே: சிலரின் பொழுதுபோக்கு தமிழரசுக் கட்சியைத தாக்குவதிலே அமைகின்றதே, இவர்கள் இதனால் பெறும் நன்மைகள் என்ன?

ப: ஆட்சியாளர் வீசும் எலும்புத் துண்டையாவது கடிக்கலாமல்லவா?

ஃ

தா. தங்கவடிவேலு, அட்டன்

கே: நியமன அங்கத்தவர் திரு. தொண்டமான் அடுத்த பாராளுமன்றத்தில் வரவு—செலவு வாக்கெடுப்பில் எதிர்க் கட்சிகள் சார்பில் வாக்களிப்பாரென சில இ. தொ. கா. நண்பர்கள் கூறுகிறார்கள். நடக்குமா?

ப: நடக்காது. காரணம் அப்படி வாக்களித்து அரசாங்கம் கவிழ்ந்துவிட்டால் அவர் பதவி பறி போய்விடுமே!

ஃ

'சபா' முல்லைத்தீவு

கே: இலங்கையின் சர்வாதிகாரப், பதவிக்குப் போட்டி போடுகிறார்களே!

ப: ஆம், போட்டியிலிருந்து பிரதமர் விலகிக் கொண்டாராம். அவருக்கு வேண்டியசிலர் இப்பொழுது போட்டியிடுகின்றனர்.

ஃ

சி. யோகேஸ்வரி, ஆலி-எல

கே: ஒருவன் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்த பின் வேறொரு பெண்ணை ஏன் காதலிக்கிறான்?

ப: கலியாணத்துக்கு ஒன்று—காதலிக்க மற்றொன்று.

கே: செனட்டர் சு. நடேசனுடன் சிறிமா மொழிப் பிரச்சினையையிட்டுப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதால் சமஷ்டிக்காரருக்குப் பெரும் தலையிடி ஏற்பட்டிருப்பதாக ஒரு பத்திரிகை எழுதுகிறதே, இது உண்மைதானா?

ப: தலையாவது? இடியாவது? நேரடி நடவடிக்கையில் இறங்குவோம் என்று தமிழரசுக்கட்சி போர் முழக்கம் செய்த பிறகல்லவா சம்பந்தமற்ற மற்றொருவருடனாவது பிரதமர் பேச முன் வந்திருக்கிறார்!

ஃ

ரவுப்டீன் வஸீர் சூடீன், அம்பாந்தோட்டை

காதல் என்றால் என்ன? திருமணம் என்றால் என்ன?

ப: காதல் என்றால் உள்ளம் இனிக்கும். திருமணம் என்றால் அடி வயிறு கனக்கும்.

---

**திருவாளர்**
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
**கொழும்பு-12.**

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

---

எஸ். கே. சாமி, வரணி

கே: குயுக்தியாரே!உம்முடைய வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் கூறும்?

ப: பிறந்து, வளர்ந்து, உமது கேள்விக்குப் பதில் கூறிக் கொண்டிருக்கிறேன்.

கே: உங்கள் தொழில் என்ன?

ப: உதவாக்கரை அசட்டுக் கேள்விகளைத் தூக்கிக் குப்பைக்கூடையில் எறிவது!

ஃ

கு. சரவணன், கொழும்பு-13

கே: சமஷ்டி என்பதைத் தமிழ்க் காங்கிரஸ்காரர்கள் 'சமட்டி' என்கிறார்களே! அப்படியானால் அவர்கள் தங்கள் தலைவர் ஜி. ஜி. யை எப்படி அழைக்கவேண்டும்?

ப: 'ஜீ ஜீ' என்று!

ஃ

க. இரத்தினசிங்கம், பரந்தன்

கே: சில பெண்கள் ஆடவர்களுடன் பேசும்போது தலை குனிந்தபடியும், பெரு விரல்களால் நிலத்தைக் கீறியபடியும் பேசிக்கொள்கிறார்களே காரணம் என்ன?

ப: தங்களிடம் பேசும் ஆடவர்களின் தலைவிதியை நிலத்தில் கால் விரலால் எழுதிக்காட்டுகிறார்கள். தலை குனிந்து பேசுவதின் பொருள் தங்கள் பேச்சைக் கேட்டால் தலைகுனிய வேண்டி வரும் என்பதே.

கே: வெளிப்பூச்சு நாகரிகம் என்றால் என்ன?

ப: காட்டிக் கொடுக்கும் கயமையை மறைக்க தேசபக்த வேடம் போடுவதுதான் வெளிப்பூச்சு நாகரிகம்.

ஃ

க. பரமநாதன், மருதானை

கே: நீங்கள் கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றம் நடத்திய கருத்தரங்கில், முற்போக்கு எழுத்தாளரின் ஒற்றுமையைக் கண்டீர்களா?

ப: கண்டேன்… கண்டேன் காலித்தனத்தை அவர்கள் தங்களை முற்போக்காளர் என்று கூறிக் கொள்ளவே வெட்கப்பட வேண்டும். பெரிய கறுப்புத் துணியால் முக்காடு போட்டுக் கொண்டுதான் இனி அவர்கள் தெருவில் நடமாட முடியும்.

ஃ

எஸ். கே. சண்முகநாதன், வண்ணார்பண்ணை

கே: சில நாட்களுக்கு முன், கொழும்பில் 'அ. இ. ஆணைப் பந்தியினர்' ஓர் மாதர் சங்கத்தைத் தொடக்கியுள்ளார்களே? அதன் தலைவர் பேசிய பேச்சைப் பார்த்தால் குறித்த சங்கம் தொடர்ந்து செயல்படுமா என்பது அவருக்கே சந்தேகம் போல் தெரிகிறது…இதையிட்டுத் தங்கள் கருத்து?

ப: அவர் சந்தேகம் சரிதான். சங்கம் தூங்குகிறது கொழும்பு—7 ல்.

ஃ

மு. சின்னத்துரை, பளை

கே: தற்பொழுதுள்ள நிலையில் 'பாராளுமன்றம்' கலைக்கப்பட்டுப் புதுத் தேர்தல் நடைபெற்றால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலை என்னவாக இருக்கும்?

ப: தமிழரசுக் கட்சி வளரும் கட்சியல்லவா? எனவே அதற்கு இரண்டு டசன் ஆசனங்களில் அமர்ந்து கொள்வது அப்படியொன்றும் சிரமமல்ல.

ஃ

எம். கே. தம்பி, கற்கையூரான்

கே: குயுக்தியாரே! உங்களை நிதி மந்திரியாக்கினால் எத்தனை ஆண்டுத் திட்டத்தில் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்துக் கட்டுவீர்?

ப: வெறும் நிதி மந்திரியாக்கி என்னய்யா செய்வது? பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க மக்களை ஒன்று படுத்த வேண்டாமா? மக்களை ஒன்றுபடுத்த மொழிப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டாமா?

கே: பெண்களின் உள்ளத்தைச் சலவைக் கல் போல எண்ணுபவர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அந்தக் கல் மீது நிச்சயம் வழுக்கி விழுந்துவிடுவார்கள்.

கே: காதல் காதல் என்று சாதலை மேற்கொள்கிறார்களே! சாதலின் பின்பாகுதல் காதல் கிட்டுதா?

ப: எமனுலகில் இருவரும் தம் விருப்பப்படி தடையின்றிக் காதல் செய்யலாமல்லவா?

---

நகைச்சுவைக் கட்டுரை

# முன்னணிகள் பலவிதம்!

**—மாஸ்டர் சிவலிங்கம்—**

(இந்த நாட்களில் தினசரிகளைப் புரட்டினால் அந்த முன்னணி உதயம், இந்த முன்னணி உருவாக்கப்பட்டது என்பன போன்ற செய்திகள் சர்வசாதாரணமாக இடம்பெறுவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இலை மறைகாய் போல உள்ள சில முன்னணிகளைப் பற்றி உங்களுக்கு அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.)

### அறிக்கை முன்னணி

அடிக்கடி எதைப் பற்றியாவது எந்தப் பத்திரிகைக்காவது அறிக்கைவிடத் தவறாது இந்த முன்னணி. அறிக்கை விடுவதைத் தவிர உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் இந்த முன்னணிக்குக் கிடையவே கிடையாது.

### கும்பகர்ண முன்னணி

அறிக்கை விடுவதிலே ...டச் சில முன்னணிகள் ...ண்டிற்கு ஒரு தடவை ...ரையாவது-எந்தக் கட்சி ...யாவது சாரசாரமாகத் ... அறிக்கை விடுவ... திருப்தி அடைந்து ...றன. மீண்டும் அத்த... ...ன்னணிகளின் அறிக் ...அடுத்த ஆண்டுதான் ...ர்க்க முடியும். அதுவரை அப்பாடா என்று குறட்டைத் தூக்கம் போட ஆரம்பித்துவிடும்.

### சாம்பார் முன்னணி

பலதரப்பட்ட வேறுபட்ட குறிக்கோளையுடைய சில செல்வாக்கிழந்த நபர்கள்-உதிரிகள் ஒன்றாக இணைந்து சாம்பார் முன்னணி உருவாகுகின்றது. தனக்கு மூக்குப் போனாலும், எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்கவேண்டும் என்பதே இவர்களின் முக்கிய குறிக்கோள்.

### முட்டுக்கட்டை முன்னணி

வைக்கற்பட்டறை நாய் என்பார்களே, தானும் தின்னமாட்டாது, மாட்டையும் தின்னவிடாது. யாராவது எதையாவது செய்ய முற்பட்டால் வரிந்து கட்டிக் கொண்டு முட்டுக்கட்டை போட ஆரம்பித்துவிடும் இந்த முன்னணி.

### குசுகுசு முன்னணி

பொது மக்களின் கண்களில் அகப்படாது எங்காவது அந்தரங்கமான இடங்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பிரமுகர்கள், (தங்களைத் தாங்களே பிரமுகர்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள்) அர்த்தமில்லாது அடிக்கடி கூடிக் குசுகுசுத்துக் கலைவார்கள். இந்த முன்னணிப் பிரமுகர்கள் காட்டிக்கொடுத்தல், பந்தம் பிடித்தல் போன்ற கலைகளில் மிக வல்லவர்களாக இருப்பார்கள்.


### விநோத முன்னணி

இந்த முன்னணி மிகவும் அதி அற்புதம் வாய்ந்தது. இந்த முன்னணியின் தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு, அங்கத்தவர்கள் எல்லாம் ஒரேயொரு நபர்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### தேர்தல் முன்னணி

மாரி காலத்தில் முளைத்துக் கோடை காலத்தில் மறைந்து போகும் காளானைப் போல, பொது மக்களால் பின்னணிக்குத் தள்ளப்பட்டவர்கள் சிலர் தேர்தல் காலத்தில் முன்னணியை உருவாக்குவார்கள். அம்முன்னணி முக்கியஸ்தர்கள் கட்சி விட்டுக் கட்சி தாவிக் கடைசியில் ஆளும் கட்சிக்கு வால்பிடிப்பவர்களாகவே இருப்பார்கள். தேர்தல் முடிந்ததும் அம் முன்னணியும் முடிந்துவிடும். அடுத்த தேர்தலுக்குத்தான் மீண்டும் அம்முன்னணி தலைகாட்டும்.


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்,
14, டாம் வீதி, கொழும்பு-12.

# காடு வெட்டுவோம் கழனி சமைப்போம்

பதினொராவது

## திருக்குறள் மாநாடு வவுனியாவில் நடைபெறும்

—o—

### பன்மொழிப் புலவரும் கலந்து கொள்வார்

வவுனியாவில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்க ஆதரவில் நடைபெறும் தமிழ்மறைக் கழகத்தில் பதினொராவது திருக்குறள் மாநாட்டிற் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றுதற்குப் பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாத்துரைப்பிள்ளை அவர்கள் இலங்கைக்கு வருகிறார்கள் என்று அறியப்படுகிறது.

ஜூன் 6, 7, 8-ஆம் நாள்களில் நடைபெறும் இம் மாநாட்டில் ஊர்வலம், உரை அரங்கு, கருத்தரங்கு, இசை அரங்கு, நாடக நடன அரங்கு முதலியன இடம் பெறுகின்றன.

#### கவி அரங்கு

6—6—63 வியாழக்கிழமை காலை 8-00 மணிக்குத் திருக்குறள் சுவடி ஊர்வலத்துடன் மாநாடு தொடங்கும். காலை நிகழ்ச்சிகள் வவுனியா நகர மண்டபத்தில் தமிழ் மறைக் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும். மாநாட்டை வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. சிவசிதம்பரம் தொடக்கி வைப்பார். சு. இ. இ. சங்கத் தலைவர் திரு. சதாசிறீனிவாசன் வரவேற்புரை நிகழ்த்துவார். அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வுப் பரிசில்களைத் திரு. ச. பகவதாஸ் அவர்கள் வழங்குவார்.

"வள்ளுவரும் சமூகக் கொடுமைகளும்" எனும் பொருள் பற்றிய கவியரங்கில் திருவாளர்கள் தில்லைச்சிவன், அல்வாயூர் மு செல்லையா, இ. நாகராசன், நா. ஆறுமுகம், வன்னியூர் கவிராயர், இ. அம்பிகைபாகன், செ. கதிரேசபிள்ளை, மகாகவி, விடிவெள்ளி முதலானோர் கலந்து கொள்வர்.

#### உரை அரங்கு

வியாழக்கிழமை மாலை நிகழ்ச்சிகள் வவுனியாத் தமிழ் மகாவித்தியாலயத்தில் வவுனியா நகரசபைத் தலைவர் திரு. ச. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் ஆ. கந்தையா க. மகேசன், பண்டிதர் செ. துரைசிங்கம், பண்டிதர் க. நாகலிங்கம், பண்டிதர் எம். ஏசு. கந்தையா, பண்டிதர் செ. சிவலிங்கம் முதலானோர் உரைவிருந்தளிப்பர். செல்வி லீலாவதி கந்தையா இசைவிருந்தளிப்பார்.'

#### கருத்தரங்கு

7-6-63 வெள்ளிக்கிழமை மாலை நிகழ்ச்சிகள் நிருவாக பொறியியலாளர் திரு. இ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் இரா. சிவலிங்கம், தமிழ்ச் செல்வன் கு. வி. செல்வத் துரை என்போர் உரை நிகழ்த்துவர். திருவள்ளுவர் "வைதிகவாதியா புரட்சிவாதியா" எனும் பொருள் பற்றிய கருத்தரங்கில் பண்டிதர் மு. ஆறுமுகன், வித்துவான நீ. மே. யோ. வேதநாயகம், திருவாளர்கள் கனக-செந்திநாதன், இ. மகாதேவன், புதுமைலோலன், நாவேந்தன், தமிழோவியன், ஈழத்துச் சிவானந்தன் சி. சரவணபவன், ஈழவேந்தன், செல்விகள் புஷ்பா செல்வநாயகம், சற்சொரூபவதி நாதன் முதலானோர் பங்கு கொள்வர். முள்ளியவளை இயலிசை நாடகக் கலாமன்றத்தினர் நாடக விருந்து நல்குவர்.

#### நடன நாடக அரங்கு

8-6-63 சனிக்கிழமை மாலை நிகழ்ச்சிகள் வவுனியா மாவட்டக் கல்வி உத்தியோகத்தர் திரு. எஸ். தணிகாசலம் அவர்கள் தலைமையில் நடைபெறும். வித்துவான் இ. சி. சோதிநாதன், ஆசிரியர் எஸ். அமிர்தநாதன் என்போர் சொற்பொழிவாற்றுவார்கள். வவுனியா மாவட்டப் பாடசாலைகளின் நடன நிகழ்ச்சிகளும் நாடகங்களும் நிகழும். சு. இ. இ. சங்கச் செயலாளர் திரு. க. லோகசிங்கம் அவர்களின் நன்றி உரையுடன் மாநாடு நிறைவெய்தும்.

#### பொருட்காட்சி

வவுனியா தெற்குத் தமிழ்ப் பாகக் கமத்தொழில் கலாசாரப் பொருட்காட்சியும் மாநாட்டுடன் இணைந்து நடைபெறும்.

## முடிவுரையும் பாராட்டுகளும்

(நமது சுற்று நிருபர்)

துப்பாக்கித் தோழனைத் துணையாக்க் கொண்டு அடர்ந்த காடுகளுக்குள் புகுந்து உலாவும் பயங்கர விளையாட்டைப் பொழுது போக்காகக் கொண்டவர் நமது கல்குடா பிரதிநிதி திரு. மாணிக்கவாசகர். தமது வாலிபப் பருவத்தின் பெரும் பகுதியைக் காடுகளுக்குள்ளேயே அவர் செலவிடுவதுண்டு. அந்தக் காலத்திலேதான் இத்தகைய குளங்களைக் காணக்கூடிய வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டதாம். அவற்றிற்குப் புத்துயிரளிக்கக்கூடிய வகையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி உதவி புரிந்துள்ளது.

ஃ

காலை உணவை உட்கொண்ட கரவைக் குளத்தடியிலிருந்து புதிய் பாதையில் அரை மைல் சென்றதும் கிழக்குப் பக்கமாக ஓர் ஒற்றையடிப் பாதை கானகத்துள் செல்கிறது. புதர்கள் நிறைந்த இருள் சூழ்ந்த அந்த வனத்துள் மூன்று மைல் சென்றால் பிரம்மாண்டமான அணைக்கட்டுடன் கூடிய மெய்யன் கல்லுக் குளத்தைக் காண முடிகிறது. அணைக்கட்டின் உயரமே 50 அடி. திரு. மாணிக்கவாசகர் 1961ம் ஆண்டு தடுப்புக் காவலிலிருக்கும்போதே இக் குளத்தின் இருப்பிடத்தை நீர்ப்பாசன இலாகா அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியிருந்தாராம். தடுப்புக்காவலால் திரும்பியதும், அப்போது செங்கலடி நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. கதிர்காமர் கோறளைப்பற்று பிரிவுக்காரியாதிகாரியாகவிருந்த திரு. கந்தையா ஆகியோருடன் சென்று இக் குளத்தினைக் காண்பித்துள்ளார். மிகப் பழங்காலத்தில் உருவாக்கப்பட்டு கால வெள்ளத்தால் நிர்மூலமாக்கப்பட்ட இக்குளத்தின் சிறப்பினை உணர்ந்த அதிகாரிகள் அரசாங்கத்தின் துணையுடன் ஆராய்ச்சியில் இறங்கினர்.

மெய்யன் கல்லுக் குளத்தை இன்று அரசாங்க நில அளவைக்காரர்கள் அளவெடுத்து, அதனால் ஏற்படக்கூடிய பலனையும் கணக்கிட்டு வருகின்றனர். மட்டக்களப்புப் பகுதியிலுள்ள மிகப்பெரிய குளங்களான உன்னிச்சை, உறுகாமம், வாகனேரி ஆகிய குளங்களின் விஸ்திரணத்துடன் ஒப்பிடக்கூடியது இக்குளம். ஏறத்தாழ 5000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்துக்கு இலகுவாகப் பாசனமளிக்கத்தக்க வசதியுடையது இக்குளம்.

மெய்யன் கல்லுக் குளத்தைப் பற்றிய விபரம் ஏதுவும் அரசாங்க நில அளவைப் படங்களில் கிடையாது. கடந்த வருடம் தான் இதன் படம் படங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஃ

அம்பு வில்லுக் குளத்தையும் சின்னக் கைலாசத்தையுமிட்டு முன்புகூறியிருந்தோம். இதே அம்பு வில்லுக் குளத்தை அண்டியே மாயபுரம் இருக்கிறது இம்மாயபுரத்தில் சிற்றாண்டி, சந்திவெளி, கோரகல்லிமடு, கிரான் ஆகிய பகுதி மக்கள் விவசாயம் செய்து பலன் பெற்று வருகின்றனர்.

கல்குடாத் தொகுதியில் விவசாயத்துறை மேம்பாட்டுக்காக திரு. மாணிக்கவாசகர். அரிய பல சேவைகள் செய்திருக்கிறார். இதுவரை நாம் குறிப்பிட்டவற்றை விட கல்குடாத் தொகுதியின் ஏனைய பகுதிகளிலும் பல நீர்வளச் சிறப்புக்கள் பெருகிவருவதைக் காண முடிகிறது.

மட்டக்களப்பிலிருந்து கரையோரமாகத் திருமலை செல்லும் பாதையில் கதிரவெளி என்ற கிராமம் உண்டு. இக்கிராமத்திலிருந்து 12மைல் மேற்கே ஒரு புதிய பாதை அமைக்கப்பட்டுள்ளது. இங்குதான் கட்டுமுறிப்புக் குளத்தைக் காணலாம். இக் குளத்தினைத் திருத்தும் பணியில் 12 இராட்சத இயந்திரங்கள் ஈடுபட்டுள்ளன. கடந்த மாதம் இக் குளத்தின் புனருந்தாரண வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. 1965ல் நீர் சேமிப்பு ஆரம்பமாகும். முதலாவது படியில் 2175 ஏக்கர் விஸ்தீரணத்தில் இந்தக் குளத்தில் நீர் தேக்கப்படும். இரண்டாவது படியில் 4250 ஏக்கர் நீர் சேமிக்கமுடியும். மொத்தம் 2000 ஏக்கருக்கு மேல் இருபோகமும் பாசன வசதி அளிக்கக் கூடியது இக்குளம்.

கதிரவெளிக்கு இப்பாலுள்ள பன்னிச்சங்கேணிக் கருகாமையில் மதுரங்கேணி என்ற குளமும், மாங்கேணிக் கருகில் கிரிமிச்சை ஓடைக் குளமும் பல லட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலத்துக்கு நீர் வளத்தை அள்ளி வழங்கக்கூடிய இக்குளங்களில் மீண்டும் மனித குலத்தை வேரறுக்கவல்ல, கிருமிகள் வளராமலிருக்க வளர்ந்துவரும் விஞ்ஞானம் உதவி புரியுமாக. மீண்டும் இந்நாட்டில் பாலும் பழமும் பெருக்கெடுத்தோட இயற்கை அருள் சுரக்கும் என்ற நம்பிக்கையுடன் காடு வெட்டிவிட்டோம்—கழனிகளும், நம்பிக்கையுடன் சமைத்துவிட்டோம்.

(முற்றும்)

### பாராட்டுகள் சில

திரு. மாணிக்கவாசகரின் சேவையைப் பாராட்டிப் பல கடிதங்கள் வந்த வண்ணமேயுள்ளன. அவற்றில் சிலவற்றை மட்டும் கீழே சுருக்கித் தந்துள்ளோம்:—

#### காணி அபிவிருத்தி மந்திரி

............நீர்வளத்தை ஏற்படுத்தி நிலவளத்தைப் பெருக்க வைக்க அரசாங்கத்தை ஊக்குவிக்கும் திரு. மாணிக்கவாசகருக்கு கனம் சி. பி. டி. சில்வா தனது மந்திரிப் பதவியைத் தானம் செய்தால் நாட்டுக்குப் பலன் கிடைக்கும்......

சி. மா.
வசாவிளான்.

* * *

......கல்குடாப் பிரதிநிதி பேசாத பிரதிநிதியாகத் தானிருக்க முடியுமென நம்பியிருந்தோம். எதையெதையோ பேசியும் ஏனைய பிரதிநிதிகள் எதுவித பயன் காண முடியாத இந்த ஆட்சியிடமிருந்து பேசாமலிருந்தே காரியத்தைச் சாதித்துவிட்டாரே...வாழ்க அவர் தொண்டு......

வை. செபஸ்தியன்
வவுனியா

* * *

.........நாட்டுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை வகுத்துச் சேவைபுரியும் திரு. மாணிக்கவாசகரைத் தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல இலங்கை மக்கள் அனைவருமே பாராட்ட வேண்டிய கடமைப்பாடுடையவர்களாவார்கள்......

கா. காசிப்பிள்ளை
வெள்ளவத்தை

* * *

.........எதுவுமே செய்ய லாயக்கற்ற பிரதிநிதி என்று இதுவரை எண்ணி தப்பான எடை போட்டுவிட்டோம். திரு. மாணிக்கவாசகரின் உண்மையான சொரூபத்தை வெளிப்படுத்திய சுதந்திரன் சுற்று நிருபருக்கு நன்றி......

எம் எம். யூ. சாஹிபு
கம்பளை


## சிங்களம் படியாமல் பதவி துறந்தார்

சுகாதார மந்திரியின் மெய்ப் பாதுகாவலராய்ப் பணியாற்றிய திரு. கிங்ஸ்லி சில்வெஸ்டர் மொழிப் பிரச்சினை காரணமாக அப்பதவியிலிருந்து இளைப்பாறியுள்ளார். இவர் சில காலம் இரகசிய பொலீஸ் இலாகாவிலும் கடமையாற்றியுள்ளார். இப்பொழுது கொழும்பு 'பிஞன்ஸ் அன்ட் கரன்ஸி கொம்பனி லிமிட்டெட்டில்' உத்தியோக முகாமையாளராகப் பதிவு ஏற்றுள்ளார்கள். இவர் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவர்.

### இந்தி போராட்டம்

தி. மு. க. கூடுகிறது

இந்தித் திணிப்பு, பிரிவினைத் தடைச் சட்டம் ஆகியவை பற்றி ஆலோசித்து முடிவு செய்ய இந்திய தி. மு. கழகப் பொதுக் குழு, செய[illegible] குழு இம் மாதம் எட்டா[illegible] திகதி கூடுகின்றன. இக் [illegible]டத்தில் இந்தி எதி[illegible] போராட்ட திட்டம் [illegible]றிய முடிவான தீர்மா[illegible] போராட்ட திகதியு[illegible] செய்யப்படும் என்[illegible]யப்படுகிறது.


பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி 3597—6522

# தவித்து நிற்கும் மலையக மக்களுக்கு தமிழரசே கைகொடுக்கும்

—ஞா. பெ. அல்பிறெட், டிக்கோயா—

காடும் மலையும் மேடும் பள்ளமுமாக விளங்கிய கானகத்தைக் கெடுத்து, இரு நிதியும் பெருவாழ்வும் கொடுக்கும் கற்பகச் சோலையாக, இந்த இலங்காபுரியை இலங்கச் செய்த ஞானம் மிகு தமிழன், இன்று மானம் இழந்து, மதிப்பிழந்து, ஊனம் அழிந்து, உருக்குலைந்து, தாழ்வுற்று, வாழ்வற்றுத் தவியாய்த் தவிக்கின்ருன்.

வறுமையிலே வாடி, சிறுமையுற்றுச் சீர்கெட்டுச் சிறப்பிழக்கவேண்டிய இந்த நாட்டை, பெருமையுற்று பெருவாழ்வு வாழ்வதற்கு வழி வகுத்துவைத்த பெருங்குடித் தமிழ் மகன், இன்று தனது வாழ்வையிழந்து, தர்ம சங்கடத்திற் சிக்கிச் சீரழிகிருன்.

கொட்டும் மழை காற்றிலும், கொடு கொடுக்கும் கூதலிலும், சுட்டுப் பொசுக்கும் வெயிலிலும், அட்டை அமலைக் கடியிலும், பாம்பு தேள் விடத்திலும், பட்டு மடிந்தும், பண்படுத்தி இந்த நாட்டைப் பொன் கொழிக்கச் செய்த பாட்டாளி மக்கள்—தோட்டத் தொழிலாளிகள், ஈழத்தை வாழ வைத்த தெய்வங்கள் வாழ்விழப்பதா?

இனியும் இந்த இழிநிலை நீடிக்க வேண்டாம்.

அன்று அனுதரவான நிலையில் அவஸ்தைப்பட்ட தோட்டத் தொழிலாளிகள், 'அபயம், அபயம்' என்று அடைக்கலந் தேடினுர்கள் 'ஆஷாடபூதி'களிடம். கருணையில்லாத கயவர்கள் பொருளுக்கும் பதவிக்கும் ஆசை கொண்டு, காட்டிக் கொடுத்து விட்டார்கள் தோட்டத்து மக்களை.

## காங்கிரஸ் கலைந்தது

காந்தியின் பெயரைச் சொல்லிக் காங்கிரஸ் கட்சியை அமைத்தவர்கள், தமக்கு விடுதலை அளிக்க விரைந்தெழுவார்கள் என்று தான் கடந்த பல வருடங்களாகக் காத்திருந்தனர், பத்து இலட்சம் பாட்டாளி மக்களும். நடந்த கதைதான் நாடறியுமே! கலையத் தொடங்கியது காங்கிரஸ் வாதிகளின் வெளி வேஷம். தலைமைப் பதவியிலே 'நீயா' 'நானு' என்ற தர்க்கம் தலையெடுத்தது. 'காந்திக் காங்கிரஸ்' பிளவுபட்டு, 'தொண்டைமான் காங்கிரஸ்' 'அசிஸ் காங்கிரஸ்' என்று துண்டாடப்பட்டது. தலைவர்களிடத்தே, பதவிப்பித்துத் தலையைச் சுற்றியதே, தவிர பாட்டாளி மக்களின் மீது நாட்டம் செலுத்தப்படவில்லை. பயன்—

தோட்டத்து மக்களிடத்தே ஒற்றுமை குறைந்தது. பலங்குறைந்த வேளையில் பார்த்துக் கொண்டா இருப்பார்கள் பகைவர்கள்? வீடு இரண்டுபட்டது. கொண்டாடினுன் கூத்தாடி. படிப்படியாக மலையக மக்களின் உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டன. படு பாதாளத்தில், இருள் சூழ்ந்த இடத்தில் எடுத்தெறியப்பட்டார்கள் மலை நாட்டார்கள்.

## உரிமைகள் பறிபோயின

வாக்குரிமை, குடியுரிமை, மொழியுரிமை, கல்வியுரிமை உரிமைகள் ஒவ்வொன்ருகப் பறிக்கப்படும் போது, 'பத்து இலட்சம் மக்களின் பாதுகாவலர் நாமே!' என்று தம்மைத் தாமே வர்ணித்துக் கொள்பவர்கள் வாளாவிருந்ததேன்?

'செங்கொடி ஏந்திச் சிறப்போடு உழைக்கிரேும்' என்பார்களே, எங்கு போயிருந்தார்கள் இவர்களெல்லாம்? மலைநாட்டு மக்களின் நலனுக்காக உண்மையோடு உழைக்கும் தொழிலாளத் தலைவர்கள் இவர்கள்தான் என்ருல், அவர்களுக்கெதிராக வந்துகொண்டிருக்கும் சட்டதிட்டங்கள் அனைத்தையும் ஏன் உறுதியோடு எதிர்க்கக் கூடாது? தூங்கிக் கொண்டா இருந்தனர் இந்தத் தொழிற் சங்கவாதிகள்?

சந்தா வசூல் பண்ணி, சொந்த வாழ்வை வளமாக்க




ஒன்றுமே இல்லாமல், எல்லாமே எடுக்கப்பட்டன. வாய்ப்பூட்டு இடப்பட்டு, வதைக்கப்படும் வர்க்கத்தினருக்கு 'ஏன்'? என்று கேட்கத் தானும் உரிமை கிடையாதே.

'வஞ்சிக்கப்பட்டோம்,' என்ற எண்ணம் இந்த வேளையில் தான் மலைநாட்டாரின் நெஞ்சிலே உதயமாகியது. ஆகவே காங்கிரஸ் கட்சியை விட்டுக் கலையத் தொடங்கினுர்கள். கண்ணீரைத்துடைப்போம் என்று, கபட வார்த்தை கூறியவர்களையெல்லாம் ஏமாற்றப்பட்ட மக்கள் நம்பினுர்கள். ஐக்கிய தேசியக் கட்சி—பிரஜா உரிமையைப் பறித்த கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி—இதர உரிமைகளை மறுக்கும் கட்சி போன்ற உதைக்கும் கால்களையெல்லாம் முத்தமிடத் தொடங்கினுர்கள். எண்ணி, சங்கங்கள் பல அமைத்து, தோட்டத் தொழிலாளிகளின் ஒற்றுமைச் சக்தியைச் சிதைத்து, அவர்களைச் சுரண்டி வாழ முனையும் சதிகாரக் கும்பல்களைக் கண்டு இனியும் ஏமாறமாட்டார்கள் மலையக மக்கள்.

## உதித்து விட்டான் உதயசூரியன்

உயிரைக் கொடுத்தும் உரிமைகளைப் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கோடு வாழ்ந்து மலைநாட்டு மறத் தமிழ் மக்கள், உரிய தலைமை கிட்டாததாற்ருன் தமது உரிமைக் குரல் எட்டாதோ என ஏங்கி இருந்தனர். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஏக உரிமைக் குரலான தமிழரசுக்கட்சி, விலங்கோடு வாழும் மலையக மக்களின் அடிமைத்தளையை உடைத்தெறிய அண்டிவரும் நாள் எப்போதோ என, எதிர்பார்த்திருந்தவர்களின் துயர்களைத் துடைக்கத்தான் உதித்துவிட்டான் உதய சூரியன் மலைநாட்டில்.

இருளகலப் போகின்றது. இன்னல்கள் விலகப்போகின்றன. பதவிக்கும் பவிசுக்கும் பற்றுக்கொள்ளாத, பாட்டாளி மக்களுக்காக உழைக்கக்கூடிய பண்புள்ள, தன்மானமுள்ள தமிழ்த் தலைவர்களைக் கொண்ட தமிழரசுத் தொழிலாளர் கழகம் எம் மத்தியிலும் ஸ்தாபன ரீதியாக இயங்கத் தொடங்கிவிட்டது. பட்டம் பதவியில் மோகங்கொண்டு, பொன்னிலும் பொருளிலும் ஆசை கொண்டு, மலைநாட்டு மக்களைக் காட்டிக்கொடுத்த கயவர்கள், பண்பற்றவர்கள் 'பரிதிகண்ட பனி போல்' பிரிவுற வேண்டிய வேளை மிக நெருங்கிவிட்டது.

அறப்போர் வீரர், அன்பின் பொருருபம், அண்ணல் செல்வா, மறத் தமிழ்த் தீரர், மலைநாட்டு ஊழியர், இரும்பு மனிதர் டாக்டர் நாகநாதன், இவர்கள் தலைமையிலே மலைநாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டால், மறுக்கப்பட்ட உரிமைகள் யாவும் மீண்டும் எடுக்கப்படுவது உறுதியாகும்.

உண்மைக் காந்திக் கட்சி, அண்ணல் செல்வா அவர்களின் தமிழரசுக் கட்சிதான் என்பதை மலையக மக்கள் அனைவரும் தங்கள் மனதில் நன்கு பதித்துக் கொள்ள வேண்டும்.

காந்திய வழிநின்று, அன்பு அஹிம்சை முறை பிறழாது அறப்போர் புரிந்து இழந்த உரிமைகளைப் பெற வேண்டுமேயாளுல், ஈழத்துக் காந்தியின் மூவர்ணக் கொடியின் கீழ் ஒன்றுபட வேண்டும் மலைநாட்டு மக்கள். தவித்து நிற்கும் மக்களுக்கு தமிழரசே தஞ்சமாகும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை இறுதியில் வெற்றி பெறுவது உறுதியாகும்.

## மாரியம்மன் திருவிழாவிலும் பாகுபாடா?

பொகவந்தலா கல்கந்தை தோட்டத்தில் 313 தொழிலாளர்கள் இருக்கிருர்கள். இவர்களில் 100 பேர் வரை இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் சேர்ந்திருக்கிருர்கள். மற்றவர்கள் இ. தொ. காங்கிரஸை சேர்ந்தவர்கள்.

அண்மையில் இத்தோட்டத்தில் மாரியம்மன் திருவிழா நடைபெற்றது. காங்கிரஸ் சங்கத்தைச் சேர்ந்தவர்களே திருவிழாவை முன்னின்று நடாத்தினுர்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் உள்ள தோட்டங்களில் சங்க அடிப்படையில் திருவிழா நடத்தக் கூடாது என்பதே நியதியாகும். இந்த நியதிக்கு மாருக சங்க அடிப்படையிலேயே திருவிழாவை நடாத்தினுர்கள் காங்கிரஸ் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள்.

'கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை திருவிழாவில் கலந்துகொள்ள இடந்தரோம்' என்று பிடிவாதம் செய்தார்கள் அவர்கள். 'கோவிலிலும் உங்களுக்கு இடமில்லை—உங்கள் ஆராதனையையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்' என்ருர்கள்.

'தோட்டத்திற்குச் சொந்தமான பொதுக் கோவிலில் எங்களுக்கு ஏன் இடமில்லை' என்று கிளர்ந்தெழுந்தார்கள் கழகத்தைச் சேர்ந்தவர்கள். சங்க அடிப்படையில் திருவிழா நடாத்த இடந்தரோம் என்று முழங்கினுர்கள் அவர்கள். தகராறு முற்றியது— குழப்பகரமான நிலை உருவாகியது.

கழகத் தொழிலாளர்கள் கழகத் தலைவர் டாக்டர் திரு. இ. மு. வி. நாகநாதன் அவர்களிடம் முறையிட்டனர். டாக்டர் நாகநாதன் தோட்டத் துரையுடன் தொலைபேசிமூலம்தொடர்பு கொண்டார். நிலைமையை விளக்கிக் காட்டினுர். அவரின் நடவடிக்கையின் காரணமாக நிலைமை சீர்பட்டது. திருவிழாவும் நடந்தேறியது.

காலாகாலமாக தொழிற் சங்கம் நடத்திய காங்கிரஸ் தலைவர்கள் தொழிலாளர்களுக்கு அரசியல் அறிவு ஊட்டத் தவறி விட்டனர். எனவேதான் மாரியம்மன் திருவிழாவிலும் தங்களின் அறியாமையைக் காட்டிக் கொள்கிருர்கள் சிலர். இதற்கு சாதாரண தொழிலாளர்களை நாம் குறை கூற முடியாது. அரசியல் அறிவூட்டத் தவறிவிட்ட காங்கிரஸ் தலைவர்களையே குறை கூற வேண்டும்.

## அமிர்தலிங்கம் சென்னை வந்தார்

சீனர்களுடன் நடந்த சண்டையில் கலந்து கொண்ட தமிழ் வீரர் ராஜா அமிர்தலிங்கம் சென்னை வந்து சேர்ந்துள்ளார். இவர் சீனர்களிடம் யுத்த கைதியாகப் பிடிபட்டிருந்தார் என்பது தெரிந்ததே.


# எழிலின் இருப்பிடம் லதா!!!



**லதா அச்சடி கிளேஸ்ட் கொட்டன்!!**

கவர்ச்சி தரும் நிரந்தர பல அழகிய நிறங்களிலும்;
புகழ்ச்சி பெறும் புதிய டிசைன்களிலும்;
உயர்ச்சி மிகு உறுதிப்பாட்டுடனும் உருவானது.

**லதா பொப்ளின்!!**

ஆடவர் தம் சேட் முதலியவற்றிற்கேற்ற அற்புத நிறங்களில் நீண்ட நாட் சேவை புரியும்படி தயாரிக்கப்பட்டது.




**எலைட் சுப்பர்லோன்**

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "வண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:- **குண்டன்மால்ஸ் லிமிட்டெட், கொழும்பு.**

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி.

சில்லறை விற்பனைப் பகுதி: 110 &114, மெயின் வீதி, —Mylads/KL.113/63—

# தமிழியக்கம்

## "தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

### முழு வெற்றி

சித்திரைத் திங்கள் எட்டாம் நாள் ஆரம்பிக்கப்பட்ட எல்லாம்தமிழியக்கம், நல்ல முறையில் நாடெங்கும் பரவி, இயக்கத்தின் நோக்கத்திற்கு முழு வெற்றியைக் கொடுத்துள்ளது. கடந்தவாரம்பூராவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் தங்கள் தமிழியக்கப் பிரசாரத்தை மன்னர் மாவட்டத்தில் நடாத்தியுள்ளார்கள்.

### தமிழியக்க சுற்றுலா

மன்னர் மாவட்டத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களுடன், இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் தமிழ் பிரதேசம் முழுவதும், ஒரு முழுத் தமிழியக்கப் பிரசாரச்சுற்றுலாவை முடித்துள்ளனர். இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் ஆங்காங்கே தமிழியக்கப் பிரசாரத்தை நடாத்தி முடித்த பின்னரும், தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பொது நிலையங்களும் மன்றங்களும் தமிழியக்கத்தை நிலையானதொரு இயக்கமாக்கும் முயற்சியில் முனைந்துள்ளதாக நாம் அறிகிறோம்.

### பொது நிலையங்களுக்கு வேண்டுகோள்

மட்டக்களப்பு--காரைதீவிலிருந்து கிடைத்திருக்கும் ஒரு செய்தி, ஏனைய தமிழ் பிரதேசங்களிலுள்ள பொது இயக்கங்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக உள்ளது. நமது மட்டக்களப்பு நிருபர் தெரிவித்துள்ளதாவது:— காரைதீவில் எல்லாம் தமிழியக்கம் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. சன சமூக நிலையங்கட்கும் மற்றும் பொது ஸ்தாபனங்கட்கும் எல்லாம் தமிழியக்கத்திற்கு ஆதரவு நல்குமாறு டாக்டர் எம். பரசுராமன், திருவாளர்கள்: க. நவரெத்தினம், இ. கனகசபை, கே. கே. ஆறுமுகம், வே. சதாசிவம் ஆகியோர் விடுத்த வேண்டுகோளுக்கு 'தமது முழு ஆதரவும் எல்லாம் தமிழியக்கத்திற்கு உண்டென்றும், இயக்கத்தை வளர்ப்பதற்கு வேண்டிய உதவியை நல்க தாங்கள் எந்நேரமும் தயாராக இருப்பதாக'வும் மாவடிப்பள்ளி, சாய்ந்தமருது, மாளிகாவத்தை, சல்லித்தீவு, நிந்தாவூர் ஆகிய பகுதிகளில் உள்ள பொது நிலையங்கள் கருத்துத் தெரிவித்துள்ளனவாம். இதுபோன்று ஏனைய பகுதிகளிலுமுள்ள பொது நிலையங்கள் தமிழியக்கத்தைப்பரப்பவும், நிலைத்து நிற்கவும் ஆக்கபூர்வமான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

### மக்கள் இயக்கம்

கொழும்பு 'தமிழ் எழுத்தாளர் மன்றம்' நாட்டின் பல பாகங்களிலுமுள்ளவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பிய அஞ்சல் அட்டை நல்ல பயனைக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. வருமானவரித்திணைக்களத்திற்கு இப்பொழுது பெரும்பான்மையான விண்ணப்பப்பத்திரங்களும் கடிதங்களும் தமிழ் மொழியிலேயே அனுப்பப்படுவதாக அறிகிறோம். இதே போன்று ஏனைய அரசாங்கதிணைக்களங்களுக்கும் பெரும் தொகையாக தமிழ்க்கடிதங்கள் வந்து சேருவதாக அறிகிறோம். இவற்றையெல்லாம் பார்க்கையில் எல்லாம் தமிழியக்கம் மக்கள் இயக்கமாகமாறியுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

### தமிழ் நாட்டில்

பாரத நாட்டின் பொது மொழியாக இந்தி திணிக்கப்படுவதை தென்னாட்டு மக்கள் தீவிரமாக எதிர்த்து வருகிறார்கள். இந்த எதிர்ப்பு அணியில் அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, இனத்தின் நலன் விரும்பும் அனைவரும் மிகவும் தீவிரமாகப் பங்கு கொள்கிறார்கள்.

### தமிழைப் பாதுகாக்க ஒரு மாநாடு

தவத்திரு குன்றக்குடி அடிகள் 'தமிழைப் பாதுகாக்க ஒரு மாநாடு' கூட்டும் முயற்சியில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார். தவத்திரு குன்றக்குடி அடிகள் ஒரு மதத் தலைவர் என்றாலும், தமிழுக்கு ஆபத்து என்றதும் தலை கொடுக்க முன் வந்திருக்கிறார். சகல கட்சித் தலைவர்கள், தமிழ் அறிஞர்கள் அனைவரையும் கொண்ட மாநாட்டைக் கூட்டி 'தமிழகத்தின் மொழிச் சிக்கல் குறித்து ஆராயவும், தமிழை உரிய முறையில் பாதுகாத்து வளர்க்கவும்' என்ன வழி வகைகளை மேற் கொள்ளலாம் என்பதை அறிய விரும்புகிறார்.

### இது தவறானது

நமது நாட்டில் இத்தகைய மடாதிபதிகளும், செல்வாக்குப் பெற்ற மதத் தலைவர்களும் இல்லாவிட்டாலும், அரசியலில் நேரடி

(9-ம் பக்கம் பார்க்க)

# மே தின விழாப் புதினங்கள்

இடதுசாரி ஐக்கிய முன்னணியினரின் கூட்டு மேதின விழாவை ஒட்டிய சம்பவங்களை 'செங்கோன்' ஆராய்ந்தார். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெற்ற மேதின விழாக்களையிட்டு இவ்வாரம் ஆராய்வோம்.

யாழ்ப்பாணத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் பல்வேறு தொழிற் சங்கங்களுடன் சேர்ந்து மேதின விழாவை ஏற்பாடு செய்ததும், அதற்குக் கிடைத்த வரவேற்பும் கொம்யூனிஸ்டுகளுக்கும், சமசமாஜிகளுக்கும் வயிற்றெரிச்சலை ஏற்படுத்தியதனால், அவர்களிடமும் ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது போலும்.

ஜின்னா மைதானத்திலும், கோட்டை மைதானத்திலுமாக இரண்டு இடங்களில் நடைபெறவிருந்த விழாக்கள் அரசாங்க எழுது வினைஞர்களின் மே விழா ஏற்பாட்டினைத் தொடர்ந்து ஒரே விழாவாக மாறியது.

இந்த விழாவில் பங்கு கொள்ளப் பல ஊர்களிலிருந்தும் விபரமறியாத பள்ளி மாணவர்களை 15 'மோட்டார் வான்'களில் நிரப்பிக் கொண்டு வந்திருந்தார்கள். ஏராளமான பொருட் செலவில் இந்த மாணவர்களுக்கு சிவப்பு நிறச் சட்டைகள தயாரித்து இலவசமாக வழங்கியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. கூட்டம் முடிந்து திரும்புகையில் மாணவர் படையைக் கொண்டுவர உதவிய மோட்டார் வாகனங்களில் 'பிரமுகர்'கள் ஏறி உட்கார்ந்து கொண்டதனால், மாணவர்கள் தெருக்களில் திரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. இறுதியில் பஸ்களிலே அவர்கள் பிரயாணம் செய்து தத்தமது ஊர்களுக்குப் போய்ச் சேர வேண்டியேற்பட்டதாம்.

### மங்களன்

மட்டக்களப்பில் இதுகால வரை கொம்யூனிஸ்டுகள் தனித்து நடத்திவந்த மே தின விழாக்களிலெல்லாம் குறிப்பிடத்தக்க கூட்டம் இருப்பது வழக்கம். ஆனால் இம்முறை கூட்டு முன்னணி உருவாகி ஐக்கிய மேதினமாக மலர்ந்தும் ஆதரவு கிடைக்கவில்லை. ஊர்வலத்திலும் நூறுபேர்கள் தானும் சென்றிருப்பார்கள் என்று கூறுவதற்கில்லை.

இதுகாலவரை ஒத்துழைப்புக் கொடுத்துவந்த மட்டக்களப்பு நகரசுத்தித் தொழிலாளர்களோ, இந்தியன் ஹியூம் பைப் கம்பெனித் தொழிலாளர்களோ வேறு தொழிற் சங்கங்களோ பங்கு கொள்ளவில்லை. மட்டக்களப்புத் தொழிற் சங்க ஆரம்ப காலவளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட தொழிலாளி ஒருவருடைய பெயரும் இம்முறை விளம்பரப்படுத்தப்பட்ட துண்டுப் பிரசுரங்களில் இருந்தது. அன்றையத் தினம் மாதா கோவிலில் நடைபெற்ற தொழிலாளர்களுக்கான விசேட பூசையிலும் பங்குகொண்டு கொம்யூனிஸ்டுகளின் போக்கையும் கண்டித்தார் எனத் தெரிகிறது.

ஊர்வலத்தில் மக்கள் குறைவாகச் சென்ற போதும், கோஷங்கள் பெரிதாகக் கேட்டன. அண்மையில் சென்று பார்த்தபோது, ஏற்கனவே 'ரேப் ரெக்கார்ட'ரில் பதிவு செய்யப்பட்டவைதான் ஒலி பெருக்கி மூலம் ஒலிபரப்பப்பட்டது என்பது தெரிய வந்தது.

திருகோணமலையில் நடைபெற்ற ஐக்கிய மேதினக் கூட்டத்திலும் பலத்த அபிப்பிராய பேதங்கள் நிலவின. பேச்சாளர்கள் பலரும் தங்கள் அபிப்பிராய பேதங்களை மோதவிட வேண்டியிருந்தது. தமிழரசுக் கட்சியின் மொழிக் கொள்கை சம்பந்தமாக இடது சாரிகள் சிலர் பேசினர். சிங்களம் இந்நாட்டின் ஆட்சி மொழியாக இருப்பதனால் தமிழ் பேசும் மக்களுக்கு எதுவித தீங்கும் ஏற்படப் போவதில்லை என்று வாதிக்கப்பட்டது. இக் கருத்தை ஒரு பேச்சாளர் வன்மையாகக் கண்டித்து தமிழரசுக் கட்சியின் கொள்கை சரியானதே என்று கூறினாராம்.

# சந்தித்து வந்தவை

### காலைகண்டன்

- **அற்பப் பொருளாசையினால் பதவி குறைப்புக்காளானர்**
- **பொய் நாமகரணமிட்டுப் பதவி அளிக்க முன்வருவோர்**

அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு அடிக்கடி பதவி உயர்வு ஏற்படுவதுண்டு. பதவி உயர்வுக்காகப் பெரும்பாலும் பலர் பந்தம் பிடிப்பது வழக்கம். பாதந்தாங்கியும், பந்தம் பிடித்தும் காரியம் கைகூடாவிட்டால், வெவ்வேறு வழிவகைகளைக் கையாளுவதுண்டு. வட பகுதியில் கல்வி இலாகாவில் உயர் பதவி ஒன்றில் உள்ளவர், கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது கொழும்பில் நடைபெற்ற உத்தியோகபூர்வமான கூட்டத்துக்குச் சமுகமளிக்க வேண்டியிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புகையிரதத்திலேறிச் சென்றாராம். கூட்டம் முடிந்து யாழ்ப்பாணம் திரும்பியதும் பிரயாணத்துக்கான செலவுக்குரிய விண்ணப்பம் செய்துள்ளார்.

புகையிரதத்தில் பிரயாணம் செய்தால் அதற்காகக் கொடுக்கப்படும் செலவுப் பணத்தை விட மோட்டார் வண்டியில் சென்றால் கொடுக்கப்படும் பணம் அதிகமாகும். இதை உணர்ந்த இந்தக் கல்வி அதிகாரி, கூடிய பணத்துக்கு ஆசைப்பட்டு தான் கொழும்புக்கு மோட்டார்களில் சென்றதாகவும், அதற்கான செலவுப் பணத்தைத் தரவேண்டுமென்றும் கேட்டு விண்ணப்பத்தை அனுப்பிப் பணமும் பெற்றுக்கொண்டாராம்.

அரசாங்கத்தை தனது தீய செயலினால் ஏமாற்றிவிடலாம் என்று கனவு கண்டவரின் குட்டு வெளிப்பட்டுவிட்டது. கொழும்புக்குப் புகைவண்டியில் பிரயாணம் செய்தது தெரியவந்துவிட்டது. பொறுப்புள்ள உயர் பதவியிலிருப்பவர்— மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும், எடுத்துக்காட்டாகவும் திகழவேண்டிய கடமைப்பாடுடையவர் செய்த ஏமாற்றுவேலை அம்பலமாகியது. இதற்காக இவருக்கு பதவி இறக்கத் தண்டனை தான் கிடைத்தது

ஏதோ 'எப்படியும் வாழலாம்' என்ற தத்துவத்துக் கமைய தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டு வாழும் இந்த நபர் பதவிக்காலம் முடிந்தும் பதவியை விடாமல் ஒட்டிக்கொண்டு கேவலமான வழிவகைகளில் வாழ்ந்துதான் வருகிறார்.

கொம்யூனிஸ்ட் பிற்போக்குவாதி ஒருவர் ஒரு மகளிர் கல்லூரியில் ஒன்றில் இடம் பிடித்துக் கொண்டார் என்பதையும் தமது கொள்கைப் பிரசாரத்திலும், வேண்டாச் செயல்களிலும் ஈடுபட்டு

(9-ம் பக்கம் பார்க்க)

**மனக் கவலையா?**

வியாதியா? முன்னேற்றம் குறைவா? குடும்பப் பிரச்சனையா? சத்துரு கரைச்சலா? ஆண் பெண் வசியமா? அப்படியானல் அவைகளை நிவிர்த்திக் கொள்வதற்கு இனமாக பதில் அனுப்பப்படும்.

பீ. எம். திசாநாயக்க

கம்பளை.

**ஹோமியோபதி வைத்தியம்**

ஹோமியோபதி வைத்தியத்தைப் படிக்க விரும்புவோர்களுக்கு உதவியாக பாடங்கள் நேர்முகமாக கொழும்பில் கற்றுக்கொடுக்கப்படும்.

(ஆங்கிலத்தில் மாத்திரம்)

விபரங்களுக்கு எழுதவும்:

மே/பா சுதந்திரன்

**அடுத்த இதழில்**

**தனிப்பெரும் தலைவருக்குத் தலைபிடி**

# நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்க விடுதலை வீரர்கள் முயற்சி

### அரங்கம் 7

சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்த கைதிகளின் நிலைமை மோசமாகிக் கொண்டு வந்தது. இதை உலகுக்கு எடுத்துக் காட்டும் முகமாக 23—9—1917ல் டி. வேலரா தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் டப்ளினில் நடைபெற்றது. கூட்டத்தில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது:

' "தாம் விரும்பாத ஓர் ஆட்சியின் கீழ் வாழும்படி எந்த மக்களையும் பலவந்தப் படுத்துவது தகாது" என்று குடியதிபதி வில்சன் முழங்கியதைப் போல் அயர்நாட்டின் வீரப் புதல்வர்கள் முழங்கிய காரணத்திற்காக

## சிறைச்சாலையில் சித்திரவதை உத்தமர் உயிர் துறந்தார்

அவர்கள் கைது செய்யப்பட்டு ஆங்கில இராணுவ நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு நீண்டகாலச் சிறைவாசத்திற்கு அனுப்பப்பட்டதை ஐரோப்பிய வல்லரசுகளின் கவனத்திற்கும் ஐக்கிய அமெரிக்க மாநிலங்களின் கவனத்திற்கும் கொண்டு வருகின்றோம்' என்பதுதான் அந்தத் தீர்மானம்.

உண்ணாவிரதம் இருந்த தோமஸ் ஆகஸின் சிறறையின் சாளரங்களைச் சிறை அதிகாரிகள் அடைத்தனர். அதனால் மூச்சுவிட இடைஞ்சல் பட்ட ஆகஸ் அவற்றை உடைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவர் படுப்பதற்குக் கட்டிலும் போர்ப்பதற்குப் போர்வையும் கொடுக்கப்படவில்லை. அதனால் அவரின் நிலைமை படுமோசமாகியது. அதைப் பொருட்படுத்தாது சிறை அதிகாரிகள் அவருக்குப் பலவந்தமாக உணவூட்ட முற்பட்டனர். அதன் காரணமாக 25—9—1917ல் உத்தமர் தோமஸ் ஆகஸ் உயிர் நீத்தார்.

தன் நாட்டின் விடுதலைக்காகத் தன்னுயிரையே அர்ப்பணித்த தளபதி தோமஸ் ஆகஸ் ஈஸ்ரர் வாரப் புரட்சியில் பெரும் பங்கு கொண்டவர். மரண தண்டனை பெற்று அதன் பின் அத் தண்டனை சிறைவாசமாக மாற்றப் பெற்றவர். கடைசி மூச்சுவரை தன் இனத்தின் விடுதலைக்காக உழைத்தவர் ஆகஸ். அவருடைய பூதவுடல் தொண்டர் படையின் கோலவுடை அணிவிக்கப்பட்டு மக்கள் மரியாதைக்காக டப்ளின் நகர மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது.

*[see below for continuation]*

பூதவுடல். பூதவுடலைத் தொடர்ந்து 30,000 பொது மக்கள் கண்ணீர் சிந்திய வண்ணம் சென்றனர். வழி நெடுகே லட்சக் கணக்கான அயர் மக்கள் விம்மி விம்மி அழுதனர்.

ஆகஸின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது. மூன்று மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. கல்லறையின் அருகில் நின்று கொண்டு துணைத் தளபதி மைக்கேல் கொலின்ஸ் முழங்குகிறார்—

"......இன்னும் பேசுவதற்கு ஒன்றுமில்லை. இனிமேல் பேசுவது இந்தத் துப்பாக்கிகளின் பேச்சாக இருக்கட்டும்."

தியாகி தோமஸ் ஆகஸின் மரணத்தை அடுத்து அயர் கைதிகளை அரசியற் கைதிகளாகக் கணிக்க வேண்டும் என்று பிரித்தானியக் கோமறைச் சபை உத்தரவிட்டது. மௌன்ற்ஜோய் சிறைச்சாலையிலிருந்த கைதிகள் அனைவரும் டண்டோக் சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்

டத்தை டி வேலரா தயாரித்தார்.

"சுதந்திர அயர் குடியரசுக்கு உலக நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுவது சின் பீனின் நோக்கம்.

---

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

---

"குடியரசைப் பெற்ற பின் அயர் மக்கள் தாம் விரும்பிய ஆட்சி முறையைச் சர்வசன வாக்களிப்பு மூலம் சுயேச்சையாக முடிவு செய்யலாம்." என்று தொடங்கும் அமைப்புத் திட்டம் மகாநாட்டில் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அமைப்புத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டபின இயக்க அலுவலர்கள் தெரிவு நடைபெற்றது. பேராசிரியர் ஏமன் டி வேலரா போட்டியின்றித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆதர் கிரிபித், பிதா மைக்கேல் ஓபிளநகன் ஆகிய இருவரும் துணைத் தலைவர்களாகவும் டறல்

கள்ள வேடத்தைக் களைந்து, அவர்கள் கொடும் பாதகர்கள் தான் என்பதைப் பறைசாற்றுவோம்' என்று ஈஸ்ரர் வாரப் புரட்சியில் ஈடுபட்டு மரணம் அடைந்த நமது தலைவர்கள் கூறினார்கள். 'அயர்நாட்டு மக்களின் விடுதலையே நமது குறிக்கோள். நாட்டு மக்களில் நாம் ஒரு சிறு பகுதியோ ஒரு அரசியற் கட்சியோ அல்ல; அயர் மக்கள் இதயத்தில் பொங்கி எழும் திடமான, கருத்துமிக்க எண்ணத்தையே நாமும் எமது உள்ளத்தில் கொண்டிருக்கின்றோம். விடுதலையை நாம் அடைய வேண்டுமானால் முதல் படியாக, அயர் மக்கள் அனைவரையும்

## தொண்டர் படையில் 2,00,000 இளைஞர்கள்

அந்த விடுதலையைப் பெறுவதற்கு உறுதி பூணும்படி செய்தல் வேண்டும். அந்த அரசியற் போராட்டத்தின் முதல் முயற்சி இராணுவ ரீதியாகப் பார்க்கும் பொழுது தோல்வியாக அமைந்தாலும் ஈற்றில் அது வெற்றியையே தரும்' என்று அவர்கள் போதித்தார்கள். அவர்களுடைய செய்கை அறத்தை அடிப்படை

கேல் கொலின்ஸை அமைப்பு அதிபராகவும் டயாமுட லிஞ்சை பொதுத் தொடாபு அதிபராகவும் சோண் மக்காரியை பொதுச் செயலாளராகவும் தெரிவு செய்தனர்.

டண்டோக் சிறைச்சாலையில் நிலைமை தாங்க முடியாமல் போகவே பல கைதிகள் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தனர். இந்த உண்ணாவிரதத்திற்கு மருந்தொன்றைத் தேட முடியாத ஆட்சியினர் 17—11—1917ல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்தனர். விடுதலை செய்யப்பட்ட கைதிகள் அனைவருமே மீண்டும் பொதுப் பணியில் ஈடுபட ஆரம்பித்தனர்.

ஒவ்வொரு வார இறுதியிலும் சின் பீன் பிரசாரக்கூட்டங்களை நடத்தியது. சிற்றூர், பேரூர் எங்கும் சின் பீன் பீரங்கிகள் முழங்கின. ஒவ்வொரு வாரமும் தொண்டர்கள் அணிவகுத்து நின்று பயிற்சி பெற்றார்கள். ஒவ்வொரு வாரமும் தலைவர் டி வேலரா போர் முரசம் கொட்டினார். சிறிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கக் குடியதிபதி வில்சன் கூறிய போது அக் கூற்றை வரவேற்ற இங்கிலாந்தின் பிரதமர் லொயிட் ஜோஜ், அயர் இனத்துக்கு அந்தச் சுயநிர்ணய உரிமையை அளிக்க முன் வராதது வேடிக்கையாக இருக்கிறது என்று வார்த்தை அலங்காரமின்றிப் பச்சை பச்சையாகப் பேசினார் டி வேலரா. அவருடைய பிரசாரம் காரணமாக 2,00,000 இளைஞர்கள் தொண்டர் படையில் சேர்ந்து பயிற்சி பெற்றனர்.

கிளைகள் இல்லாத ஊர்களில் சின் பீன் வாதிகள் கிளைகளைத் திறந்தனர். ஊராட்சி மன்றத் தேர்தல்களில் ஈடுபட்டு மக்கள் மத்தியில் குடியரசுத் தத்துவத்தை எடுத்துக் கூறி அயர் கட்சியை இருந்த இடம் தெரியாது தோற்கடித்தனர்.

## ஆட்சியாளரின் சதி மக்கள் பட்டினியால் வாடினர்

பட்டனர். ஒருசில வாரங்களுக்கு மாத்திரமே அவர்கள் அரசியற் கைதிகளாக மதிக்கப்பட்டார்கள். அதன்பின் பழைய நிலை திரும்பவும் வந்தது. அதனால் ஒஸ்ரின் ஸ்ரக் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தார்.

பிகிஸ், சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்த ஒஸ்ரின் ஸ்ரக் ஆகிய இருவரும் கௌரவ செயலாளர்களாகவும் லோரன்ஸ் கினல், வில்லியம் கொஸ்கிராவ் ஆகியோர் கௌரவ பொருளாளர்களாகவும் பேராசிரியர் ஐன் மக்னீல், மைக்கேல் கொலின்ஸ் முதலியோரும் இன்னும் 22 பேரும் நிறைவேற்றுங் குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாகக் கொண்டது என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

"......நாம் எந்தக்கொடியின் கீழ் போராடப் போகிறோமோ அந்தக் கொடியின் கீழ்—அயர் குடியரசின் மூவர்ணக் கொடியின் கீழ்—ஒற்றுமையாக நிற்க வேண்டும் என்று நாம் கூறுகிறோம். அந்தக் கொடியைக் கம்பத்தில் உயர்த்தியிருக்கிறோம். அதை என்றுமே இறக்க மாட்டோம். என்றுமே தாழ்த்த முடியாத அக் கொடிக்கு நீவிர் அனைவரும் வந்தனை செய்மின், இராட்டன் வாழ்த்தியது போல் அதைப் பார்த்து 'அழிவற்று இருப்பாயாக' என்று வாழ்த்துமின் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்."




சின் பீன் இயக்கத்தின் 10வது தேசிய மகாநாடு—புனருத்தாரணம் செய்யப்பட்ட சின் பீனின் முதலாவது தேசிய மகாநாடு—25—10—1917ல் டப்ளினில் ஆரம்பமாகியது. அதில் 1200 சின் பீன் கிளைகளிலிருந்து 17,000 பேராளர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## 17,000 பேராளர்கள் கலந்துகொண்ட தேசிய மாநாடு

பத்தில் வைக்கப்பட்டிருந்தது. லட்சக்கணக்கான மக்கள் நாடெங்கிலுமிருந்து வந்து மறைந்த தலைவருக்குத் தமது இறுதி மரியாதையைச் செலுத்தினர். நாடு முழுவதும் சோகமே உருவாகக் காட்சியளித்தது.

பிரேத ஊர்வலம் ஆரம்பமாகியது. அயர் தொண்டர் படையைச் சேர்ந்த தொண்டர்கள் படைத்துப்பாக்கிகளுடன் அணிவகுத்துச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து 200 மதகுருமார்கள் நடந்து சென்றனர். மதகுருமாருக்குப் பின்னுக அ. கு. மன்றம், அயர்நாட்டின் புதல்வியர், தேசிய உதவிச் சங்கம் முதலிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் செல்லலாயினர். இவர்களுக்குப் பின்னல் தளபதியின்

முதல் விடயமாக, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய புதிய அமைப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டியிருந்தது. ஆதர் கிரிபித்தும் இன்னும் சிலரும் அயர்நாடு குடியரசாவதை விரும்பவில்லை. அதேபோல் கதல் புருகாவும் இன்னும் சிலரும் அயர்நாடு குடியரசாகவே திகழ வேண்டும் என ஒரே மூச்சில் நின்றார்கள். இவர்கள் எல்லோரையும் சமாதானப் படுத்தக் கூடிய அமைப்புத் திட்

தலைவர் டி வேலரா தமது தலைமையுரையில்

> ### அடுத்த வாரம்
> ★ மகாநாடு மத்தாப்பு ஆகியது
> ★ ஜேர்மனியின் அந்தரங்கத் தூதுவர்
> ★ பாராளுமன்றத்தில் வெளி நடப்பு
> ★ கொலின்ஸின் ஒற்றர் படை

"......'அயர் மக்களது உள்ளத்தில் குமுறியெழும் உணர்ச்சிகளை அவர்கள் வெளிக்காட்டுவதை இங்கிலாந்தின் உருவிய போர்வாள்தான் தடுக்கிறது என்று நமக்கும் நம்நாட்டு மக்களுக்கும் தெரியும். மக்களின்நல்லெண்ணத்தின் பெயரில் தான் தாம் இங்கு இருப்பதாக இங்கிலாந்து பாசாங்கு செய்கிறது. ஆகவே நாமும் நமது போர்வாளை உருவி, அவர்களுடைய

## ஆட்சியாளருக்கு அதிர்ச்சியைக் கொடுத்த சிறைச்சாலைத் திருமணம்

பேராசிரியர் பேச்சு போர் முரசம் கொட்டும் பேச்சாக இருந்தது. அதை உறுதிப் படுத்தும் முகமாக இருந்தது 27—10—1917ல் நடைபெற்ற நிகழ்ச்சி. சுயேச்சையாக இயங்கும் அயர்தொண்டர் படையினர் அன்று பேராசிரியர் டி வேலராவைத் தமது தலைவராகத் தெரிந்தெடுத்துக் கௌரவித்தனர். கதல் புருகாவை தொண்டர் படை'யின் தண்டநாயகனாகவும் மைக்

### அரங்கம் 8

இந்நேரத்திலும் டப்ளினில் திரினிற்றி கல்லூரியில் வட்டமேசை மகாநாடு நடைபெற்றுக்கொண்டு தான் இருந்தது. பிரதமர் லொயிட் ஜோஜின் கூலிப் பட்டாளம் சதா அலம்பிக் கொண்டேயிருந்தது. பொதுவாக உலக மக்களை

## ஊராட்சித் தேர்தல் மூலம் விடுதலைப் பிரச்சாரம்

யும் குறிப்பாக அமெரிக்க மக்களையும் அயர் மக்களையும் ஏமாற்றுவதற்காகக் கூட்டப்பட்ட வட்டமேசை மகாநாட்டில் ஆட்சியினரின் கையாட்களாகக் கலந்துகொண்ட இனத் துரோகிகள் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு ஒரு கினி (தற்போதைய இலங்கைப் பணத்தில் ரூ. 13-83) கைலஞ்சம் கொடுக்கப்பட்டது.

இந்த நரித் தந்திரங்களோடு ஆங்கில ஆட்சி நிற்கவில்லை. புரட்டஸ்தாந்து வெறியர்களான இணையாளர்களுக்குச் சாதகமாக இருக்கும் வகையில் வட அயர்நாட்டில் பாராளுமன்றத் தொகுதிகளைப் பிரித்தனர். இவற்றையெல்லாம்

(11-ம் பக்கம் பார்க்க).

சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஜூன் மாதம் 2-ந் தேதி

194 ஏ. பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# ஒரு கண்துடைப்பு!

தபால் தந்திக் கட்டணம் உயர்ந்தது. ஏழை மக்கள் உபயோகிக்கும் தபால் கட்டணத்தின் விலையும் ஏறியது. இது ஒரு புதிய பளு. வரிச்சுமையாலும் விலைவாசி ஏற்றத்தாலும் அல்லல்படும் மக்கள்மீது இப் புதிய பளுவையும் சுமத்திய கையோடு மந்திரிப் பதவிகளும் மாற்றம் கண்டன.

மாற்றமென்றால், மந்திரி சபையில் மாற்றமில்லை. அதே பழைய மந்திரிசபைதான். மந்திரிகளின் பதவிகளில் தான் மாற்றம். புதிய பதவிகளில் பழைய மந்திரிகள். புதிய மொந்தையில் பழைய கள், அவ்வளவுதான். வேறு மாற்றங்கள் எதுவுமில்லை,

அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றமில்லை, வேலைத் திட்டத்தில் மாற்றமில்லை. ஆட்சி முறையில் மாற்றமில்லை. பதவிகளில் மட்டுந்தான் மாற்றம்.

பழைய மந்திரிகளையே அங்குமிங்கும் தள்ளியும் அமைச்சுகளை அவருக்குமிவருக்கும் மாற்றிக் கொடுத்தும் "புதிய மந்திரிசபை" அமைக்கப்பட்டது. இதுதான் பிரமாதமாக இன்று பேசப்படும் மாற்றம்!

இதனால் யாருக்கு என்ன பயன்? பதவிகளை மாற்றியதால் மந்திரி சபையின் திறமை கூடிவிடுமென்று கூறவும் முடியாது. ஏனெனில், அதற்குப் புதிய இரத்தம் எதுவும் பாய்ச்சப்படவில்லை. ஆகவே மந்திரிகளின் பதவி மாற்றம் மக்களிடையே எந்த உத்வேகத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்நிலையில் ஏன் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டன? தலையணையை மாற்றுவதால் தலையிடி திருமா?

கடந்த வரவு—செலவுத் திட்டத்தின் பின் அரசாங்கம் ஆட்டம் கண்டது. விலைவாசிகள் விஷம்போல ஏறின. உணவுப் பொருள் உட்பட அத்தியாவசியச் சாமான்களுக்குப் பெரும் தட்டுப்பாடு. கள்ளச் சந்தையின் வளர்ச்சி, இலஞ்ச ஊழலின் பெருக்கம், பொங்கிவரும் தமிழ் பேசும் மக்களின் அதிருப்தி, வர்த்தக மந்தம், பணவீக்கம் ஆகிய நெருக்கடிகள் பூதாகாரமாகக் கிளம்பின. பொருளாதார நெருக்கடி ஆட்சியாளரின் மென்னியைப் பிடித்தது. இதனால் நிதி மந்திரிப் பதவி மும்முறை கைமாறியது. எனினும் நெருக்கடி திரவில்லை. அதற்குப் பதிலாக மென்மேலும் வளர்ந்தது.

நெருக்கடிகள் வளர, வளர அரசாங்கக் கட்சிக்குள் குத்துவெட்டுகளும் கூடின. பாராளுமன்ற உறுப்பினர் சிலர் அரசாங்கக் கட்சியைக் கைவிட்டனர். அத்துடன் அதன் ஊழல்களையும் அம்பலப்படுத்தினர். அரசாங்கம் தள்ளாடியது. வீழ்ச்சி அண்மியது. ஆபத்தை உணர்ந்த பிரதமர் மூன்று மாதத்துக்குப் பாராளுமன்றத்தை முடமாக்கினார். மக்கள் குரல், மன்றத்தில் ஒலிக்காமல் அடக்கினர். அதனால் பிரச்சினைகளைத் தீர்க்க முடிந்ததா? இல்லை. மக்களிடம் அதிருப்தி மலைபோல் வளர்ந்தது.

இதற்கிடையே சர்வாதிகாரப் பேச்சு வேறு—அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்லும் அபாயம் தோன்றியது. நெருக்கடிகளும், சர்வாதிகாரப் பேச்சும் சேர்ந்து புயலைக் கிளப்பிவிட்டன. அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புரட்சி செய்யத் தொடங்கினர். மேலும் தாமதித்தால் வீழ்ச்சியைத் தடுக்க முடியாதெனஉணர்ந்தார் பிரதமர்.

உடனே இரு உபாயங்களைக் கண்டார். ஒன்று அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அலரி மாளிகையில் நடத்திய பிரியாணி — கோழிக் கறி — ஐஸ்கிறீம் விருந்துபசாரம். மற்றது மந்திரிசபை மாற்றம என்ற பெயரால் அதே மந்திரிகளிடையே அமைச்சுகள் மாற்றம்.

புரட்சி செய்த பாராளுமன்ற உறுப்பினர்களைச் "சரிக்கட்ட"வே அலரிமாளிகை விருந்து நடத்தப்பட்டதாம் அந்தக் கூட்டத்தில் நாட்டின் அரசியல் நிலைமை பற்றியோ பாராளுமன்றத்தைக் கால் ஆண்டு காலத்துக்கு முடமாக்கியது பற்றியே அரசாங்கத்தின் எதிர்கால வேலைத் திட்டம் பற்றியோ பேசவில்லை. நிகழ்ச்சி நிரலின்றி ஏதேதோ பேசினராம். சிம்மாசனப் பிரசங்கம் பற்றி விவாதித்தனராம். (இது பற்றி அரசாங்கப் பாராளுமன்றக் குழு விவாதிக்கும் வழக்கம் கிடையாது). ஆயினும் விருந்தும் படக்காட்சியும்தான் முக்கிய இடம் பெற்றனவாம்.

இம் முயற்சியால் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவில் ஏற்பட்ட வெடிப்பைத் தற்காலிகமாக ஓரளவு பூசி மெழுக முடிந்தது. "தற்காலிக ஒட்டு" நீண்ட நாள் நிலைக்காது.

"மந்திரிசபை மாற்றம்" அரசாங்கத்தை வீழ்ச்சியினின்று காக்கும் மற்றோர் அரசியல் உபாயம்.

இந்த உபாயங்கள் அடுத்து வரும் வரவு—செலவுத் திட்டத்தோடு பயனற்றுப்போகும். பெருந்தொகை துண்டு விழும் வரவு — செலவுத் திட்டம், அரசாங்கப் பாராளுமன்றக் குழுவிலே மீண்டும் புரட்சியையும், புயலையும் கிளறிவிடும். அரசாங்கம் உயிருக்கு மன்றாடும் நிலை தோன்றும்.

"புதிய மந்திரி சபைக்கு" இன்று ஏற்பட்டுள்ள தலையிடி வரவு—செலவுத் திட்டமே. நிதி மந்திரி மாறுவதால் பொருளாதார நெருக்கடி குறைந்துவிடாது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும் மந்திரிசபை மாற்றத்தால் முடியாது. இலஞ்ச ஊழல்களை ஒழிக்கவும் முடியாது.

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வழங்கப்போவதாகவும் ஒரு நாடகம் நடிக்கின்றனர். அரசாங்கத்தின் ஆயுட்காலத்தை நீடிக்க இந்த நடிப்பும் அவர்களுக்குத் தேவை. தமிழ் பேசும் மக்களை மீண்டும் ஏமாற்றலாம் என்ற எண்ணத்தை அவர்கள் இனிக் கைவிட்டுவிடுதல் நன்று. அவர்கள் எத்தர்கள்தான். ஆனால் தமிழ் பேசும் மக்கள் ஏமாளிகளல்லவே!

# புத்துயிர் கொடுக்கும் புதுமுயற்சி பயனளிக்காது

## பேதமை பேசுபவர் உரிமை பெற்றுக் கொடுப்பாரா?

செத்தொழிந்த தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்குப் புத்துயிர் கொடுக்கும் புது முயற்சியில் திரு. பொன்னம்பலமும் அவர் கோஷ்டியும் முனைந்துள்ளது.

இல்லாதவற்றையும், பொல்லாதவற்றையும் கூறி மக்கள் கண்ணில் மண்ணைத் தூவ முயலுகிறார்கள் காங்கிரஸார்.

### வட்டமேசை மாநாடு

இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் ஒப்பந்தம், கொழும்பில் மாதர் முன்னணி என்று சில வாரங்களுக்கு முன்னர் பத்திரிகையில் அறிக்கைவிட்டு அமைதி கண்டார்கள். அவை அனைத்தும் சுண்டியெடுத்த புளுகு மூட்டை என்பதைத் தமிழ் பேசும் மக்கள் தெரிந்து கொண்டார்கள்.

இப்பொழுது தமிழ் எம். பிக்கள் சிலர் தமிழ்க்காங்கிரஸில் சேர விரும்புவதாக ஒரு கதையைப் பத்திரிகைகளில் அவிழ்த்து விட்டிருக்கிறார் திரு. பொன்னம்பலம் அவர்கள்.

### மக்களை ஏமாற்றும் முயற்சி

அவர்களிடம் 'ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு' என்று இருந்த ஒரு எம்.பி, யையே சரியான முறையில வைத்துக் காப்பாற்ற முடியாதவர்கள், இப்பொழுது சில தமிழ் எம். பி.க்கள் சேர விரும்புகிறார்கள்என்று கூறி மக்களை ஏமாற்ற முயலுகிறார்கள்.

தேர்தலுக்குத் தேர்தல் காளான்போல் முளைத்து, அரசாங்கத்திற்கு தேர்தல் கட்டுப்பணம் என்னும் நன்கொடைத் தொகையை குறைத்துக்கொள்வதற்காக உயிர் வாழ வைத்த தமிழ் காங்கிரஸ் கட்சியை உரிமை பெற்றுத் தரும் ஒரு இயக்கம் என்று யாராவது எண்ணுவார்களா? வட கிழக்குடன் மலையகத்தையும் இணைத்து தமிழர்களை ஒரே கூட்டணியில் ஒன்றுபடுத்திய பின்னரும், தமிழ் பேசும் மக்கள் மத்தியிலேயே பேதமை பேசி, மலையக மக்களின் உரிமை இழப்புக்கு உடந்தையாக இருந்த திரு. பொன்னம்பலத்தை தமிழ் பேசும் மக்கள் மீண்டும் நம்பும் நிலையில் இருப்பார்களென்று யாராவது எதிர்பார்த்தால் அது அவர்களின் அறியாமையேயாகும்.

### நேரமில்லாத தலைவர்

கிழக்கு மாகாணத்தில் இருந்து அழைப்பு வந்தது, எனக்கு அதனை ஏற்றுக்கொள்ள இப்பொழுது நேரமில்லை, என்று ஒரு அறிக்கையில் திரு. பொன்னம்பலம் கூறியிருக்கிறார். அவருக்குத் தனது சொந்தப் பிரச்சினையையே பார்க்க நேரம் போதவில்லை. அப்படியிருக்கையில் அவர்கள் தமிழர் பிரச்சினையையும் வேறு கட்டி அழ முடியுமா?

அடுத்து திரு. பொன்னம்பலமும் அவரது தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் குடா நாட்டைவிட்டு வெளியில் கால் வைத்துப் பழக்கப்படவில்லை, எனவே அவர்கள் எப்படி மலையகத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் ஏனைய இடங்களுக்கும் செல்ல முடியும். பழக்கமில்லாத ஒன்றைச் செய்யும் பொழுது கூச்சமாகவே இருக்கும். இது இயற்கையும்தான்.

### சிங்கள ஆதிக்கம்

திரு. பொன்னம்பலம் ஐ.தே. கட்சியில் மந்திரியாக இருந்த போதுதானே குடியேற்றம்என்ற போர்வையில் சிங்கள ஆதிக்கம் தமிழகத்தில் கால் ஊன்றியது. இன்று குடியேற்றத் திட்டத்தின் மூலம் ஏற்பட்ட சிங்கள ஆதிக்கத்தின் நெருக்கடியை நேராக உணரும் கிழக்கு மாகாண மக்கள் முன் எப்படி திரு. பொன்னம்பலம்காலடிவைக்கமுடியும்? அது அவருக்குக் கஷ்டமான விடயமே.

திரு. பொன்னம்பலத்தின் நோக்கம் ஒன்றே ஒன்றுதான். இறந்தொழிந்த இயக்கத்திற்கு உயிர் கொடுத்தாவது இழந்த பதவியைத் திருப்பிப் பெற வேண்டும் என்பதே. திரு. பொன்னம்பலம் எண்ணுகிற அளவுக்கு தமிழ் பேசும் மக்கள் அத்தனை தூரம் ஏமாந்த சோணகிரிகள் அல்ல.

# ஜனுப் ஜாயா ஞாபகார்த்தம்

இலங்கையில் முஸ்லிம் மக்களின் கல்வி கலாச்சார மேம்பாட்டுக்கு உழைத்தவரும், அமைச்சரவையில் சேர்ந்து தொண்டாற்றிய வருமான பெரியார் ஜனுப் டி. பி. ஜாயா மறைந்து 3 வருடங்கள் முடிந்துவிட்டன. அவர் இந்நாட்டு மக்களுக்கு—சிறப்பாக முஸ்லிம் மக்களுக்குச் செய்த சேவைகளை எவரும் மறக்க முடியாது.

கல்வி நிலையில் பின்தங்கியிருந்த முஸ்லிம் மக்களின் கல்வி வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வந்துள்ளார். அவருடைய உழைப்பினாலேயே இலங்கையின் சிறந்த கல்விக் கூடங்களான ஸகிறாக் கல்லூரிகள் எழுந்தன. ஜனுப் ஜாயாவின் சேவையைப் பாராட்டிக் கொண்டே ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் இன்று கல்விமான்களாக தலை நிமிர்ந்து வாழ முடிகிறது.

ஜனுப் ஜாயாவின் ஞாபக நிதி ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளார்கள். ஜனுப் ஜாயாவின் ஞாபகார்த்தக் கட்டிடம் ஒன்றினை நிறுவவும், இஸ்லாமிய நூல் நிலையம், சமூக, கலாச்சாரச் சங்கத்தை ஏற்படுத்தவும் இந் நிதி செலவிடப்படும்.

வயதுவந்தவர்களுக்கு கல்வி வசதி அளித்தல், அனாதை விடுதி, வயோதிபர், அங்கவீனர், நோயாளிகள், பாலியக் குற்றவாளிகளுக்கான விடுதிகள் முதலியன ஏற்படுத்துதல், குடிசைக் கைத்தொழில் வளர்ச்சியில் ஊக்கமளித்தல், தகுதியுள்ள முஸ்லிம்களுக்குப் பயிற்சி அளித்து புனருத்தாரண வாழ்வு பெற வாய்ப்புகளை ஏற்படுத்துதல் முதலிய பணிகளுக்கும் ஜனுப் ஜாயா ஞாபகார்த்த நிதியிலிருந்து பணம் பெறப்படும்.

இந்த நிதிக்குழுவுக்கு டாக்டர் எம். சி. எம். கலீல் தலைவராகவுள்ளார்.

# புதிய மந்திரிசபை........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாளிகையில் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குப் பிரதமர் விருந்து வைத்தாராம். விருந்தளித்துப் பேசும் போது இடதுசாரிகள் சேர்ந்து அமைத்த முன்னணியை முறியடிக்க, ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கோஷ்டிச் சண்டைகள் ஒழிந்து ஒற்றுமை ஓங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாராம்.

### முன் வரிசையில் துரையப்பா!

புதிதாக அமைக்கும் மந்திரி எப்படி இருக்க வேண்டுமென்று ஒரு மாதிரி ஜாபிதாவை முற்போக்குக் குழு தயாரித்துப் பிரதமருக்கு அளித்ததாம். அந்த ஜாபிதாவில் திரு. சாம் பி. சி. பெர்னாண்டோ, திரு. ஏ. பி. ஜெயசூரியா, ஜனுப் பதியுதீன் மஹ்மூத் ஆகியவர்களின் பெயர்கள் இருக்கவில்லை. அத்துடன் நீதி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாக, திரு. அல்பிரட் துரையப்பா நியமிக்கப்பட்டு, வலதுசாரிகளின் முன் வரிசையில் இருக்க வாய்ப்பளிக்கப் பட வேண்டும் என்றும் அந்த விண்ணப்பம் கருத்துத் தெரிவித்திருந்தது என்று தெரிய வருகிறது.

திரு. சி. பி. டி. சில்வாவின் குழுவில் ஒருவரான திரு. கலுகல்லையிடமிருந்து நிதி மந்திரிப் பதவி பறிக்கப்பட்டதை ஆளும் கட்சியினர் பலர் விரும்பவில்லை எனினும், அரிசி வெட்டை ஆதரிக்காத ஒருவரே நிதி மந்திரியானதனால் ஓரளவு திருப்தி நிலவுவதாகத் தெரிகிறது.

உதவி மந்திரிப் பதவிகளுள் ஒன்றாவது மூதூர் இரண்டாவது பிரதிநிதி ஜனுப் மஜீதுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் சிலர் வற்புறுத்தினராம். ஆனால் பலர் இதை வன்மையாகக் கண்டித்தனராம். பலருடைய கண்டனங்களை ஏற்க முடியாது போகவே ஜனுப் ஜப்பார் பதவியைத் தட்டிக்கொண்டு போய்விட்டார்.

### சபதம் பலித்தது

செனட்டர் நடேசனுக்கும் துரையப்பாவுக்குமிடையில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாகவே இவ்விருவருக்கும் பதவி கிடைக்கவில்லை என்றும் பலத்த வதந்தி அடிபடுகிறது. 'கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிகொள்ளவந்தால், கறையானுக்குமில்லாமல் எவருக்கும் பயன்படாமல் செய்துவிடுவேன்' என்று திரு. துரையப்பா சபதமிட்டதாக வதந்தி உலாவியது பற்றிக் கடந்த வாரச் சுதந்திரனில் குறிப்பிட்டிருந்தோமல்லவா? அது உண்மையாகிவிட்டது போலும்.

"புதிய மந்திரிசபை" சிறுபான்மை மக்களுக்கு அபகரிக்கப்பட்ட உரிமைகளை வழங்கி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நிச்சயம் உதவாது — மந்திரிசபையின் கொள்கை, எண்ணம், நோக்கம், போக்கு மாறினாலன்றி, வெறும் இலாகாகளை மாற்றுவதால் பயனில்லை.

மந்திரிசபை மாற்றத்தால் பிரச்சினைகளைச் சிக்கலாக்க முடியுமேயன்றி, தீர்க்க முடியாது. அரசாங்கம் எண்ணுவதைப் போல வளர்ந்துவரும் மக்களின் அதிருப்தியை வேறு திசையில் திருப்பவும் அது பயன்படாது. சுருங்கக் கூறின், அது ஒரு கண்துடைப்பு.

# இ. தொ. க. வுக்குப் பெருகிவரும் ஆதரவு

## தோட்டத்தின் வாக்கெடுப்பில் தெரியவந்த உண்மை

**புதிதாக அமைக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் கழகத்துக்கு மலையகத்தில் ஆதரவு பெருகிக் கொண்டு வருகிறது. அக்கரப்பத்தனையைச் சேர்ந்த புரடித் தோட்டத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஏனைய தொழிலாளர் கழகங்களைவிட இலங்கைத் தொழிலாளர் கழகத்துக்கே அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளன.**

அக்கரப்பத்தனையைச் சேர்ந்த புரடித் தோட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகத்துக்கு அதிகமான ஆதரவு பெருகி வருகிறது. புதிதாக அமைக்கப்பட்ட கழகத்தினை உடனடியாக தோட்டத் துரை அங்கீகரிக்க மறுத்துவிட்டார். அட்டனிலுள்ள உதவித் தொழில் அதிபரின் உதவியுடன் தோட்டத்தில் ஒரு பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது.

17-5-63ல் அட்டன் உதவித் தொழில் அதிபரின் ஆணைப்படி நடைபெற்ற இந்த வாக்கெடுப்பில், அத்தோட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகத்துக்கு அதிகப்படியான வாக்குகள் பதிவாகின. வாக்கெடுப்பின் விபரம்:—

இலங்கைத் தொழிலாளர் கழகம்—110 வாக்குகள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்—73 வாக்குகள்.

லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன்—71 வாக்குகள்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்—17 வாக்குகள்.

398 தொழிலாளர்கள் உள்ள இத்தோட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகத்துக்கே அதிகப்படியான ஆதரவுஇருப்பதைக் கண்டு தோட்டத்துரை கழகத்தை அங்கீகரித்தார்.

புரடித் தோட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவராக திரு. எம். அழகன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

### அ. எ. சங்கத்தின் இரண்டாவது ஆண்டுக் கூட்டம்

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்குரிய முன்னறிவித்தல் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொதுச் செயலாளர் திரு. இ.அந்தோனிப்பிள்ளை அவர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஜூன் மாதம் 22ந் திகதி நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படுமெனத் தெரிகிறது.

பொதுக்கூட்டத்தில் ஆராயப்படவேண்டிய விடயங்கள், தீர்மானங்கள், பதவியாளர் நியமனப் பத்திரங்கள் அனைத்தும் இம்மாதம் 7ந் திகதிக்கு முன்னர் பொதுச் செயலாளருக்குக் கிடைத்தல் வேண்டும் என்றும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமசமாஜத் தலைவரின் ஜம்பம் பலிக்கவில்லை!

### எவிங்டன் தோட்டத் தொழிலாளர்கள் கழகத்தில் சேர்ந்தனர்

தெய்யோவிட்டை பாராளுமன்ற தொகுதியில் தெரனியாகலையைச் சேர்ந்த உடபாகை எவிங்டன் தோட்டத்தில் உள்ள தொழிலாளர்களில் பெரும்பாலோர் இ தொ. கழகத்தில் சேர்ந்துள்ளனர்.

இத்தொழிலாளர்கள் சமசமாஜ தொழிற் சங்கமான "லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனி"ல் இருந்து வந்தவர்கள். இச்சங்கத்தில் முன்னின்று செயலாற்றிய சிலர், தொழிலாளர்கள் இ. தொ. கழகத்தில் சேருவதை விரும்பவில்லை. சமசமாஜ சங்கத்தையே தோட்டத்தில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமென்பதற்காக பிரயத்தனங்கள் செய்து வந்தனர். ஆனல் எதுவும் பலிக்கவில்லை. தொழிலாளர்கள் கழகத்தில் சேர்ந்தனர்.

"எட்டியாந்தோட்டை பகுதியிலுமா இலங்கைத் தொழிலாளர்கழகம் புகுந்துவிட்டது? அதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்" என்று மேலிடத்தார் உத்தரவுபோட்டனர் போலும். இந்த சமசமாஜ சங்கத் தலைவர்கள் தொடர்ந்து கழகத்தை எதிர்க்க முழுமூச்சாகக் கங்கணங்கட்டியுள்ளனர்.

"யாழ்ப்பாணத்திலுள்ள 'பெடரல் கட்சி'யுடன் இணைந்துள்ள தொழிலாளர் கழகத்தைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் புகுத்திக் குழப்பம் விளைவிக்கிறார்களே! அமைதியைக் கெடுக்கிறார்களே! சிங்களவர்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்து கலவரத்தை ஏற்படுத்தப்போகிறார்களே" என்றெல்லாம் கூக்குரலிட்ட சில விஷமிகள் பொய்ப்பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர். 'சிங்களவர்களை எதிர்க்கும் கழகம் இது' என்றும் இதை தோட்டங்களில் நுழையவிட்டால் ஆபத்து நேர்ந்துவிடும் என்றும் அயல் ஊர்களிலுள்ள சிங்கள மக்களிடமெல்லாம் சென்று முறையிட்டார்களாம். இந்தத் துவேஷப் பிரசாரத்திற்குச் சிங்கள மக்கள் செவிசாய்க்கவில்லை. இக்கழகத்தைத் தடுக்கும்படி பொலிசாரிடமும் சென்று புகார் செய்தனராம்.

இந்த ரீதியில் வீண் விஷமத்தனம் எவ்வளவோ புரிந்தும் கழகத்தின் வளர்ச்சியை எதுவும் செய்ய முடியாது போய்விட்டது. 'தமிழ் பேசும்மக்களின் உரிமைகளையும் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களையும் பேணிக் காக்க வல்லது இலங்கைத் தொழிலாளர் கழகமேதான்' என்றகதியில் கழகத்துக்கு மென்மேலும் ஆதரவு பெருகி வருகிறது.

### தமிழியக்கம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக ஈடுபடாமல் பொதுத் தொண்டாற்றிவரும் பெரியார்கள் இவ்வித முயற்சியில் முனையத் தயங்குகிறார்கள். தமிழைக் காக்கும் பொறுப்பும், வளர்க்கும் பொறுப்பும் அரசியல் தலைவர்களுடையது என்றே இவர்கள் எண்ணுகிறார்கள். இது தவறானது.

**வருந்தத்தக்கது**

மதத் தலைவரான திரு. குன்றக்குடி அடிகள் போன்றோரே மொழியைப் பாதுகாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் பொழுது நம் நாட்டுப் பெரியார்கள் இன்னும் இம் முயற்சியில் இறங்காதிருப்பது வருந்தத்தக்கதே.

**அடிகளாரின் அரிய பணி**

சில வருடங்களுக்கு முன்னர் வண. பிதா. தனிநாயக அடிகள் 'தமிழ் பாதுகாப்பு இயக்கம்' ஒன்றை ஆரம்பித்து குறிப்பிடக் கூடிய அளவு பெருந்தொண்டாற்றினார்கள். அவர்களுக்கு இதனல் ஏற்பட்ட இன்னல்கள் பல. அவற்றையெல்லாம் ஒரு பொருட்டாகக் கணியாது தனது கடமையைச் செய்தார். அவர்கள் இன்று மலேயா சென்றதும் அது போன்று முயற்சியில் ஏனையோர் முனையவில்லை.

**தமிழ் அறிஞர்களுக்கு வேண்டுகோள்**

இன்று அடிகளார் வழியைப் பின் பற்றி நமது நாட்டிலுள்ள பெரியார்களும், தமிழறிஞர்களும் இம்முயற்சியில் முனைவார்கள் என்று நம்புகிறோம்.

## சந்திக்கு வந்தவை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதையும் முன்பு சந்தியில் பிரசுரித்தோமல்லவா? மேற் கூறப்பட்ட கல்வி அதிகாரிக்கும், இந்த திறந்துவிடப்பட்ட 'புஷ்சேர்ட்' பிற்போக்காளருக்குமிடையில் அத்திடந்த உறவு ஏற்பட்டு வருவது பற்றி பெரிய ஆச்சரியம் வடபகுதியில் நிலவி வருகிறது.

இவ்விருவருக்கும் எந்த வகையில் உறவு பிறக்க முடியும் என்பதை எண்ணி அம்மானும் ஆச்சரியக் கடலில் மூழ்கித் தவிக்கிறார்.

இந்தப் பிற்போக்குவாதியால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் பல விடுக்கப்படாமல் விசாரணைகளும் நடைபெற்றுவருவதாக அறிகிறோம்.

ஃ

கல்வி இலாகாவில் மலிந்து வரும் ஊழல்களுக்கு அளவு கணக்குக் கிடையாது போலும். ஆசிரிய கலாசாலையிலிருந்து பயிற்சி பெற்று 1958-ல் வெளியேறிய ஆசிரியர்கள் கடந்த பல வருடங்களாக நியமனமின்றித் தவித்து வருகிறார்கள். எத்தனையோ பள்ளிக் கூடங்களில் காலியான இடங்களிருந்தும் கூட இவர்கள் இதுவரை நியமனம் பெறவில்லை.

சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்துடன் கூடிய பலருக்கு ஆங்காங்கே நியமனங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களென்று இவருக்கு விசேட இடங்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. இதை நாம் எள்ளவும் ஆட்சேபிக்கவில்லை. ஆனல் வசதியுள்ள சிலருக்கு பின் தங்கியவர்கள் என்று பொய் நாமகரணம் சூட்டப்பட்டு நியமனங்கள் கொடுக்கப்பட்டு வருவதாக வதந்திகள் அடிபடுகின்றன. அண்மையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு யுவதிக்கு, மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த 'பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்' என்ற போர்வையில் மலை நாட்டுப் பள்ளி ஒன்றில் நியமனம் கொடுக்கப்பட்டதாக அறிகிறோம். இது உண்மையாயின் இவ்வநீதிகள் உடனடியாகத் தொலைந்து போகக் கூடிய வகையில் கல்வி இலாகா போதுமான விசாரணை செய்தாகவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**சலனப் படமெடுக்கும்...**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் சலனப் படங்கள் பிடிப்பதுண்டு. சிறிய அளவுடைய படப்பிடிப்புக் கருவிகளையே இதற்கு உபயோகிப்பதுண்டு. அண்மையில் கொழும்பு நகரத்தில் சில பகுதிகளை, குறிப்பாக ஒரு மேட்டிலிருந்து கொழும்புத் துறைமுகத்தையே சலனப் படம் பிடித்துள்ளார்களாம் சினர்கள். பெரிய அளவு (35 M. M.) சலனப் படப்பிடிப்புக் கருவியே இவற்றுக்காக உபயோகிக்கப்பட்டனவாம்.

உல்லாசப் பிரயாணிகளாயிருந்தால் இவர்களிடம் கைக்கு அடக்கமான சிறிய புகைப்படக் கருவியே இருந்திருத்தல் வேண்டும். பெரிய அளவு 'காமிரா'வை உபயோகித்துப் படம் பிடித்ததனல் சந்தேகம் மேலும் வலுவடைய ஏதுவாகிறது.

### தமிழ் காத்த ஆரையம்பதிக்கே அவமானம்

மட்டக்களப்பைச் சேர்ந்த ஆரையம்பதி தமிழ் உரிமைப் போராட்டத்தில் பெரும் பங்கு கொள்ளும் வீரர்கள் நிறைந்த கிராமமாகும். தியாகிகள் மத்தியில் புல்லுருவிகள் சிலர் தோன்றியதற்கொப்ப இங்கும் காட்டிக் கொடுக்கும் கயமைத்தனம் தோன்ற ஆரம்பித்துள்ளது கண்டு கலங்காதிருக்க முடியவில்லை. தமிழ் மொழியில் போதனையும் பரீட்சையும் இந்நாட்டில் இருக்கும்வரை தமிழில் கல்வி இலாகாவுடன் தொடர்பு கொள்ளலாம். இத்தகைய வாய்ப்பிருந்தும் பொ. பா. த. பத்திரத்தில் ஏற்பட்ட ஒரு பெயர் மாற்றம் காரணமாக ஆரையம்பதி முதலாம் குறிச்சியைச் சேர்ந்த ஒருவர் கல்வி இலாகாவுக்கு சிங்களத்தில் விண்ணப்பம் எழுதி தமிழில் ஒப்பமிட்டுக் கடிதம் அனுப்பியுள்ளார். இந்தக் கேவலமான செய்கையைச் செய்வதைவிட, பெயரையும் மதத்தையும் மாற்றிக் கொண்டால் இலகுவாக ஒரு உத்தியோகத்தையும் சம்பாதித்துவிடலாமே!


## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.

## கதிர் பன்னிரெண்டு

# அழகு மயக்கம்

உலகில் மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவனும், சொல்லைத் தனது உணர்ச்சி வெளிப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தி வருகின்றபோதிலும், சொற்கள் சில மனிதரின் வாயிலிருந்து வெளியாகும் போது ஓர் இறுக்கமும், அழுத்தமும் பெற்று விடுகின்றன. இவ்வளவுக்கும் அவர்கள் கையாளும் சொற்கள் ஒன்றும் புதுமையானதாகவோ, இன்னெருவர் கையாளாததாகவோ இருப்பதில்லை. ஆயினும், அவை வெளிப்படுத்தப்படும் முறையில் ஒரு தனித்துவத்தையும், முக்கியத்துவத்தையும் பெற்று விடுகின்றன...

'உன்னைப் பற்றிச் சில விடயங்கள் கேள்விப்பட்டேன்!.' —அண்ணன் அமைதியாக எதையோ கூற ஆரம்பிக்கின்ருன். பீடிகையே விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

இதயக் கடிகாரம் ஒரு கணம் செயலற்று நின்று, மீண்டும் அடித்துக் கொள்ள ஆரம்பிக்கின்றது...

'என்ன விடயமாக இருக்கும்...ஒருவேளை புவனம் பற்றிய செய்தியை அண்ணன் அறிந்திருப்பாரோ?....சே!.... அவருக்கு எப்படி இதெல்லாம் தெரியவரும்......இல்லாட்டி நான் படிப்பில் சற்றுக் குறைவாகக் கவனம் செலுத்திறன் எண்டு யாராவது அவருக்குக் கூறியிருப்பார்களோ?... சே!... அப்படியும் இருக்காது...அவருக்குப் போய் யார் இதெல்லாம் சொல்லப் போயினம்!...'

'என்னண்ணா?...' என்று புரியாமல் திகைப்புடன் கேட்கிருன்.

'என்னவோ ........உன்னைப் பற்றிச் சில விடயங்கள் கேள்விப்பட்டேன், அது உண்மைதானு?...'

—ராஜாவுக்கு மீண்டும் திகைப்பு மேவிடுகிறது...

'அண்ணை எதைக் கேட்கிருன்?...கோட்டிலே குற்றவாளியை உளற வைக்க வக்கில் போடும் சம்பந்தமற்ற கேள்வியாக, அண்ணனும் நானும் ஏதேனும் உளறுவேன் என்று ஆழம் பார்க்கிருனு?...'

—ராஜாவுக்கு முகத்தில் அசடு களை தட்டுகிறது. பரிதாபமாக அண்ணியைப் பார்க்கிருன்.

தொடர் கதை




'இதென்ன கதைக்கிறீங்க!...உங்களுக்கே என்ன கதைக்குறேமெண்டு புரியுதா?...பாருங்கவன் தம்பியை...பரிதாபமாக முளிக்கிறதை......கதைக்கிறதைத் தான் விளங்கக் கதையுங்கோவன்...உங்களுக்கு இன்னும் எப்படிக் கதைக்கிறதெண்டு தெரியாது...வயது வந்த பிள்ளையை இப்படியா திணறடிக்கிறது...'—என்று அவனுக்குச் சார்பாக அண்ணி வருகிருள். ராஜா நன்றியுடன் அவளைக் கனிவுடன் பார்க்கிருன்.

'இந்தாரும்!... நீர் கொஞ்சம் பேசாம இரும்...எனக்கு எப்படிக் கதைக்கிறதெண்டு தெரியும்...நீர் ஒண்டும் எனக்குப் புதிசா சொல்லித் தர வேண்டாம்!......'—அண்ணனின் குரல் கொஞ்சம் உஷ்ணமாக ஒலிக்கிறது!...

அண்ணியும் பிரமித்துவிடுகிருள். ராஜாவும் அவளும் ஒருவரை ஒருவர் பார்த்து விழிக்கிருர்கள்.

'இவருக்கு இண்டைக்கு என்ன வந்திட்டுது!...'

'ஏதோ முக்கிய விடயமாக அண்ணன் பேசப் போருர்... அதுவும் ஏதோ விபரீதமாக இருக்கப் போகிறது' என்று ராஜாவின் மனம் எண்ணிக் குழம்புகிறது.

அண்ணியும் நிலைமையை உணர்ந்து விடுகிருள்!...


'என்னண்டாலும் சாப்பிடேக்கயே கதைக்கிறது... பேசாம இப்ப சாப்பிட்டுட்டு அண்ணனும் தம்பியுமா எதை வேண்டுமெண்டாலும்... எப்படியெண்டாலும் கதையுங்கோவன்!......யார் வேண்டாமெண்டிச்சினம்!... இப்ப நீங்க சாப்பிட்டு எழும்பினுத்தானே நானும் ஆச்சியும் சாப்பிட முடியும்!...மத்தியானமும் பசிக்கேல்லயெண்டு சாப்பிடேல்ல...... இப்பவாவது கொஞ்சம் கெதியா சாப்பிடட்டும்!...... நீங்க கொஞ்சம் கெதியா சாப்பிட்டுட்டு எழும்புங்க.!'

'சாப்பாடு கிடக்கட்டும்... ஒரு நாளைக்கு ஒருவர் சாப்பிடாட்டி ஒண்டும் செத்திட மாட்டினம்!...நீர் கொஞ்சம் பேசாம வெளியில போம்... நான் கொஞ்சம் கதைக்கோணும்!...'—என்று அண்ணன் இரைவது, வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கும் ஆச்சியின் காதில் விழுகிறது.

'எனை புள்ளை!...... அங்க என்ன சத்தம்......அவங்க ரெண்டு பேரும் அப்படித்தான்... இப்ப கொஞ்ச

செம்பியன்செல்வன்

நாளா அமைதியாக இருந்தினம்...பேந்து தொடங்கிட்டினம் போல... அடிக்கடி சண்டைபிடிக்கிறது...பேந்து ஒருவரைக் காணுட்டி ஒருவர் அடிச்சுப் போறது......நீ அவங்களை மல்லுக்கு விட்டுட்டு இஞ்சை வா!...வயி



றும் பிள்ளையுமா இருக்கிற நீ அவங்களோட ஏன் இடிபடுருய்...அண்ணன் தம்பி பாடு!...நீ இப்படி இஞ்சை வா!.....—ஆச்சியின் குரல் பெரிதாக ஒலிக்கிறது. அண்ணி தாய்மை சுடர் விட அசைந்து அசைந்து செல்வது, அப்போது கூட ராஜாவுக்கு எழிலார் கோலமாக திகழ்கிறது.

'தம்பி!' — அண்ணனின் குரல் ஏன் இப்படி மாறிவிட்டது! முன்பிருந்த ரௌத்திரம் இப்போது ஓரளவு குறைந்துவிட்டது.

'என்னண்ணு....'

'நான் கேள்விப் பட்டது உண்மைதாஞ?......' —தான் கேள்விப்பட்டது பொய்யாக இருக்க வேண்டும் என்ற ஆவலும், அந்த விடயம் உண்மை என்று நம்ப முடியாமலும், அதனைத் தம்பியிடம் கேட்க முடியாமலுமிருக்க முடியாமல் அவன் திணறுகிருன்...

'என்னண்ணு இது, எதைப் பற்றிக் கேக்கிருய்!...'

'...உனக்கும் புவனத்துக்கும் என்னடா தொடசல்... நீ என்னமோ புவனத்தை... அது மாதிரி ஏதாவது...... இருக்கா?...'

'அண்ணு!...' —ராஜா எப்படி வீரிட்டுக் கத்துகிருன்.

'பயப்படாதை......அப்படி ஏதும் இருந்தா என்னிடம் சொல்லுடா!...'

—ராஜா மௌனம் சாதிக்கிருன்.

—நடராசாவுக்கு மனதிலே ஐயம் உறுதிப்படத் தொடங்கவே, உடல் ஆடுகிறது.

'தம்பி உண்மைதானுடா? என்னை வதைக்காதேடா!...' —என்று அவன் குரல் பரிதாபமாக ஒலிக்கிறது.

'ஓம் அண்ணை!...... நான் அவளை......'—ராஜா தனது பேச்சை முடிக்கவில்லை...

'பளீர்!...'

—ராஜா தனது முகத்தை இரு கைகளாலும் மூடிக் கொள்கிருன், காதுகளிலே வண்டின் ரீங்காரம் 'ஙொய்ங்...ங்...ங்...!— என்று அலை மோதுகிறது.

—ஆச்சியும் அண்ணியும் அங்கு ஓடி வருகிருர்கள்.

'என்னடா ....நடராசா!.... என்ன நடந்தது...ஏன் தம்பியை அடிச்சனீ!......ஏன்டா பேசாம இருக்கிருய்?...'

நடராசா தெருப் படலையைத் திறந்து கொண்டு, வெளியேறுகிருன்...

'அண்ணு!...'— எனக் கூவுகிருன் ராஜா.

'என்ன தம்பி நடந்தது!... ஏன் அண்ணு கோவிச்சுக் கொண்டு சாப்பிடாமல் போருர்......!'—என்கிருள் அண்ணி:

'என்னடா ராசா!......என்னடா உங்களுக்குள்ள நடந்தது?...... ஏன் அண்ணன் உன்னை அடிச்சவன்...எங்களுக்கு ஏன்ரா இருவரும் ஒளிக்கிறீங்க!...'

—ராஜா தன்னை ஆவலுடன் பார்த்து விசாரிக்கும் அந்த இரு அன்புருவங்களையும் கூர்ந்து கவனிக்கிருன்...

'ஒண்டுமில்லையே ......அண்ணன் ஏதோ கோபத்தில அடிச்சுப் போட்டார்...இதுக்குப் போய் இப்படிக் கவலைப்படுறீங்களே!...'—என்று கூறியவாறு, சரேலென்று அவ்விடத்தை விட்டு ராஜா நகர்கிருன்.

உணவுத் தட்டுகளினருகே விளக்கு துணை நின்று சுடர் சிந்துகிறது!...

* * *

ராஜா மேசையருகே உட்கார்ந்து, படிப்பில் ஆழ்ந்து போய் இருக்கிருன். மேசை விளக்கின் ஒளி சற்று தணித்து வைக்கப்பட்டிருக்கிறது. இரவின் நிசப்தத்துடன், மங்கிய ஒளி இன்ப சல்லாபம் புரிகிறது. அறையின் மூலையில் ஆச்சியும் அண்ணியும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிருர்கள.

ராஜாவுக்கு தாகம் எடுக்கிறது. வெளியில் வருகிருன்.

அண்ணன் சாய்மனைக் கதிரையில் கூரையைப் பார்த்தவாறு படுத்துக்கிடக்கிருன், விழிகள் மூடிக்கிடக்கின்றன.

அண்ணனைக் கடந்து சென்று, அடிப்படிக்குள் நுழைந்து நீரைக் குடித்துவிட்டு வெளி வர—

'தம்பி!—என்ற குரல் அவனைத் திடுக்கிட வைக்கிறது.

'தம்பி!.... ...என்னை மன்னித்து விடு! என்ர வாழ்நாளில் உன்னைக் கைநீட்டியடிக்காத நான், இண்டைக்கு உன்னை அடிச்சுப்போட்டன்...உன்ர குழந்தை முகத்தில என் கை பட்டா எப்படி வலிச்சிருக்கும்......நான் பாவி!...'

'என்னண்ணை, இது!...உனக்கில்லாத உரிமையா?...என்னைச் சின்ன வயதில தூக்கி வளத்து...எனக்காக எவ்வளவோ தியாகங்களைச் செய்யும் உனக்கா உரிமையில்லை.. ஏனண்ணை என்னைப் பெரிய வார்த்தைகளால் சித்திர வதை செய்யிருய்?...'

'அது சரி...நான் என்ன இருந்தாலும் உன்னை அடிச்சிருக்கப்படாது!...அது போகட்டும் நீ இன்னமும் புவனத்திலதான் எண்ணம் வைச்சிருக்கிறயா?...'

'நான் என்னண்ணை செய்ய!...என்னை மன்னித்து விடு!...'

'...தம்பி! ......உலகத்தில நாம் வாழேக்க எவ்வளவு பிரச்சினைகள் கடக்க வேண்டியிருக்கு!......உன் போன்ற வாலிப வயதில காதல் என்பது தவிர்க்க முடியாத தொன்ருகிறது!...ஆனுல்... அது தோற்றுவிக்கும் பிரச்சினைகளோ அனந்தம்!... அது உனக்கு நல்லாத் தெரியும்... அப்படிப்பட்ட அனுபவங்கள் பல உனக்குத் தெரியும் ...தம்பி அனுபவம் என்டேக்க எங்களுடைய அனுபவங்களை மட்டும் குறிக்கேல்ல... அது பிறருடைய அனுபவங்களையும் குறிக்கிறது!...தம்பி!... நீ அறிஞ்சவரை யாராவது காதலாவகப்பட்டிருக்கினமா?......... சொல்!...'

'அண்ணு!... உன்னை மறுத்துப் பேசுறதுக்கு மன்னிச்சுக்கொள்...என்னவாஞலும் என்ஞல் அவளை மறக்க முடியாது?...'

'தம்பி!...காதல் என்பது என்னவென்று எனக்குத் தெரியுமடா!......நான் ஏன் அப்போதே உன்னேடு கதைக்கேல்ல தெரியுமா?... அப்போது நான் இதைப் பற்றியெல்லாம் கதைத்திருந்தால்..எதிர்பாராத விசயமாக நான் கனகத்தில காதல் கொண்டது உன் அண்ணிக்குத் தெரிஞ்சா...எவ்வளவு வேதனைப்படுவாள் என்றுதானடா!......ஆமாம்...... நான் உன் அண்ணியைக் காதலிக்கிறேன்... அவள் மேல் உயிரையே வைத்திருக்கிறேன்........இது தான் காதலடா!...அப்படியாஞ நான் கனகத்தை விரும்பியது எண்டு கேக்கிறியா?...இப்ப நினைச்சாக் கூட எனக்கு வேடிக்கையாக... அப்பட்டமான பொய்யாக தெரிகிறது......நான் அப்

(13-ம் பக்கம் பார்க்க)



ரிஷி

அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00

விலை ½ ருத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:

T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# முற்போக்காளரின் மூடுதிரை கிழிந்தது

## மூவர்ணக் கொடியின் கீழ் ஒன்று படுவோம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டு விரக்தியடைந்து கொண்டிருந்த அயர்கட்சித் தலைவரான ஜோன் றெட்மண்ட் கடுஞ்சுகவீனமுற்ருர். அச் சுகவீனம் காரணமாக 15—1—1918ல் அவர் மகாநாட்டிலிருந்து விலகிக் கொண்டார்.

வட அயர்நாட்டிலுள்ள தெற்கு ஆமா பாராளுமன்றத் தொகுதியில் இடைத் தேர்தல் ஒன்று நடைபெறவிருந்தது. அத்தொகுதியில் பெரும்பான்மையோர் கத்தோலிக்கராயினும் புரட்டஸ்தாந்தரும் கணிசமான அளவு இருந்தனர். அமெரிக்காவுக்கு சின் பீன் தூதுவராகச் சென்றிருந்த டாக்டர் பட்றிக் மக்காட்டன் சின் பீனின் வேட்பாளராக நியமிக்கப்பட்டார். இளையாளர்கள் தமது வேட்பாளரை அயர் கட்சி வேட்பாளர் சார்பாக மீளப்பெற்றனர். தேர்தல் பிரசாரக் காலத்தில் பலத்த கைகலப்புகள் ஏற்பட்டன. இளையாளர்களாலும் அயர்கட்சியினராலும் சின் பீன் வாதிகள் நையப்புடைக்கப்பட்டனர். இவ்வக்கிரமங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அயர் தொண்டர் படைக் கம்பனிகள் பல தெற்கிலிருந்து வரவழைக்கப்பட்டன. இவ்வாருன குழப்ப நிலையில் 1—2—1918ல் நடைபெற்ற தேர்தலில் அயர் கட்சி வெற்றி பெற்றது. எனினும், வட அயர் நாட்டு மக்கள்—கத்தோலிக்கரும் புரட்டஸ்தாந்தரும், சின் பீன் வாதிகளினதும் தொண்டர் படையினரதும் தேசிய உணர்ச்சியையும் கட்டுப்பாட்டையும் காண்பதற்கு இந்தத் தேர்தல் வழிவகுத்தது என்ருல் மிகையாகாது.

பல தந்திரங்களால் அயர் மக்களைப் பணிய வைக்க முடியாது போகவே நாட்டில் பஞ்சம் ஒன்றை ஏற்படுத்த ஆட்சியினர் முற்பட்டனர். அயர் நாட்டிலிருந்த உணவுத் தானியங்களை இங்கிலாந்துக்கு ஏற்றினர். இதைக் கண்ட சின் பீன் இயக்கத்தினர் மக்களைக் கமத்தொழிலில் ஈடுபடும்படி சிற்றூர், பேரூர் எங்கும் பிரசாரம் செய்தனர். கட்டாந் தரைகளாக இருந்த காணிகளைப் பங்கிட்டு நிலமற்றவர்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்தனர். வசூல் செய்த பணத்தைக் காணிச் சொந்தக்காரர்

## இராணுவத்தின் அடக்குமுறை தலைவிரித்தாடியது

களுக்குக் கொடுத்தனர். தாமும் கமக்காரர்களுடன் சேர்ந்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். குதிரைகளைச் செலுத்திக் கொண்டும் தோளில் கலப்பைகளைக் காவிக்கொண்டும் மூவர்ணக் கொடிகளைப் பறக்கவிட்டுக் கொண்டும்முரசம் அறைந்து கொண்டும் தொண்டர்கள் வயல்களுக்குச் சென்றனர். இப்படிச் செல்வது சட்ட விரோதம் என்று கூறி ஆட்சியாளர் கிளயா மாவட்டத்தில் 23 தொண்டர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில்நிறுத்தினர். அத்தொண்டர்களோ தாம் ஆங்கில ஆட்சியினரின் நீதிமன்றங்களை மதிப்பதில்லை என்று கூறி நீதிமன்றத்தை விட்டு வெளியேறினர். எனினும் அவர்களை மீண்டும் கைது செய்ய ஆட்சியினர் அஞ்சினர்.

ஒரு முறை, இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்வதற்காக ஆயத்தமாக இருந்த ஆயிரக்கணக்கான பன்றிகளை சின் பீன் இயக்கத்தின் உணவு அதிபரான டயாமுட் லிஞ்ச் தொண்டர்களோடு சென்று பறித்தெடுத்தார். அப்பன்றிகளைக் கொன்று உள்ளூர் ஊன் விலைஞருக்கு விற்ருர். சேர்ந்த பணத்தைப் பன்றிகளின் உரிமையாளர்களுக்குக் கொடுத்தார். இச்செயல் காரணமாக லிஞ்ச், கைதாகி இரண்டு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

சிறையிலிருக்கும்போது அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் உத்தரவு வந்தது. அதனுல், சிறைவாசம் அனுபவிக்கும் காலத்திலேயே அவர் தனது காதலியை மணம்புரிய அனுமதி கோரினர். அனுமதி மறுக்கப்பட்டது. ஆனல் லிஞ்ச் விட்டுக்கொடுக்கவில்லை. தனது காதலியையும் ஒரு சில நண்பர்களையும் ஒரு மதகுருவையும் ஒருநாள் சிறைச்சாலைக்கு அழைத்து அதிகாரிகளுக்குத் தெரியாமலே திருமணம் செய்து கொண்டார். இந்நிகழ்ச்சி ஆட்சி

## சிறையில் இருந்தவர் செயலாளர் ஆனார்

யாளரை மிகவும் ஆத்திரத்துக்குள்ளாக்கியது. அதனுல் அடுத்தநாளே லிஞ்ச் நாடு கடத்துவதற்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

சிறைச்சாலைகளில் அடைக்கப்படும் கைதிகள் உண்ணுவிரதம் இருப்பது இப்பொழுது மிகவும் சகசமாகிவிட்டது. இதைத் தடுக்க முடியாத ஆட்சியாளர் அவர்களை விடுதலை செய்து, திடகாத்திரமாக வந்ததும் மீண்டும் கைது செய்து சிறை வைக்கும் தந்திரத்தைக் கையாளத் தொடங்கினர். இந்த 'பூனையும் எலியும்' நாடகம் பல காலமாக நடைபெற்று வந்தது. பெப்ரவரி மாத மத்தியில் மௌன்ற்ஜோய் சிறைச்சாலையில் 28 கைதிகள் உண்ணுவிரதம் இருந்து கொண்டு வந்தனர்.

சங்கடத்தில் மாட்டிக் கொண்ட அரசாங்கம் உண்ணுவிரதத்தைப்பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளிற் பிரசுரிக்கப்படாது என்று உத்தரவிட்டது. 28 அயர் பத்திரிகைகளின் வெளிநாட்டுச் சுற்ருேட்டத்தைத் தடைசெய்தது. கிளயா மாவட்டத்தை இராணுவப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியது.

கடுஞ் சுகவீனமுற்றிருந்த றெட்மண்ட் 6—3—1918ல் மரணமானர். அவருடைய மரணத்தோடு பாராளுமன்றத்துவமும் பரலோகம் சென்றது. ஆங்கில ஆட்சியினரை நம்பி நம்பி மோசம் போனவர் றெட்மண்ட். தனது பேச்சு வன்மையால் அயர்கட்சியைத் தம் வசம் ஈர்த்ததுபோல் ஆங்கில ஆட்சியையும் தம்வசம் கவரலாம் என்று எண்ணி எண்ணி ஏமாந்தவர் அவர். இறந்த அவருக்கு ஒரு சதாரண தொண்டர் படை உறுப்பினருக்குக் கிடைக்கும் இறுதி மரியாதைகூடக் கிடைக்கவில்லை. அவருடைய மரணத்தைத் தொடர்ந்து ஜோன் திலன் அயர் கட்சியின் தலைவரானர்.

ஓர் இனத்தின் வாழ்வும் இறப்பும் ஒரு தனி மனிதனின் வாழ்வையும் இறப்பையும் போன்றதல்ல என்ற உண்மையை உணர்த்தும் பாணியில் சின் பீன் நாடெங்கும் பிரசாரம் செய்து கொண்டிருந்தது. செயின்ற் பட்றிக் திருநாளைக் கொண்டாடுமுகமாக 17—3—1918ல் இளையாளர்களின் கோட்டையான பெல்பஸ்ற்றில் தலைவர் டி வேலரா பேசுவதாக அறிவிக்கப்பட்டது. அக் கூட்டத்திற்கு உடனேயே ஆட்சியாளர் தடையுத்தரவு பிறப்பித்தனர். இதை அறிந்த சின் பீன் வாதிகள் ஒரு தந்திரத்தைக் கையாண்டனர். முதல் நாள் இரவு 11-00 மணிக்கே கூட்டத்தை ஆரம்பித்தனர். நள்ளிரவு ஆகும் வரை பொலீஸாரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு மணித்தியாலமாக டி வேலரா ஆட்சியாளருக்கு எதிராக வசை மாரி பொழிந்து, போர்ப்பறை அறைந்தார். நள்ளிரவானதும் பொலீஸார் குண்டாந்தடிகளால் கூட்டத்தைத் தாக்கத் தொடங்கினர். அவர்கள் மேடையைத் தாக்க விரைந்ததும் தலைவர் ஏமன் டி வேலரா,

> "நூற்றுண்டுகளாக அழியாதிருந்த இன உணர்வை இன்று பிறந்த குறும்வெவ்கள் ஒழித்துவிட முடியாது"

என்று முழங்கினுர்.

றெட்மண்டின் மரணத்தால் காலியான வோட்டபட் பாராளுமன்றத் தொகுதிக்கு 22—3—1918ல் தேர்தல் நடைபெற்றது. றெட்மண்ட் குடும்பத்தினருக்கு அப்பகுதியிலிருந்த செல்வாக்கு காரணமாக றெட்மண்டின் மகன் சின் பீன் வேட்பாளரைத் தோற்கடித்தார். தேர்தல் காலத்தில் றெட்மண்ட் குடும்பத்தின் கையாட்கள் சின் பீன் வாதிகளை அடித்து நொருக்கினர். இந்தத் தேர்தலில் றெட்மண்டின் மகன் பெற்ற வெற்றி அயர் கட்சிக்குக் கிடைத்த வெற்றியல்ல என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரிந்துதான் இருந்தது.

ஆட்சியாளரின் கொடுமைகளுக்கு எல்லையே இருக்கவில்லை. இராணுவப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட கிளயா மாவட்டத்தில் இராணுவத்தினர் தெருவில் சென்ற பலரைப் படைத்துப்பாக்கிச் சனியன்களால் தாக்கினர். அதன் காரணமாக 28—3—1918ல் ஒரு வாலிபர் உயிர் நீத்தார். சின் பீன் அனுதாபிகள் பலரை ஆட்சியினர் கைது செய்து கொண்டேயிருந்தனர். மார்ச் மாதத்தில் மாத்திரம் 213 பேர் கைதானுர்கள்.

(வளரும்)

---

## கருத்தரங்கில் காடைத்தனம்

தமது கொள்கைக்கு மாறுன கருத்துக்கள் தெரிவிக்கப்படும் போது பொறுமையோடு பண்பாக நடந்துகொள்ள முடியாதவர்கள் ஒதுங்கியிருத்தல் நல்லது. கொழும்பு தமிழ் எழுத்தாளர் மன்றம் நடாத்திய கருத்தரங்கத்தில் முற்போக்கு வாதிகள் என்று தம்பட்டம் அடிப்பவர்கள் கொதித்தெழுந்து தமது பிற்போக்குத்தனத்தை வெளிக்காட்டியதையும் காடைத்தனம் புரிந்ததையும் பார்க்க முடிந்தது. முற்போக்கு என்ருல் என்ன என்பதை அன்று பலரும் உணரக் கூடிய வாய்ப்பும் கிட்டியது.

'தமிழ் மொழி வாழ்வில் எழுத்தாளர் கடமை' என்ற பொருளை நடுநாயகமாக வைத்து பலதரப்பட்ட எழுத்துலக மன்னர்களை அழைத்து வந்து, அவர்களுடைய கருத்து மோதலை உண்டாக்கி வைக்க கொழும்பு தமிழ் எழுத்தாளர் மன்றம் விரும்பியது. கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் 19-5-63 ஞாயிற்றுக்கிழமை மாலையில் இந்தக் கருத்தரங்கம் பண்டிதர் கா. பொ இரத்தினம தலைமையில் ஆரம்பமாகியது.

விவேகானந்த சபை மண்டபம் இதுவரை பல கருத்தரங்கங்களைச் சந்தித்திருந்த போதிலும், அன்று கூடிய கூட்டத்தையும், கருத்து மோதலால் எழுந்த ஆத்திரக் குமுறலையும் எப்பொழுதும் சந்தித்ததே யில்லை என்று கூறலாம். தலைவர் உரையின் போது பிரதேச உரிமையும், ஆட்சி உரிமையும் இல்லாத நிலையில் தமிழ் வாழவோ வளம் பெறவோ முடியாது என்பதை வலியுறுத்தி கூறிவைத்தார். முடிவுரையில் திர்மானிக்கப்பட வேண்டிய முடிவு ஆரம்பத்தலைமையுரையில் பட்டவர்த்தனமாகத் தீர்மானிக்கப்பட வேண்டிய தில்லை.

கருத்தரங்கத்துக்குத் தலைமை தாங்கிப் பேசுபவர், பிரச்சினைகளைக் கிளறிவிட்டு, பின் வரும் உரையாளர்களிடம் கருத்தை அலசவிட்டிருக்கலாம்.

சொற் சிறப்பு, மொழியுணர்வுடன் கூடிய செல்வி சற்சொருபவதி நாதன் எழுத்துலகம் இலக்கணத்தைப் புறக்கணிப்பதைச் சாடினுர். சிறுமைகண்டு பொங்கும் இதயமும், ஒற்றுமையுணர்ச்சியும் எழுத்தாளர்களுக்கு அவசியம் என்பதையும் வற்புறுத்தினுர்.

திரு. கா. சிவத்தம்பி பேசும் போது நாசுக்காகப் பேசினுர். இடத்துக்கேற்ப பொருளுக்கேற்ப பேச்சு சமாளிக்கப்பட்ட தென்றே கூற வேண்டும். திரு இ. இரத்தினமும் தத்துவார்த்தமாகப் பேசி முடித்தார்.

"எழுத்தாளனுக்கு எவரும் புத்தி சொல்லத் தேவையில்லை" என்ற வாதத்தில் கருத்தைத் திருப்பிய திரு. க. கைலாசபதி தமது பேச்சில் 'பொடி' வைத்துச் சாட ஆரம்பித்தார். ஒரு எழுத்தாளனின் எழுத்துக்களின் தன்மையை எடை போட்டு விமர்சிக்கும் 'பிரபல' விமர்சகரான இவர் தமக்கே ஒவ்வாத கருத்தைப் பட்டவர்த்தனமாகக் கூறியது அதிசயம்தான். எழுத்தாளர்கள் 'தான் தோன்றீஸ்வரர்'களா? எழுத்தாளனுக்குப் புத்தி சொல்லத் தேவையில்லை என்ருல், 'விமர்சகர்' என்ற போர்வையையும் தாஞகவே உதறி எறிந்துவிடல் வேண்டும்.

நூல்கள் எழுதுவது, தங்கள் கருத்தை எந்தக் கோணத்தில் வெளிப்படுத்துவது போன்ற துறைகள் எப்படியோ ஒருவகையில் மனித சமுதாயத்துக்குப் புத்தி புகட்டுவதாகும். நூல்களை வாசிக்காத எவனும் எழுத்தாளனுக முடியாது. தனது கருத்துக்களை வெளியே எடுத்துரைக்க விரும்புபவன் எவனும் ஏதோ ஒரு துறையில் வாசகனுக்குப் புத்தி கூறத்தான் முனைகிறுன். கார்ல் மாக்சின் நூல்களைக் கற்றதனுல் தான் முற்போக்கு வாதம் பேச முடிகிறது பலருக்கு. அந்தக் கோணத்தில் இவர்களை இழுத்துவிட்டது மார்க்சின் கருத்துச் செறிந்த நூல்கள் தானே! அப்போது கார்ல் மார்க்ஸ் புகட்டிய புத்தி தானே மூளைக்கு ஏறியிருக்கிறது.

பல்கலைக் கழக விரிவுரையாளராகிய இவர், மேடையில் கூறத் தகாத சொற்பிரயோகங்களை (சாதாரண நிலையில் உள்ள கல்வி அறிவற்றவர்களே கூறத் தகாத சொற்களை) தாராளமாக எடுத்தாண்டார். இதுதான் இவர்கள் கூறும் மண்வாசனையும், பிரதேசவழக்கும் போல் தெரிகிறது.

திரு. கைலாசபதியின் பேச்சில் கண்ட கருத்துக்கள் சிலவற்றை தலைமை வகித்த பண்டிதர் இரத்தினம் சாட ஆரம்பித்தார்.

முற்போக்கு வாதிகள் என்று தம்பட்டமடிக்கும் எல்லோரிடமும் மலிந்து கிடக்கிறது ஒரு பிற்போக்குத் தன்மை. தங்களுடைய கருத்துக்களின் மீது விவாதம் ஏற்பட்டு, அதே கருத்துக்கள் சிதறடிக்கப்படக் கூடிய நிலை உண்டாகியதும், "காய்... கூய்" என்று பலத்த சப்தம் போட்டு நிலைமையைச் சமாளிப்பது, கொம்யூனிஸ்டுகளின் வாதப் பிரதிவாதங்களில் கண்கூடாக நாம் காணக் கூடிய முக்கிய அம்சமாகும். மிஞ்சிப் போனுல்

(13 ம் பக்கம் பார்க்க)


### ப்ரம்மீ கேசரஞ்சன தைலம்



கண்குழி, கண் எரிச்சல், தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, நும்மல், முடி விழுதல், நரையுண்டாகுதல், முதலிய வியாதிகளை நீக்கி தலைமயிர் அழகான கருநிறத்தில் இடநெருக்கமாக வளரச்செய்கிறது. அகாலத்திலுண்டாகும் நரை மயிரை முன்போல் கறுப்பு நிறமாக மாற்றுகிறது. இந்தத் தைலம் தொடர்ந்து பாவித்து வந்தால் 100வயதானாலும் "நரையும்" "வழுக்கையும்" உண்டாகாது [illegible]

A. 6 அவுன்ஸ் போ 3-50

அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

இந்த விசேஷத் தயாரிப்பிலும் மேலே சொன்ன எல்லாக் குணங்களும் அப்படியே அமைந்திருக்கிறது [illegible]

B. 6 அவுன்ஸ் போ: விலை 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. என். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.

எஸ். என். குரு மெடிக்கல் ஹோல், 50 புதுச் செட்டித் தெரு, கொழும்பு 13.

# வள்ளலாராக புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

## கிருபானந்தவாரியார் கதை அமைக்கிருர்

## ஏ. கே. வேலன் தயாரிக்கிருர்



அருள்ஜோதி இராமலிங்க அடிகளாரின் வரலாற்றைத் திரைப்படமாக்க கவிஞர் ஏ. கே. வேலன் திட்டமிட்டுள்ளார். இராமலிங்க அடிகளாக புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் ஒப்பந்தம் செய்யப்பட விருக்கிருராம்.

வடலூரில் சமாதியடைந்த வள்ளலார் இராமலிங்கரின் வாழ்க்கையில் ஏற்பட்ட பல சுவையான அம்சங்களை கிருபானந்தவாரியார் தொகுத்துள்ளாராம். இதைப் பார்த்ததுமே 'வள்ளலார்' படத்தை அற்புதமாகத் தயாரித்துவிடுவது என்று அருணுசலம் ஸ்டுடியோ உரிமையாளர் கவிஞர் ஏ. கே. வேலன் திட்டமிட்டு விட்டாராம்.

ஆஸ்திகக் கருத்துக்கள் நிறைந்த வள்ளலார் வாழ்க்கை விநோதங்களில் பகுத்தறிவுக்கு ஒவ்வாத, புரட்சி

**நமது சென்னை நிருபர்**

நடிகரின் கருத்துகளுக்கு முரண்பட்டதாக ஏதாவது இருப்பின் புரட்சி நடிகர் நடிக்க ஒப்புதல் அளிக்க மாட்டார் என்றே தெரிகிறது. எம். ஜி. ஆர். தனது ஒப்புதலை அளிக்கு முன்னர், திரைக்கதை அமைப்பை நன்கு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுள்ளாராம்.



அருணகிரிநாதர்

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரின் வாழ்க்கையைப் படமாக்க பாபா ஆர்ட் புரொடக்ஷன்சார் தீவிர முயற்சிகள் செய்துவருகின்றனராம். 'பட்டினத்தார்' படத்தில் பட்டினத்தாராகத் தோன்றி இசை வெள்ளத்தால் ரசிகப் பெருமக்களைக் கவர்ந்த டி. எம். சௌந்தரராஜன் 'அருணகிரிநாத'ராகத் தோன்றுவாராம். இப்படத்தில் இடம் பெறும் திருப்புகழ் பாடல்களுக்கு ஜி. ராமநாதன் இசை அமைக்கிருராம். ராமண்ணு டைரக்ஷனில் இப் படம் வளரும்.

### மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்

கொஞ்சக் காலமாக சமூகப் படங்களையே பார்த்து அலுத்துப் போன இலங்கை ரசிகர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை ஊட்டக் கூடியவகையில் 'மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்' திரையிடப்பட்டுள்ளது.

மந்திர ஜாலம், கேந்திர ஜாலம், தந்திரக் காட்சிகள் ஆகிய பல அதிர்ச்சியூட்டும் சம்பவங்களைச் சேர்த்துத்



இப்பொழுது இலங்கையில் ஓடிக்கொண்டிருக்கும் ஏ. டி. எம். 'தோழன்'படத்தில் மறைந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இப்படித் தோன்றுகிருர்.

தொகுத்து அஞ்சலி பிக்சர் சார் இப்படத்தை உருவாக்கியுள்ளனர்.

மகேந்திர சக்தியைத் தனது உடமையாக்கிக் கொண்ட ராஜகுருவாக எம். ஆர். ராதா புதுவேடம் புனைந்துள்ளார். ஆட்சி பீடத்தில் அமரப் போகும் இளவரசனை சூழ்ச்சி செய்து தேச சஞ்சாரம் அனுப்பிவிட்டு, அவனுடைய காதலியைத் தான் அடைய முயற்சிக்கிருன். காம ஆர்வத்தால் காதலில் கட்டுண்ட காதலர்களுக்கு மனிதர்கள் மட்டுமல்ல தேவர்களும் வஞ்சனை புரிகிருர்கள்.

இளவரசனுக ஜெமினி கணேசனும், அவரின் காதலியாக அஞ்சலிதேவியும் தோன்றுகின்றனர். ஞான சவுந்தரியைப் போன்று இரு கைகளையும் இழந்து கானகத்தில் விலங்குகள் மத்தியில் தன் குழந்தையுடன் வாழ்க்கை நடத்த ஆரம்பித்ததும் ரசிகப் பெருமக்களுக்கு உற்சாகமளிக்கக் கூடிய நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன.

குழந்தைகளுக்கு அனுசரணையாகவும், கையிழந்த தாய்க்கு உதவியாகவும் ஒரு குரங்கு நடிக்கிறது. குழந்தையை 4 சிறுத்தைகள் வளைத்துக்கொண்டு விடுகின்றன. இந்நேரத்திலும் குரங்கின் தந்திரங்களைக் காணலாம்.

4 குள்ளர்கள் ராமராவுடன் சேர்ந்து சிரிப்பூட்டுகிருர்கள். வேறு பல விநோத நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

கலை நுணுக்கம் செறிந்த படப்பிடிப்பு பார்ப்பவர்களுக்குப் பரவசமளிக்கும். ஆதிநாராயணராவின் இசை வெள்ளம் காதுகளுக்கு இனிமை தரும். ஒரு திருப்பத்திற்காக இப்படத்தை ஒரு முறை பார்க்கலாம்.

—பானு

### மட்டக்களப்பில் நாடகவிழா

இலங்கையில் தமிழ்பேசும் இனம் அனுபவித்து வரும் தொல்லைகளை ஆதாரமாக வைத்துப் புனையப்பட்ட 'இலங்கையில் நாம்' என்ற நாடகத்தையும், வீரபாண்டியக் கட்ட பொம்மன் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டதாக உள்ள அம்சங்களைக் கொண்ட "மானம் காத்த மறவன்" என்ற நாடகத்தையும் இம்மாதம் 7-ம் 9-ம் தேதிகளில் மட்டக்களப்பு நகரமண்டபத்தில் லடிஸ் வீரமணி குழுவினர் நடிக்கவிருக்கின்றனர்.

இந்த நாடகங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் நடிக்கப்பட்டு பலருடைய பாராட்டுக்களையும் பெற்றவை. மட்டக்களப்புக்கு லடிஸ் வீரமணி குழுவினர் இம்முறைதான் நாடகம் நடாத்தச் செல்லுகின்றனர். லடிஸ் வீரமணியின் நடிப்புத் திறனையும் மட்டக்களப்பு மக்கள் காண ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது.

நடிப்புத்துறையில் பரிசுகள் பல பெற்ற நடிகரான திரு. ராஜேஸ்வரன் இந் நாடகங்களில் நடிக்கிருர். அவருடன் உதயகுமார், கலைச்செல்வன், ஏ. எஸ். ராஜா, பி. ஏ. மாறன், எம். கிருஷ்ணன், எஸ். எம். என். தாஸீர், ஸ்டீபன், நவரெட்ணம், சிக்கந்தர், கணேஷ், பாபு ஆகியோருட குமாரிகள் ஏ. ஜெயகௌரி, எஸ். கே. விஜயலெட்சுமி, ரத்னபிரபா, ஆர். மணிமேகலை, செல்வராணி ஆகியோரும் நடிக்கின்றன. இவ்விரு நாடகங்களிலும் லடிஸ் வீரமணி முக்கிய பாகமேற்று நடிப்பதுடன் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றுள்ளார்.



'இலங்கையில் நாம்' என்ற நாடகத்தில் வெறியர்களின் காடைத் தனத்துக்குப் பலியான கதாநாயகனின் தோற்றம்.

### கவிஞர் ஆனந்தனின் பாடல்கள்

தமிழ்த் திரை உலகில் முதன் முதல் பாடல்களை எழுதிய இலங்கையைச் சேர்ந்த கவிஞர் திரு. ஈழத்து இரத்தினம் ஆவார். 'எல்லோரும் இந் நாட்டு மன்னர்' படத்தில் முதல்பாடலாக அமைந்திருப்பது திரு. ஈழத்து இரத்தினத்தால் எழுதப்பட்ட பாடலாகும். ஜுபிடரின் 'முரடன் முத்து' வெளிவந்தால் மேலும் சில பாடல்களையும் கேட்கலாம்.

சென்னை சாரதி பிலிம்சாரின் பெயரிடப்படாத படம் ஒன்றுக்கும் வேறு இரு படங்களுக்கும் கவிஞர் காசி. ஆனந்தன் பாடல்கள் எழுதியுள்ளாராம். இரு பாடல்கள் ஒலிப்பதிவாகியுள்ளனவாம். விரைவில் விபரம் தருவோம்.



குறும்பு கொப்பளிக்கும் இள நகையும், கரும்பு வில்லோன் கணையினையொத்த கருவிழிகள் கூறும் கதையும், இரும்பு நெஞ்சங்களையும் உருக்காதோ? ராமனை மயக்கிய சீதையோ? காமனை வரித்த ரதிதானே? சினிமாஸ் திரைகளில் விரைவில் "சீதா—ராம கல்யாணம்" நடைபெறப் போகிறது. இந்தக் கன்னடத்துப் பைங்கிளி என்ன வேடம் புனைந்து, எவரை வதைக்கிருர் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

### வாழ்க மணமக்கள்



கொழும்பு கிங்ஸ்லி படமாளிகை நிர்வாகி திரு. சந்ததயா அண்மையில் செல்வி நாகேஸ்வரியை திருமணம் செய்துகொண்டார். கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் நடைபெற்ற இத் திருமணத்துக்கு சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. கே. குணரெத்தினம், திரு. எம். இராமேஸ்வரம் ஆகியோருடன் இலங்கை சினிமா உலகப் பிரமுகர் பலரும் வருகை தந்து சிறப்பித்தனர்.

# நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

போது கனகத்தில கொண்டது வெறும் வெறி...அழகு மயக்கம்... பருவ வேட்கையடா!...நான் உண்மையில் கனகத்தை காதலிச்சிருந்தா உன் அண்ணியை இப்படி நேசிக்க இயலாது......தம்பி, டேய் காதல் என்பதே பொய்யடா!...ஒருவன் மணமான பின்புதாண்டா, உண்மையிலேயே ஒருத்தியைக் காதலிக்கத் தொடங்குகிறான்...'

'அண்ணா எனக்கும் இதைப் பற்றி ஓரளவு தெரியும்...காதல் என்பது தன்னைப் பொறுத்தவரை தெய்வீகம்...பிறரைப் பொறுத்தவரை பாவச் செயல்...நீங்களும் ஒரு காலத்தில்......'

—தம்பியா இப்படிப் பேசுகிறான்? நடராசா செயலற்று நிற்கிறான்:

'தம்பி!...சொல்!......மிகுதியையும் சொல்லி முடி!...நீ கேட்கிறாயே நீங்கள் காதலிக்கேல்லையோண்டு!. தம்பி! தம்பி:...அது தவறு எண்டு உணர்ந்த பின் உன்னை அந்த வழியில விட நான் என்ன மிருகமாடா!...'

'...அப்படியானா நான் புவனம் மேல்கொண்டது அழகு மயக்கம் என்கிறாயா?...'

'ஆமாம்!....தம்பி!....அது ஒரு பகற்கனவு!...அது விரைவில் கலைந்துவிடும்;..அப்புறம் எதிர்ப்படுவது எல்லாமே வெறுமை!...'

'அண்ணா!... நான் புவனம் மேல் கொண்டது வெறும் அழகு மயக்கம் என்று ஏன் சொல்லுகிறாய்?...இதில் அவளும் என்னை விரும்பும் போது...எங்களை ஏன் பிரிக்க முனைகிறாய்?...

'தம்பி!...நான் உன் விருப்பத்தை — உன் சுகத்தை — தடை செய்வேன் என்று எப்படியடா எண்ண உன் மனசில் இடம் வந்தது...உன் ஆசை எப்படியடா நிறைவேறும்?...'

'இதிலென்ன தடங்கலண்ணா வரப்போகுது!...... அவளும் என்னை விரும்பேக்க...'

நடராசா திடுக்கிடுகிறான். தன்னைக் கனகம் காதலிக்காததைச் சுட்டிக்காட்டுகிறானா?

'அவள் விரும்பினாலும் அவள் பெற்றோர்கள் சம்மதிக்க வேணுமே?...'

'அவளும் வயது வந்த பெண்...அவளைப் பெற்றோர் எப்படித் தடை செய்ய முடியும்!...'

'தம்பி! உன் காதல் இவ்வளவு தூரத்துக்கு வந்திட்டுதா?' தம்பி!...அவர்கள் குடும்பம்..அவளின்ர அக்கா.. ஓடிப்போனவள்......அங்கு பெண்ணெடுத்தால்... ...உலகம் நம்மைத் தூற்றும்... கேலியாச் சிரிக்கும்!...'

'அண்ணா!...யாரோ செய்த பாவத்துக்கு, யார் மேலேயா பழியப் போடுவது...பாவம்! ..:புவனம் உனக்கு என்ன தீங்கண்ணா செய்தாள்!...'

'...எனக்கொரு கெடுதலும் அவள் செய்யவில்லை... ஆனால் உன் ஆசை...அவள் பெற்றோரின் எதிர்ப்பு...ஊரின் வசை... இதற்கிடையில் உன் அண்ணியின் ஆவல்...இத்தனைக்கும் நான் பைத்தியம் பிடிக்காமல் இருக்கிறதே பெரிய ஆச்சரியம் தாண்டா!...

'அண்ணா!........அண்ணிக்கு என்னண்ணை விருப்பம்?'

'அவள் உன்னையும் சரசுவையும் முடிச்சுப் போட்டு விட்டாள் போல இருக்கு!... சரசுவுக்கும் உன் மேல விருப்பம் போல இருக்கு!... அண்ணியிடம் அடிக்கடி உன்னைப் பற்றி சரசு நிரம்ப விசாரிப்பாளாம்......என்ன செய்வது உன் விருப்பம் எப்படியோ?... ஆனால் நான் ஒன்றுமட்டும் சொல்லுவன்...

'வாழ்க்கையில தவறுகளே நடக்காம இருக்க முடியாது. ஆனால் நாம் தவறுகள் நேராதவண்ணம் விழிப்பாக இருக்க வேண்டும்...அப்படி தவறு நடந்தாலும் மற்றாக்களின்ர வாழ்க்கையைப் பாத்தாவது உணர்ந்து நடக்க வேண்டும்...உனக்கு நான் தவறாக நடந்து பெற்ற அனுபவம் கைவிளக்காகட்டும்...'

ராஜா இருளின் அமைதியில் தானும் ஆழ்ந்து போய் நிற்கிறான்.

* * *

பாலாவும், அவனும் கல்லூரி விட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். கல்லூரி வீதியில் காலடி வைக்க வழக்கமாகப் பாய்ந்து வரும் 'ரோயல் மெயில்' 'விர்' ரென்று விரைந்து அவர்களைக் கடந்து செல்கின்றது. கல்லூரி விட்டு மாணவிகள் வெண்புறாக்களாக வந்து கொண்டிருக்கிறார்கள்...

இருவரும் மௌனமாக வருகிறார்கள்.

'ராஜா!...

'என்ன, பாலா!...'

'ஒன்றுமில்லை!...' — என்று தன்னைச் சமாளிக்கும் பாலாவின் கண்கள் கல்லூரி மாணவிகளை என்றுமில்லாத செயலாக மேய்கின்றன!...கண்களிலே ஒளி மயக்கம்!...

'பாலா!...... உனக்கென்ன நடந்துவிட்டது?

'ஒன்றுமில்லை!...ராஜ்!...'

'இல்லை... இல்லை'... உன்னிடம் இன்டைக்கு நான் மாற்றத்தைக்காண்கிறேன்.. உண்மையைச் சொல்... உனக்கு என்ன நேர்ந்து விட்டது!...'

'ராஜா!...... ஒருத்தியைக் கண்டவுடன்...பேசிப் பழகு முன் கொள்ளும்...லயிப்பை என்னண்டடா சொல்வது?'

'அழகு மயக்கம்!'—ராஜாவின் நெஞ்சம் துணுக்கிடுகிறது. யார் வார்த்தைகள்?

'அழகு மயக்கம்!'— இதழ்கள் சொற்களை உதிர்க்க, பாலா சிந்தனையிலாழ்ந்து விடுகிறான்.

'ராஜா...ஒருத்தியைப் பார்க்கும்போது... அவளை விட அழகிகளைப் பார்க்கும் போதும் ஏற்படா உணர்வு., விட்டகுறை தொட்டகுறை என்பது போல் நெஞ்சிலே பதிந்து விடுவது ... அழகு மயக்கமாடா?... ராஜா!... எனக்கு அவளைப் பார்த்தவுடன் அந்த வித உணர்வே எழவில்லையடா!... ஏதோ அன்புணர்ச்சிதான் தோன்றுகிறது!... என் பொருள் அவள் என்கிற பரிவுணர்ச்சிதான் தோன்றுகிறது...' —பாலா கனவில் உதிர்ப்பது போல் சொற்களை உதிர்க்கிறான். ராஜா தன்னை வியப்புடன் விழுங்குவதையும் அவன் உணர்ந்ததாகவும் தெரியவில்லை.

'அவளா? ...... யாற்ரா அவள்?...'-என்கிறான் பாலா.

'அவளா?...என்னடா கேக்கிறாய்?...நான் என்ன சொன்னன்?...' என்று பதறிய படியே பாலா கேட்கிறான்.

'சீச்சீ!...நீயா ஒண்டுமே சொல்லேல்லியே!...பாலா... நீ என்னிடமே ஒளிக்கிறியா? உண்மையைச் சொல்... யார்ரா...அவள்!...' —என்று உரிமையுடன் செல்லமாக மிரட்டுகிறான்.

'ராஜா!...... தயவு செய்து அதைப் பற்றிக் கேட்காதே!

பாலா!...என்னிலே உனக்கு நம்பிக்கை 'இல்லையா... இதுதானா உன் நட்பு...உன்னிடம் கேட்க எனக்கு உரிமை இல்லியா? என் புவனம் பற்றிய செய்தியெல்லாம் உன்னிடம் நான் ஏதாவது மறைத்ததுண்டா?... என்னை அன்னியனாக அதற்குள் ஆக்கிவிட்டாயே பாலா!... நீ உண்மையில் என் நண்பனெண்டா நீ சொல்லத்தான் வேண்டும்...என் நண்பனின் மனதைக் கவர்ந்தவளை நான் அறியக் கூடாதா?...

'ஐயோ, ராஜா!... உன்னை நண்பனாக...உயிர் நண்பனாகக் கருதுவதால்தான் நான் பயப்படுகிறேன் ...உண்மையைச் சொன்னால் எங்க நீ தவறாகப் புரிந்துவிடுவாயோ யென்றுதான் பயப்படுகிறன்!...'

ராஜா வாய் விட்டுச் சிரிக்கிறான். 'பாலா, உன்னைத் தவறாகப் புரிந்து கொள்வதா?...டேய் பாலா! உன்னை இனிமேல்தான் புரிய வேண்டுமெண்டில்லை...உன்னை நண்பனாகப் பெற்ற அன்றே உன்னைப் புரிந்து கொண்டேன்... அதனால்தான் உன்னிடம் இவ்வளவு அன்பு, பாசம் எல்லாம் வைத்திருக்கிறேன்...'

'டேய், பாலா!...என்னடா சொல்லுறாய்?...... உன் மேலுள்ள அன்பு குறைந்துவிடுமா?... குறையும் அன்பு கூடும் அன்பென்றெல்லாம் அன்பு பிரிபடுவதில்லையடா! அன்பு என்பது பிரேமையின் பூரணத்துவம் பெற்ற 'முழுமை'ப் பொருள்...அதிலெல்லாம் பிரிவினைகாட்டி அதனை மாசுபடுத்துவதெல்லாம் மனிதரின் அறிவீனமும், பொய் வேடமும்தான்...!'

'ராஜா!...'

'சொல் பாலா!...சொல்!... தயங்காதே!...உனக்கு...உன் காதலுக்கு என் உதவி தேவைப்பட்டால் என்னைக் கேள் ... தயங்காமல் ... என் உயிரைக் கொடுத்தாவது உன் காதலை நான் நிறைவேற்றி வைக்கப் பாடுபடுவேன் ... எனக்குப் போட்டியாக...உன் வெள்ளையுள்ளத்தைக் கவர்ந்த அவள் யாரடா?...'

'சரசு!...'

—பாலா தனது காதலியின் பெயரைச் சொல்லக் கேட்ட ராஜாவின் தலை ஒரு முறை சுழன்றாடுகிறது!...

* * *

இருவரும் நடந்துகொண்டிருக்கிறார்கள்... இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கத்திராணியற்று..

'ரஜா!..நான் வரட்டுமா?..' —பாலா கேட்கிறான். ராஜா நிமிர்ந்து பார்க்கிறான். நாவலர்வீதி சமீபித்துவிட்டது. பாலா விடை பெறுகிறான்...

'பாலா நீ என்னை சத்திய சோதனைக்கு ஆளாக்கி விட்டாயேடா!...நீ ஏண்டா சரசுவைக் காதலித்தாய்... அவள் உன்னை விரும்புறாளா என்று கூடத் தெரியாமல் ஏன் மனதைப் பறிகொடுத்தாய்!...சரசு என்னை விரும்புவதாக அண்ணன் என்னிடம் கூறி முழுதாக இருபத்திநாலு மணித்தியாலங்கள் கூட ஆகவில்லை...அதற்குள்.. நீ மற்றொரு இடியைப் போட்டு விட்டாயேடா?...'

ராஜா நடந்து கொண்டிருக்கிறான்...

'நானோ புவனத்தை விரும்ப...சரசு என்னை விரும்ப... நீ சரசுவை விரும்ப... பாலா!...நீ சரசுவை விரும்பினாலும் அவள் உன்னை விரும்பவேண்டுமே!... அதற்கு அண்ணன் அண்ணி சம்மதம் வேண்டுமே!...'

'பாலா நம் நட்புக்கு 'அக்கினிப் பரீட்சை'யா?...

ஆனைப்பந்தி கழிந்து, அத்தியடி சந்தி வந்து கொண்டிருக்கிறது!...

பாலா... பாலா... நான் கொண்டது... அழகு மயக்கமா?...நீ கொள்வது அழகு மயக்கமா?...சரசு என்மேல் கொண்டது......எல்லாமே அழகு மயக்கமா?...

காதலென்றே ஒன்றில்லையா?...

ராஜா தனது வீடு இருக்கும் வீதியில் காலடி வைக்கிறான்...

'பாலா, பாலா!...என்னடா செய்வேன்... உன் காதலுக்காக உயிரைக் கூடத் தருவேன் என்று சத்தியம்கூடப் பண்ணினேனே!..உன் காதல் பொய்த்து விட்டால் ...அதுவும் என்னால் ... வாழ வேண்டிய நீ... லட்சியக் கனவில் மிதக்கும் நீ...பாலா...பாலா நான் கையாலாகாதவனடா! உலகத்தை எதிர்த்துப் போராடச் சக்தியற்றவனடா, பாலா!... சக்தியற்றவன்!...'

—ராஜகோபால் வீட்டை நெருங்கி தெருப் படலையை திறக்கிறான். அங்கே, முற்றத்தில் அண்ணியுடன் கதைத்துக் கொண்டு நிற்பவள்—

'சரசு!...

இவளெங்கே இங்கு வந்தாள் என்ற சிந்தனையில் எத்தனையோ எண்ணங்கள் மனதிலே கடல் அலைகளாக புரள்கின்றன!

(தொடரும்)

# முற்போக்காளரின்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டை மீறிக் காடைத்தனத்துக்கும் ஆயத்தமாகி விடுவார்கள். இந்த நிலையை அன்று கருத்தரங்கத்தில் காண முடிந்தது.

திட்டமிட்டே வந்திருந்தது ஒரு கூட்டம் என்பதை வெகு சுலபமாக அறிய முடிந்தது. தங்கள் கொள்கை வலுவிழந்து போக நேரிட்டதைக் கண்டு பொறுமை இழந்து கூச்சலிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. கருத்தரங்கம் என்று நடக்கும் போது, அங்கே ஏற்படும் கருத்து மோதல்களின் எதிர்ப்பு—சார்பு ஆகிய இரண்டையும் சீர் தூக்கிப் பார்க்கவேண்டும். தங்களுக்கு ஆதரவு ஏற்படும் போது கரகோஷம் செய்யுமளவுக்கு எதிர்ப் பேச்சாளர் தொடுக்கும் சரங்களையும் புன்னகையுடன் தாங்கிக் கொள்ளும் பண்பு ரசிகர்களிடத்தில் தேவை. பொறுமையற்ற போக்குடையவர்கள், தங்களைத் தாங்களே கட்டுப்படுத்த முடியாதவர்கள் தயவுசெய்து இத்தகைய கருத்தரங்கங்களுக்குச் செல்லாதிருப்பது மிகவும் நல்லது.

முற்போக்குப் போர்வையின் மூடு திரை முரட்டுத்தனமானது—மிருகத்தனமானது என்பது அன்று கூடியிருந்த அனைவருக்கும் தெரிந்துவிட்டது.

இன்றைய எழுத்துலகில் ஆபாசம் புகுந்துவிட்டதைக் கண்டு எவரும் பயப்படத் தேவையில்லை. பண்டைய இலக்கியங்களில் இல்லாத ஆபாசம் எதையும் இன்று காண முடியாது என்று திரு. ஈழத்து இரத்தினம், பேசினார். முற்போக்கு பிற்போக்கு என்று எழுத்தாளர்கள் பட்டம் கட்டத் தேவையில்லை என்றும் இடித்துரைத்தார்.

கடைசியாகப் பேசிய திரு. பீட்டர்பிள்ளை 'தமிழ் மொழி வாழ்வில் எழுத்தாளர் கடமை' என்ற பொருளுக்கமையத் தமதுரையை கருத்துச் செறிவோடும், ஆராய்ச்சித் தெளிவோடும் நிகழ்த்தினார். மன்றச் செயலாளர் திரு. இ. சங்கரப்பிள்ளை நன்றியுரை கூறினார்.

இத்தகைய கருத்தரங்கங்கள், (காடைத்தனம் எதுவும் இடம் பெறாமல்) கண்ணியமுடன் நடைபெறுமானால் பயனளிக்கும் என்று கூறிவைக்க விரும்புகிறோம்.

# நமக்குள்ளே ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். எதையுமே படியாத இவைகள் இதையா படித்திருக்கப் போகின்றன?

விழாவிற்குப் போய், கூச்சலிட்டார்கள், கை தட்டினார்கள்; விசிலடிச்சார்கள். தங்களுடன் கூட்டிச் சென்ற 'அவிவேக பூரணனைச்' சான்றோர் அமர்ந்திருந்த மேடையிலும் ஏற்றி அவரின் மானத்தையும் வாங்கித் தங்கள் சாயத்தையும் கழற்றிவிட்டு மண்டபத்தை விட்டு வெளியேறினார்களாம். அவர்களை எதிர் பார்த்து யாழ்ப்பாணத்து சலூன் ஒன்றில் தவங்கிடந்த சிங்கப்பூரார், அவர்கள் வந்து சேர்ந்ததும், தன் விமர்சன பாணியில் அவர்களுக்கு ''பாராட்டு விழா'' நடத்தினாராம்!

சில நாட்களுக்கு முன் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கம் ஒன்றில் இது போன்ற ஒரு 'திட்டம்' நிறைவேற்றப்பட்டது. எந்தக் கூட்டத்திற்கோ, விழாவிற்கோ சிங்கப்பூரார் சென்றால் அதைப்பற்றி முன்னதாகவே தன் கைக் குருவிகளுக்கு அறிவித்து அவர்களையும் கூட்டிச் செல்பவர் என்பது நாடறிந்த உண்மை.

படித்த பண்பாளரும் தமிழறிஞருமான கருத்தரங்கத்தின் தலைவர், மொழியைப் பற்றிப் பேசும்போது இன்றைய அரசியல் நிலையையும் விளக்கினார். கைக் குருவிகளுக்குப் பொறுக்கவில்லை, தொடங்கிவிட்டார்கள் தங்கள் பரம்பரைத் தொழிலை. பிறகு, சிங்கப்பூரார் பேசினார். தலைவரின் கருத்தை மறுத்துரைத்தார். கையாட்கள் சபாஷ்! போட்டார்கள். எடுத்துக் கொண்ட விஷயத்தையும் விட்டு விட்டு, நான் முதலில் குறிப்பிட்ட தமிழ்ப்பண்டிதரையும் தாக்கு தாக்கென்று தாக்கினார். அதற்கும் 'அப்ளாஸ்'! கைக்குருவிகளிடமிருந்து!

காலத்திற்கேற்ற வகையில், எல்லோருக்கும் பிரயோசனம் உண்டாகும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட அந்தக் 'கருத்தரங்கத்'தையும் குழப்ப எத்தனித்தோம் என்ற மனத் திருப்தியுடன் வெளியேறினார்கள் இந்த ஆசாமிகளும் அவர்களை ஆட்டிப் படைக்கும் (படித்தவர்களும்)!

முற்போக்கு எழுத்தாளர்களுக்காக 'வக்கலாத்து' வாங்குபவர்கள் இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; இப்படிக் கீழ்த்தரமாக நடக்கும் அவர்களைப் பகிரங்கமாகக் கண்டிக்கவேண்டும். முற்போக்கு அணியிலுள்ள படித்தவர்களும் சரி, படியாதவர்களும் சரி, மிகக் கீழ்த்தரமான முறையில் நடந்து தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்கும் பின்னிற்க மாட்டார்கள். இத்தகையவர்கள் "கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட" கதையை பின்னர் எழுதுவேன்.

# வள்ளுவர் தினப் பேச்சுப் போட்டி

கோப்பாய் இருபாலை சைவ பரிபாலன சங்கத்தின் கொழும்புக்கிளை 6-6-63-ல் கோப்பாய் தெற்கு கற்பகப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் திருவள்ளுவர் தினப் பேச்சுப் போட்டி ஒன்றினை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்ச்சிக்கு திரு. பொ. தி. சம்பந்தன் தலைமை தாங்குவார். இப்பேச்சுப் போட்டியில் பங்கு பற்றுவோர் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்று மூன்று வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.




# எனக்கும் உனக்கும் என்ன பொருத்தம்?

—ச. க. செல்வநாயகம், மாதகல்—

"எனக்கும் உனக்கும் இசைந்த
பொருத்தம்
என்ன பொருத்தமோ
இந்தப் பொருத்தம் உலகில்
பிறக்கும்
எய்தும் பொருத்தமோ"

இது அருட்சுடர் இராமலிங்க சுவாமிகளின் வாக்கு. இதை ஒரு முறைக்கு இரு முறை, மும் முறை, பல முறை வாசித்துப்பாருங்கள். எத்தனையோ சாதனைகளால் கிட்டாத உள்ள நெகிழ்ச்சியும் இறைவனோடு உறவு கொண்டாடும் மனப்பண்பும் கிட்டுவதை அனுபவத்தில் உணரலாம். அவ்விரு அடிகளையுமே சொல்லச் சொல்ல அவையே தாரக மந்திரமாகி, எமது தாழ்மையையும், இறைவனது கருணையையும் மனதிற்குணர்த்தி, இறைவனை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, எம்மை ஆட் கொள்கின்றது.

இங்கே எனக்கு என்றது ஜீவாத்மா. உனக்கு என்றது பரமாத்மா. இறைவனை அன்பு செய்து இறைவனை அடைந்த பக்தர்களின் சரிதைகளைப் புரட்டிப் பார்த்தால் அவர்கள் ஏதோ ஓர் முறை கொண்டே ஆண்டவனை அன்பு செய்தனர். உலகில் இருவருக்குப் பொருத்தம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. சிலர் உடற் பொருத்தத்தால் ஒன்று படுவர். வேறு சிலர் மனப் பொருத்தத்தால் ஒன்று படுவர். இன்னொரு சாரார் ஆத்மீகப் பொருத்தத்தால் ஒன்று படுவர்.

வள்ளலார் இங்கு கூறிய பொருத்தம் நாலாவதாகக் கூறிய ஆத்மீக பொருத்தமே. மற்றைய பொருத்தங்கள் எல்லாம் இடையிலே அழிந்து நிலைமாறி உருத்திரிந்து போய் விடுவன. இப்பொருத்தம் அவனருளே கண்ணாகக் கொண்டு காண வேண்டும்.

உயிர்க்குயிரான ஆத்மாவை உணர்வதற்கு மனிதனுக்குப் பலவித சாதனைகள் வேண்டும். அவ்வித சாதனைகளையே நம் பெரியார் சரியை, கிரியை, யோகம், ஞானமென வகுத்துணர்த்திக் காட்டிச் சென்றனர். இச் சாதனைகள் வலுவடையும்போது 'நான்' 'எனது' என்பதற்குத் தானாய் நிற்கும் நிலை ஒன்றாய் வரும். அந்நிலை நின்றே வள்ளலார் "எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ" எனக் கேட்கிறார். அதற்கு உறுதியாக அடுத்த அடிகளில்,

"எனதுடலு முயிரும்—
பொருளும் நின்னதல்லவோ', என்கிறார். இந்த அடிகளைக் கொண்டே நாம் கற்றுக் கொள்ளவேண்டிய உண்மையும் ஒன்றுண்டு. உடலும் நான் அல்ல, மனமும் நான் அல்ல, உயிரும் நான் அல்ல, உயிர்க்குயிரான அந்த ஆத்மாவே நான். அதை உணர்ந்தாலே நாம் நம்மை உணர்ந்தவராவோம்.

# அறனை மறவேல்

—ஏ. ஜி. ஆனந்தன்—

ஔவை 'அறனை மறவேல்' என்கிறாள். அறத்திற்கு அவள் தரும் அவசியத்தை இது காட்டுகிறது. கல்வியை இளமையில் கற்ற போதும் அது போதாது என்கிறாள். கல்வியுடன் அறனும் சேர்ந்து கொண்டால்தான் அதிக பயன் கிட்டும் என்று அப்படிச் சொன்னாள்.

அறன் என்றால் தருமம் என்று அர்த்தம். தருமம் என்றால் தூய்மையான செயல் என்று பொருள். தூய்மையான செயல்கள் பல உண்டு. அவைகளைச் செய்ய ஒவ்வொரு நாளும் ஆயிரமாயிரம் தருணங்கள் வரும். அவைகளைப் பயன் படுத்தினால், எம்மை நாமே நல்லவர்களாக்கிக் கொள்வோம். பொய் சொல்லாமல் களவு எடுக்காமல், தீங்கு செய்யாமல், பெற்றோரைப் போற்றி, இறைவனை ஏற்றி வாழ்தலே தரும வாழ்க்கையாகும். இந்த வாழ்க்கை சிறுவர்களுக்கும் அவசியம். பெரியோர்களுக்கும் அவசியம்.

அறன் நிறைந்த வாழ்க்கை வாழ்வது எளிதென்று எண்ணக்கூடாது. அதற்கு வலிமை வேண்டும். தேக வலிமையும் வேண்டும். மன வலிமையும் வேண்டும். அற வாழ்வு வாழ விளையும் போது பல முட்டுக் கட்டைகள் முற்படும். போராட்டங்கள் தோன்றும். தோல்வியும் இடைஞ்சலுமே பெரும்பாலும் பரிசாகக் கிடைக்கும். இவைகளைக் கண்டு மலைத்து விடக்கூடாது. அறத்தின் வழி வாழ்பவன் தன் செய்கைக்கோ, நடத்தைக்கோ அல்லது எண்ணத்துக்கோ உடன் பலன் கிடைக்கும் என எதிர்பார்க்கக்கூடாது. அதிலும், சிறந்த பலன், ஏதுவான பலன் ஏற்படும் என எண்ணக்கூடாது. அப்படி எதிர்பார்த்தால் ஏமாற்றமே ஏற்படும். அப்படி எண்ணினால் எண்ணாதது நடந்து விடும். இது வாழ்க்கையின் நியதி. கடவுளின் சோதனை. மன வலி கொண்டவன் இதைக் கண்டு மலைக்கமாட்டான். முனைந்து முனைந்து ஈற்றில் வெற்றி காண்பான். மனவலி குன்றியவன் குறை கூறுவான். போராட முடியாது தயங்குவான். ஈற்றில் புறங்காட்டி ஓடிவிடுவான்.

வலிமை கொண்ட மனம் சிலருக்கு உண்டு. மிகச் சிலருக்கே உண்டு. வலி குறைந்த மனம் பலருக்கும் உண்டு. முந்தியவர் முனைந்து வாழ்வார்கள். வெற்றி காண்பார்கள். பிந்தியவர்களால் அது முடியாது. முனைந்து வாழ விருப்பம் இருக்கும். ஆனால் அப்படி வாழ முடிவதில்லை. அப்படி முடியாதவர்களுக்கே ஔவை 'மறவேல்' என்றாள். அற வாழ்வை அப்படியே வாழ முடியாவிடினும் அறத்தினை மறந்து விடாதே என்று சொல்லிவிட்டாள். மனத்தில் அறம் இருந்தால் மறம் வந்து மாய்த்துவிடாது என்று எண்ணினாள் போலும்!

# போலிகள்!

—முதல்வனூர்—

வண்ண நிறங்கொண்டவை யாவும்
வாச முள்ள மலரல்ல!
கண்ணைப் பறிக்கும் விதத்தினிலே
காண முடியும் இலைகளையே!

*

பழுத்த தெல்லாம் சுவையுள்ள
புசிக்கத் தகுந்த கனியல்ல!
வெளுத்த தெல்லாம் பாலென்று
விளம்ப யாரே முன்நிற்பார்?

★

'மின்னுவ தெல்லாம் பொன்னல்ல!'
முன்னோர் சொன்னது பொய்யல்ல!
மண்ணில் நல்லார் போர்வையிலே
புகுந்து கெடுக்கும் போலிகளே!

## அன்புள்ள மருமக்களே!

உங்களிற் பலர், அத்தாட்சிப் பத்திரம் வேண்டுமென எழுதியிருக்கிறீர்கள். எல்லோருக்கும் உடனே அனுப்ப வசதி இல்லை. ஆகவே, அவசரப்படாமல் பொறுத்திருங்கள். சிறிது காலத்தில், எல்லோருக்கும் அனுப்பி வைக்கிறேன்.

12—5—63 இதழில் செல்வன் ஐ. பாலன் எழுதியிருந்த "மாமி சுட்ட பலகாரம்" என்ற கவிதை, 17—1—1954ல் வீரகேசரியில் 'பாலர் கழக'த்தில் செல்வன் மு. க. சூரியனால் எழுதப் பெற்ற அதே கவிதை என மருமகள் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

எனது மருமக்களிடம் முதன் முதலாக நான் நேர்மையையே எதிர்பார்க்கிறேன். இத்தகைய தவறுகளைச் செய்து 'வளர்மதி' பகுதியை மாசுபடுத்த வேண்டாம் என மருமக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி ஒரு தவறு 'வளர்மதி'யில் நடந்தது இது தான் முதல் தடவை. இனிமேல் ஒருபோதும் இது மாதிரி நடைபெறாமல் இருக்க வேண்டுமென்பதே எனது அவா. உங்கள் உதவியும் அதற்கு மிக அவசியம்.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

# தமிழ் பேசும் இளைஞருக்கு ஓர் பேச்சுப் போட்டி

## அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும்

நடந்த இரு வாரங்களாக நாம் வெளியிட்டிருந்த அறிவித்தல் உங்கள் உள்ளங்களில் எத்தகைய எண்ணங்களையெல்லாம் எழுப்பியிருக்கும் என்பதை ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது. எனவே மீண்டும் உங்கள் இளம் உள்ளங்களுக்கு பரபரப்பை ஊட்ட நாம் விரும்பவில்லை.

நீங்கள் எதிர்பார்த்திருந்த அந்தத் தித்திப்பான செய்தி இதோ!

அகில இலங்கை ரீதியான ஒரு பேச்சுப் போட்டியை நடாதத உங்கள் 'சுதந்திரன்' விரும்புகிறான். தனது பதினேழாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பொழுது, தன் வயதை ஒத்த உங்களுக்கும், ஏதாவது புதுமையாகச் செய்ய வேண்டுமென்று 'சுதந்திரன்' விரும்புவது இயற்கையே.

இந்த இருபதாம் நூற்றாண்டில் பேச்சுக் கலை சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மேடைப் பேச்சாளராக வேண்டிய இன்றியமையாமை அன்று அறிஞர்களுக்கு மட்டும் இருந்தது. இன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும், முதலாளிகளுக்கும, தொழிலாளிகளுக்கும், சமய அன்பர்களுக்கும், பொது நலத் தொண்டர்களுக்கும் மேடைப் பேச்சு வேண்டிய ஒன்றாகிவிட்டது. எனவே அதற்கு வேண்டிய பயிற்சியை இளமையிலேயே ஏற்படுத்திக் கொள்வது நல்லது. அந்த நல்ல முயற்சிக்கு ஒரு பயிற்சிக் களமாக நாம் நடாத்தும் போட்டி அமையப்போகிறது.

இப்போட்டியில் தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட பத்தொன்பது வயதிற்குட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம். போட்டியில் கலந்து கொள்பவர்கள் சுதந்திரனில் வெளியாகும் விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து நமக்கு அனுப்ப வேண்டும்.

போட்டி மலை நாட்டில் இரு இடங்களிலும், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் இப்பகுதிகளுடன் ஏனைய இடங்களையும் சேர்த்து, எல்லாமாக எட்டுப் பிரிவுகளாக முதலில் நடைபெறும். இப்போட்டியில் தெரிவு செய்யப்படுவோர்களே இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

அவ்வப் பகுதிகளில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குத் தக்க பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் இறுதிப் போட்டியில் கலந்து வெற்றி பெறுபவர்கள் அனைவரும் தங்கப் பதக்கம் பெற வாய்ப்புடையவர்களாவர்.

* போட்டிக்குரிய தலைப்புகள்
* பரிசில் விபரங்கள்
* விதிகள்
* விண்ணப்பப்பத்திரம்
* இதர விபரங்கள்

இவை அடுத்த இதழில் இடம்பெறும்.

[இப்போட்டியில் பங்குபற்றுவோர் 'வளர்மதி' அங்கத்தவராக இருக்க வேண்டுமென்ற நியதி இல்லை.]

# உங்களுடன்... ...ஒரு வார்த்தை

செல்வன் எம். பாலகுமார்: நீர் உமது கட்டுரையை தாளின் இரு பக்கங்களிலும் எழுதியிருக்கிறீர். ஒரு பக்கத்தில் எழுதி வரும் கட்டுரைகளே பரிசீலனைக்கு எடுக்கப்படும். ஆகவே, தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி அனுப்புவீரானால் நல்லது.

செல்வன் 'ஆடலிறை': 'வளர்மதி'யில் இடம் பெறாத கட்டுரையோ கவிதையோ, குப்பைத் தொட்டித்தரம் வாய்ந்ததாகக் கணிக்கப்படுவதில்லை. அப்படி நீர் எணித்திருப்பது, உமது திறமைக்கே சவால் விடுவதாகும்.

செல்வர்கள் ஜே. எம். அன்வர், எஸ். பி. சுப்பையா, ஜி. இராமு— உங்களுடைய அத்தாட்சிப் பத்திரங்கள் உங்கள் கல்லூரி விலாசத்துக்கு எப்பொழுதோ அனுப்பப்பட்டுவிட்டன. அங்கு விசாரித்துப் பார்க்கவும்.

# வீதி திருத்திய மக்கள்

தம்பலகமத்திலிருந்து செல்வி. இ. இந்திராணி பின் வரும் கடிதத்தை எழுதியுள்ளார்:

அன்புள்ள வளர்மதி மாமாவுக்கு, வணக்கம். தம்பலகம வாழ் பெருமக்கள் தங்கள் வீதியைத் தாங்களே மண்சுமந்து திருத்தினர். அரசினரின் பொது வேலைப்பகுதி செப்பனிட வேண்டிய வீதியை, சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக கவனிப்பாரற்று விட்ட காரணத்தால், இ. போ. ச. தமது பஸ்களை அதன் வழியாகச் செலுத்த மறுத்தனர். இதனால், வயோதிபர், கர்ப்பிணிகள், நோயாளிகள், கல்லூரி மாணவர் பலரும் கஷ்டத்துக்குள்ளாகினர்.

அரசினர் கவனிப்பர் எனப் பொறுத்திருந்த மக்கள், பொங்கியெழுந்தனர். வீதியைச் செப்பனிட தாமே முன்வந்தனர். திருகோணமலைத் தமிழரசுக் கட்சிக் கிளை, தம்பலகம கட்சிக் கிளை உறுப்பினர்கள், செப்பனிடும் பணியை முன்னின்று நடாத்தினர்.

தம்பலகமம் வாழ் மக்களின் தொண்டு மற்றும் கிராமங்களுக்கும், அங்கு வாழும் மக்களுக்கும் ஓர் நல்ல முன்மாதிரியாகத் திகழும் என நம்புகிறேன்.

# அரசாங்க ஊழியர்களின் வட-கீழ் மாகாண இடமாற்றம்

## திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அ.எ.வி.ச. பொதுச்செயலாளர் கடிதம்

வட, கீழ் மாகாணங்களிலிருந்து சிங்களத்தில் தேர்ச்சி பெருமைக்காக வெளியிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவது சம்பந்தமாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் மார்ச் மாதம் 14ம் திகதி திறைசேரிக்கு எழுதிய கடிதத்திற்கு, திறைசேரிப் பிரதிச் செயலாளர் மே 14ம் திகதி அனுப்பிய பதிலில், இவர்களின் கோரிக்கையைப் புரிந்துகொள்ளாமல் பதில் அனுப்பியுள்ளதாகக் கூறி 20ம் திகதி அ. எ. ச. பொதுச் செயலாளர் திரும்பவும் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

வட, கீழ் மாகாணங்களிலிருந்து சிங்களத்தில் தேர்ச்சி பெருமைக்காக வெளியிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட உறுப்பினர் சார்பில் சங்கத்தின் 1963 மார்ச் 14ந் திகதிய அஞ்சலில் எடுத்துரைக்கப்பட்ட விடயங்கள் தவருன முறையில் பொருள் கொள்ளப்பட்டுள்ளன அல்லது சரியான நோக்குடன் ஆராயப்படவில்லை என்பதைச் சங்கம் வருத்தத்துடன் சுட்டிக் காட்டுகிறது. எனவே, இது விடயத்தில் கையாளப்பட்ட நடவடிக்கை சரியெனச்சாதிக்கும் முயற்சியில், இவ் ஊழியர் 1961 லிருந்து இற்றை வரைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெறத் 'தவறியமை'க்கு அநியாயமான முறையில் ஒரு தீர்ப்பு வழங்கவும் முனைந்துள்ளீர்கள்.

எமது உறுப்பினர்கள் மொழிச் சட்டத்தின் கீழ் இந்த இடர்பாடுகளுக்கு உள்ளாக்கப்படுவது இப்பொழுது மட்டுமல்ல வென்பதும் இது அரசகரும மொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்தே நடைபெறுகிறதென்பதும் எமது கருத்தாகும். காலஞ்சென்ற பிரதமரின் பிரேரணைகள் சங்கத்தால் முழுதாக ஏற்றுக்கொள்ளக்கூடியனயவல்ல. எனினும் அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளிலிருந்து பழைய சேவையாளருக்கு விலக்களிக்க வேண்டுமென்பது அவரின் முடிவான கருத்தாயிருந்தது மறுக்க முடியாததாகும். இத்தொடர்பில் பழைய சேவையாளர் மீது, ஊதிய உயர்வு இழப்பு, பதவி உயர்வு இழப்பு போன்ற கட்டாயங்களின் பேரில் விதிக்கப்படும் புதிய சிங்களத்தேர்ச்சி நிபந்தனை, மொழிச் சட்டத்தின் சிற்பியின் நோக்கங்களுக்கே முரணுகும். காலஞ்சென்ற பிரதமர், அரசகரும மொழிச் சட்ட விடயத்தில், பழைய சேவையாளரின் நலவுரிமைகளைப் பாதுகாத்தற்குத் தகுந்த காரணங்களைக் கருத்திற் கொண்டிருந்தாராயினும், வெளிப்படையாக, அவரின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொள்ளும் அவரது வழித் தோன்றல்கள், அவரின் உறுதி மொழிகளையும் வாக்குகளையும் முற்றும் புறக்கணித்து விட்டார்கள்.

சங்கத்தின் எந்த உறுப்பினர்கள் சார்பில் மேற்படி இடமாற்றம் பற்றிய விடயங்கள் எடுத்துச் சொல்லப்பட்டதோ, அந்த உறுப்பினர்கள் தங்கள் சேவைகளில் ஒரு பகுதியாக இன்னமும் இருந்தும் வருகிறார்களென்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதொன்று. எனவே தொடர்ந்து சேவையிலிருக்கும் வரை அவர்களும் தமது நலவுரிமைகளை அரசாங்கம் பாதுகாக்க வேண்டுமென எதிர்பார்க்க வேண்டியதாகின்றது. மொழிச் சட்ட அமுலால் ஏற்கெனவே பல இடர்களுக்குள்ளாகியிருக்கும் எமது உறுப்பினர்கள், பாரபட்சமான ஒரு சட்டத்தின் கடுமையான அமுலால் தமக்கு ஏற்படும் இடர்களை நீக்க வேண்டுவது அரசாங்கத்தின் கடனென எதிர்பார்ப்பது முற்றும் சரியே.

தனது 20-3-63. திருபத்தில், மேற்படி இடமாற்றங்களை ஆண்டு இறுதி வரை திருத்தி வைக்கும்படியான கோரிக்கையை விடுக்கையில், தம்மை மட்டுமல்லாது தமது பிற் சந்ததியினரையும் பாதிக்கும் ஒரு கொள்கை பற்றி இந்த ஊழியர்கள் கொண்டுள்ள கருத்துக்காக அவர்கள் சார்பில் மன்னிப்புக் கோரக் கருதவில்லையென்பதைச் சங்கம் வலியுறுத்த விரும்புகிறது.

எனவே, வழி வழியாக அதிகாரத்திலிருந்த அரசாங்கங்களுக்குத் தனது நீண்ட சேவைக் காலத்தில் சிறப்புறப் பணியாற்றி வந்த இந்த ஊழியர்களுக்கு வேண்டாத இடர்களைத் தவிர்த்தற்காக, நிருவாக நீதி சமத்துவம் ஆகிய அடிப்படையில் இவ் விடயத்தை அரசாங்கம் மீண்டும் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டுமெனச் சங்கம் திரும்பவும் கேட்டுக் கொள்கிறது.

### முத்தமிழ் விழா

யாழ் கலை அரங்கத்தினர் தமது மூன்ருவது ஆண்டு நிறைவினை கொண்டாடும் முகமாக, ஒரு முத்தமிழ் விழாவினை கொழும்பு விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் 2-6-63 ஞாயிறு மாலை நடாத்த விருக்கிருர்கள்.

திருவாளர்கள் வ. ந. நவரத்தினம் பா. உ., பூபதிதாசர், ஈழத்து இரத்தினம், ஏ. இளஞ்செழியன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். திருமதி கிரிஜா சுப்பிரமணியத்தின் இன்னிசைக் கச்சேரியும் செல்வி இராமநாதன் மணிமேகலை, விவேகானந்த நடனமன்ற மாணவிகள், செல்வி சித்திரா சிவநாயகம், செல்வி கலாராணி நடராஜா ஆகியோரின் நடனமும், 'அன்புமணியின்' 'ஆத்ம திருப்தி' 'ஏபிசியின்' 'மணியகாரன் மகன்' ஆகிய நாடகங்களும் இடம் பெறும்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் விழா நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### தொல்புரம் இளைஞர் விவசாயக் கழகம்

#### வருடாந்தப் பொதுக் கூட்டம்

தொல்புரம் இளைஞர் விவசாயக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தொல்புரம் மத்திய சன சமூக நிலைய வாசிகசாலை மண்டபத்தில் 13-5-63 திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் தொல்புரம் உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. அ. குமாரசாமி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தலைவர் இளைஞர் சங்கமும், அதன் கடமைகள் பற்றியும் பேசினர். பின் சங்க உப செயலாளர் திரு. ச. கந்தையா 'இளைஞரும், சமுதாயமும்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்தினர்.

புதுவருட நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் பின் வருமாறு:

போஷகர்கள்: திரு. அ. குமாரசாமி (உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்) திரு. மு. நமசிவாயம் ஆசிரியர், திரு. கோ. கிருஷ்ணர் ஆசிரியர், திரு. ந. குமாரசாமி (கௌரவ செயலாளர், தொல்புரம் கிராம முன்னேற்றச் சங்கம்) தலைவர்: திரு சி. வரதராசா (காரியதரிசி, தொல்புரம் மத்திய சன சமூக நிலையம்) உப தலைவர்: திரு. மு. குமாரவேலுப்பிள்ளை, கௌரவ காரியதரிசி, திரு. ச. கந்தையா, கௌரவ உப காரியதரிசி: திரு. ச. வேலையா, கௌரவ தனாதிகாரி: திரு. கி. தெய்வேந்திரம்.

நிர்வாக சபை உறுப்பினர்:— திரு. சி. இராசரத்தினம், திரு. அ. சுகதேவன், திரு. சி. கிருஷ்ணர், திரு. ச. இராசரத்தினம், திரு. சொ. கோவித்தர், திரு. மு. கிருஷ்ணமூர்த்தி.

ஈற்றில் தலைவர் முடிவுரையுடனும், செயலாளர் நன்றியுரையுடனும் கூட்டம் இனிது முடிந்தது.

# அறப்போர் அணியின் அவசரக் கூட்டம்

## புறக்கணிப்புப் பற்றி ஆராய்ந்தது

பொத்துவில் நிந்தவூர் கல்முனை தொகுதிகளை உள்ளடக்கித் திருக்கோயிலில் பல வருட காலமாய் இயங்கி வரும் அறப்போரணியின் செயற்குழுக் கூட்டம், அணித் தளத்தில் 21-5-63ல் நடைபெற்றது.

எண்பத்து நான்கு தொண்டர்கள் ஒப்பமிட்ட மனுவொன்றைக் கூட்டத்திற் சமர்ப்பித்தனர்.

மனுவின் விபரம்:— சுமார் ஆறு வருடங்களுக்கு மேலாக காந்திய வழிகளைப் பின்பற்றி இயங்கி வரும் அறப் போரணி மட்டக்களப்பு மாவட்டத்தில் காந்திஜியின் போதனைகளைச் சாதனையில் கடைப்பிடித்து வரும் பெரிய இயக்கமாகும். பல நூற்றுக்கணக்கான இயக்கும் அங்கத்தினர்களை உடைய இந்த இயக்கம் மட்டக்களப்பில் நடைபெற்ற அனேக நிகழ்ச்சிகளில் நேர் பங்கு பெற்று வந்துள்ளது. ஆனல் சமீபத்தில் நடைபெற்ற காந்தி சிலை திறப்பு விழாவில் நாங்கள் பங்கு பற்ற சந்தர்ப்பம் தரப்படாதது ஏமாற்ற மளிக்கிறது.

மட்டக்களப்பு முதற் பிரதிநிதி முன்னின்று நடாத்திய இந்த விழாவில் ஒரு சந்தர்ப்பம் எமக்குத் தரப்படாது விட்டது, தற்செயலாக ஏற்பட்ட தவறுதலாக இருக்க முடியாது. எடுத்ததற்கெல்லாம் எங்களை மட்டக்களப்புக்கு இழுத்தடித்த அணித் தலைவர் ஏனோதானோ என்றிருப்பது ஆச்சரியமாய் இருக்கிறது.

அறப்போரணித் தலைவர் திரு. ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம் இதற்குப்பதில் அளித்துப் பேசுகையில் கூறியதாவது:— "காந்தி சிலை திறப்பு விழாவில்" நாம் புறக்கணிக்கப்பட்டதற்கு உங்களைப் போல் நானும் வேதனையடைகிறேன். காந்திய வழியைக் கடைப்பிடிக்கும் நாம் வெறும் வெளிப் பகட்டில் ஏமாந்துவிடக் கூடாது. தொடர்ந்து நம் பணியைச் செய்து வருவோம். இன்று புறக்கணித்தவர்கள் நாளை நம்மை அரவணைக்கக் கூடும். காந்தியின் பெயரால் சிலை அமைத்து விழாவெடுப்பதிலும் காந்திய வழியைச் செயல்படுத்துவது அதிக பங்கு மேலானது. ஆகவே புறக்கணிப்பையிட்டு மனக் கொதிப்புக் கொள்ளாது தொடர்ந்து உங்கள் பணியைச் செய்து வாருங்கள்.

# இலக்கியப் பற்று...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை மனதில் வைத்துக் கொண்டு நமது விமர்சகர்கள் அரைகுறையாகச் சொல்லும்போது இவர்கள் திருப்பி அடிக்கிருர்கள், எந்த இலக்கியத்தில், எந்த எழுத்தானது படைப்பில் அரசியல், பிரச்சார வாடை வீசவில்லையென்று! நமது விமர்சகர்களும் இக் கூற்றுக் கண்டு 'வெல வெல'த்துப் போய் விடுகிருர்கள். இலக்கியம் எதற்காவது பயன் படட்டும். நமக்குக் கவலையில்லை! ஆனல் சர்வ தேசிய ரீதியாக ஒரு பயங்கர சர்வாதிகார உலகிற்கு மனித வர்க்கம் அழைத்துச் செல்லப் படுதற்கு 'இலக்கியம்' கருவியாக முடியாது. கருவியாக விடக் கூடாது! கருவியாகும் போது அது இலக்கியமாகாது! ஒரு உதாரணம்! அரசியல் ரீதியாகப் பார்த்தால், நமது நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களது படைப்பையும் எடுத்து ஆராய்ந்தால் உண்மை புலனுகும். சிங்களத்தில் எழுதினுலென்ன, தமிழில் எழுதினுலென்ன மார்க்ஸீய சித்தாந்த ரீதியில் எழுதுபவர்களும், அதலல்லாத வகையில் எழுதுகிற, தம்முள் வேறுபட்ட கட்சிக்காரர்களும் இரண்டேயிரண்டு அணியில் மாத்திரம் நிற்பதைக் காண முடியும். ஒன்று மார்க்ஸீய அணி. மற்றது அல்லாத அணி. இதிலிருந்து தெரிவது என்ன? சர்வ தேசிய ரீதியாகச் சர்வாதிகார வெறி பிடித்த அரசியற் கொள்கையின் தத்துவப் பிள்ளைகள தாம் இந்த முற்போக்கு எழுத்தாளர் என்பதுதானே!

எந்த நாட்டிலும் அரசியல் ரீதியாக மார்க்ஸீய சித்தாந்தம் வேரூன்ற அதிக கால மெடுக்கின்றது. அதுவும் புராதன சமய, கலாச்சார, இலககிய வளம் மிக்க இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில், கம்யூனிஸம் சரியாகக் 'கால் பாவவே' முடியாத நிலையில் திண்டாடுகிறது. எனவே 'வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல்' நமது இலக்கிய, சமயப் பாரம்பரியத்தை ஏத்துவது போலவே அவற்றின் துணைக் கொண்டு, அவற்றிலேயே கம்யூனிஸ சித்தாந்தங்களைக் 'குடியேற்றுவதை' நமது முற்போக்கு இலக்கிய நண்பர்கள் முதற்பணியாகக் கொண்டுள்ளார்கள்.

ஆறுமுக நாவலரையும், விபுலானந்தரையும், சோமசுந்தரப் புலவரையும், ஏன் 'யாழ்ப்பாணத்து சாமி'யையுங்கூடப் போற்றுவதன் உண்மையான காரணம் இதுவே. மனச்சாட்சியுள்ள எந்த முற்போக்கு எழுத்தாளனும் இதனை மறுக்கத் துணியான். துணிபவன் உண்மையில் உணமையான 'முற்போக்கு எழுத்தாளனுக' முடியாது!

### 'நடுநிலை' எழுத்தாளர்

சர்வதேசிய இலக்கிய வரலாற்றின் 'அரிசசுவடி' அறியாதவர்களுக்கு இந்த மலை போன்ற உண்மை புலனுகாது. பாவம் அவர்கள் தேசிய உணர்ச்சி, வர்க்கப் போராட்டம், பிரதேச வழக்கு, மக்கள் இலக்கியம், என்ற வார்த்தை ஜாலங்களுக்கே தங்கள் 'அறிவைப்' பலிகொடுத்து விடுவதுடன் திருப்தியடைந்து விடுகிருர்கள்! இந் நிலையிலுள்ள 'நடுநிலை' எழுத்தாளர்கள் தொகை நமது நாட்டில் உண்மையான எழுத்தாளர்களுக்கு மகத்தான தீங்கு செய்வதில் மறக்க முடியாத அங்கம் வகிக்கிருர்கள்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் முற்போக்காளர்கள் நடத்திய மாநாட்டில் பிரதம பேச்சாளர்களாக அழைக்கப்பட்டவர்கள் உண்மையில் சிறந்த அறிஞர்கள் தாம். ஆனல் இவர்களனைவரும் ஏகோபித்துக் கூறிய உண்மை இதுதான். இலக்கியத்தில் முற்போக்கு பிற்போக்கு என்ற 'பிரிவினை' இல்லவே இல்லை என்பது தான். திரு. சு. நடேசபிள்ளை இன்னும் ஒரு படி மேலே போய் 'நற்போக்கு' இலக்கியங்களே நமக்குத் தேவை' என ஆணித்தரமாகப் பேசியுள்ளார். 'முற்போக்கு இலக்கியம்' என்ற சொல்லே 'அருவருப்பைத் தருவதாக' ஒரு பேராசிரியர் பேசினுராம்! இவர்களது கூற்றுக்கள் உணர்த்தும் உண்மை என்ன? முற்போக்கு நண்பர்களுக்கு 'தலைவலி' தரும் கசப்பான உண்மைகளைப் புலப்படுத்திய இவர்களுக்கு நாம் என்றும் நன்றி பாராட்ட வேண்டும்.

முற்போக்கு இலக்கிய நண்பர்களின் 'ஆதர்ச வழி காட்டியான' விமர்சகர் திரு. கைலாசபதி இது கண்டு 'மனம் வெதும்பித்' தான். மாநாட்டில் பேசும் போது முற்போக்கு இலக்கியம் என்ருல் என்ன என்று பலருக்குச் சரியாகத் தெரியவில்லை (உண்மைதான்!) என்று விருந்தினராக வந்தவர்களையே விழுத்திப் பேசியிருக்கிருர். பரிதாபமான நிலை. எப்படியோ பிரசாரம் பண்ணி எப்படியோ கூட்டி வைத்த மக்கள் முன் 'இவர்களது உண்மை நிலை'யை நிர்வாணமாக்கிக் காட்டிவிட்டால் ஆத்திரம் வராதா? இலக்கியப் பற்றுள்ள மக்கள் இனியாவது உண்மையை உணரவேண்டும்.

இந்த நாட்டிலேயுள்ள முற்போக்கு எழுத்தாளர்கள் சர்வ தேசியக் கம்யூனிஸத்தின் அடிமைகள். அவர்களால் இலக்கியம் படைக்க முடியாது. 'எஜமான்' ஆட்டி வைக்க இயங்கும் 'மந்தைகள்'. இவர்களைச் சிலர் நம்புவதும், நம்புவதாகப் பாவனை செய்வதும் தான் மக்கள் உண்மை நிலையை உணர முடியாமற் செய்கிறது. அந்தச் சிலரும் யார் என்று தெரிந்து கொண்டால் இப்போதைக்கு போதுமென எண்ணுகிறேன்.

மொழியின் பாரம்பரிய வளத்திற் ருேய்ந்து, இன்றைய நிலையினை உள்ளபடி கண்டு, நாளைய நிலைக்கு வழி நடத்தும் நற்போக்கு இலக்கியங்களைப் படைக்கும் வலிவற்ற பலர் நமது நாட்டில் எழுத்தாளர்களாகக் காட்டிக்கொள்ளப் பெரிதும் ஏங்குகிருர்கள்! ஏடுகிடையாத எழுத்தாளர்களும் மேடை காணுத மேதைகளும் முற்போக்கு இலக்கிய நண்பர்களின் ஓவ்வாத காதலில் தமது இச்சையைப் பூர்த்தி செயவதாக நம்புகிருர்கள். அதன் பயனே தெருவெங்கும தமிழ் முழக்கம் செய்யும் வசதியை முற்போக்கு இலக்கியக் காரர்களுக்குத் தருகிறது.

['சிருஷ்டி இலக்கியத்தில் சில பிரச்சினைகள்' பற்றி அடுத்த கட்டுரை ஆராயும்]

### தாய் மொழி

ஜீத்தியத்தையும் அகிம்சையையும், பறி கொடுத்து விட்டு, அதனல் வரும் சுயராச்சியத்தை நான எவ்வாறு ஏற்றுக் கொள்ள மாட்டேனே, அது போலத் தாய் மொழியைப் புறக்கணித்துவிட்டு வரும் சுயராச்சியத்தையும் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

—மகாத்மா காந்தி

## 2-வது வெற்றி வாரம்!

எல்பின்ஸ்டன் [மருதானை] ரொக்ஸி [வெள்ளவத்தை] வின்சர் [யாழ்ப்பாணம்]
நெல்சன் [திருகோணமலை] இம்பீரியல் [மட்டக்களப்பு] வேல்ஸ் [கண்டி]
அசோகமாலா [நீர்கொழும்பு] கிங்ஸ் [பதுளை] ரீகல் [கம்பளை]
ஆகிய திரைகளில்

# மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்



ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி,
எம். ஆர். ராதா, கண்ணாம்பா, நாகையா
நடித்தது

இசை: ஆதிநாராயணராவ்

★ மந்திர ஜாலம்
★ இனிய பாடல்கள்
★ நடனங்கள் நிறைந்த சித்திரம்!

## 4-வது வெற்றி மாதம்!

கொட்டிடி. திரையில்

ஜெமினி கணேசன்—சாவித்திரி—அசோகன்
சந்திரபாபு—எம். ஆர். ராதா—விஜயகுமாரி
எஸ். வி. சுப்பையா—ராஜம்மா—கமலஹாசன்

நடித்த

# பாத காணிக்கை

## மகத்தான 3வது வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

அஞ்சலிதேவி, மனோகர்,
நரசிம்மபாரதி, மாதுரிதேவி,
காலஞ் சென்ற கலைவாணர்
என். எஸ். கிருஷ்ணன்,

நடித்த

# தோழன்



175 நாட்களுக்குமேல் ஓடிய, இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற, ஓரே ஒரு தமிழ்ப் படம்.

இலங்கையில் **50** நாட்கள் ஓடிவிட்டது

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்)
மற்றும் 7 திரைகளில்

ஸ்ரீதரின்

# நெஞ்சில் ஓர் ஆலயம்

● காதலுக்கும் கடமைக்கும் இடையில் ஏற்படும் மோதல்.
● குறைந்த காலத்தில் சிறப்புடன் தயாராகித் தென்னகத் திரைவானில் தனிக்கொடி நாட்டியது.



வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

ஸ்ரீதரின்

சுமைதாங்கி
சுமைதாங்கி
சுமைதாங்கி
சுமைதாங்கி
சுமைதாங்கி

சு
மை
தா
ங்
கி


சென்னையில் நான்கு படமாளிகைகளில் 100-வது நாள் விழா கொண்டாடிய சிறந்த திரைச் சித்திரம்!

# 6-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் 6 திரைகளில்

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

# ஆலயமணி



★ சிவாஜி கணேசன்
★ பி. சரோஜாதேவி
★ எஸ். எஸ். ராஜேந்திரன்
★ ஆர். விஜயகுமாரி
★ எம். ஆர். ராதா
★ பி. எஸ். வீரப்பா
மற்றும் பலர்

இசை:
விஸ்வநாதன்—ராமமூர்த்தி

டைரக்ஷன்:
கே. சங்கர்

உள்ளத்தைத் தொடும் உருக்கமான குடும்பப் படம்

உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்

சிவாஜியின் சிரிய நடிப்பைக் காட்டும் சித்திரம்

பார்க்கப் பார்க்க நவரசம் ததும்பும் நல்ல கதை!

**இன்றே பாருங்கள்!**

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஜூன் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.